நெ. து. சுந்தரவடிவேலு

# கல்வி வள்ளல் காமராசர்

4784

ல் வெளியீடு
PEARL PUBLICATIONS

# கல்வி வள்ளல்

# காமராசர்

LIBRARY

நெ. து. சுந்தரவடிவேலு
முன்னாள் துணை வேந்தர்
சென்னைப் பல்கலைக்கழகம்.

பேர்ல் வெளியீடு
136 அண்ணா சாலை சென்னை-600 002

# KALVI VALLAL KAMARASAR

## N. D. SUNDARAVADIVELU

Distributors:

RUBY BOOK SELLERS
136 Anna Salai Madras-600 002

© நெ. து. சுந்தரவடிவேலு

முதற் பதிப்பு: தலைவருள் மாணிக்கம், 1975
திருத்திய பதிப்பு: கல்வி வள்ளல் காமராசர், 1982

விலை : ரூ. 8-25

SENTAMIL COLLEGE LIBRARY, MADURAI

அச்சிட்டோர் : தி டார்வின் பிரிண்டிங் ஒர்க்ஸ்
3 வேனல்ஸ் சாலை சென்னை-600 008

வெளியிட்டோர் : M. D. கோபாலகிருஷ்ணன்
பெர்ல் வெளியீடு
136 அண்ணாசாலை சென்னை-600 002

## உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1 | தலைவராக உயர்ந்த தொண்டர் | 1 |
| 2 | முதல் சந்திப்பு | 15 |
| 3 | சிந்தனைத் தெளிவு | 22 |
| 4 | உரிமை தந்தவர் | 26 |
| 5 | மாற்றுக் கட்சிகளையும் மதித்தவர் | 29 |
| 6 | விதை முளைத்தது | 32 |
| 7 | திட்டம் உருவாயிற்று | 37 |
| 8 | முதற்கோணல் | 39 |
| 9 | இரண்டாம் இடக்கு | 43 |
| 10 | முடிந்த முடிவு/நிலை தெரிந்தது | 46 |
| 11 | மாலை குவிந்தது | 53 |
| 12 | முடுக்கி விட்டார் | 57 |
| 13 | மதிய உணவுத் தொடக்கம் | 60 |
| 14 | கல்விப் பெருக்கு | 68 |
| 15 | பள்ளிச் சீரமைப்பு இயக்கம் | 75 |
| 16 | மூன்று நன்மைத் திட்டம் | 80 |
| 17 | வேலை நிறுத்தம்-காமராசரின் திட்டம் | 84 |
| 18 | அழுக்காறிலாத செம்மல் | 91 |
| 19 | உரிமை பறிக்காத உத்தமர் | 97 |
| 20 | உரிமை மலை | 114 |
| 21 | தவற்றை நீக்கத் தயங்காதவர் | 119 |

| | | |
|---|---|---|
| 22 | மக்கள் நிலை அறிந்த தலைவர் | 122 |
| 23 | பிறர் கருத்தை மதித்த பண்பாளர் | 125 |
| 24 | தொண்டரைக் காத்த தலைவர் | I29 |
| 25 | துயர் கண்டு துடித்தவர் | 142 |
| 26 | தெளிந்த காட்சியர் | 145 |
| 27 | கடுமையான பத்தியம் | 147 |
| 28 | அறத்தினைக் காத்த சான்றோர் | 152 |
| 29 | பார் புகழ் பெற்ற தலைவர் | 156 |
| 30 | புகழ் வேண்டாதவர் | 160 |
| 31 | செருக்கற்ற சீலர் | 163 |
| 32 | இமயம் சாய்ந்தது | 166 |

# முன்னுரை

உலகில் கோடி கோடி மக்கள் இருக்கிறார்கள்; இறக்கிறார்கள். அவர்களைப்பற்றி உலகத்தில் சொல்லுவதற்கு ஒன்றுமிராது.

பலகோடியில் ஒருவரே பிறக்கிறார்! வாழ்கிறார்; வாழ்விக்கிறார்; மறைகிறார்; ஆயினும் உலகத்தார் உள்ளத்தில் எல்லாம் நிறைந்து நிற்கிறார்.

அத்தகைய பெரியவர் ஒருவர் நம்மோடு வாழ்ந்தார்; நமக்காக வாழ்ந்தார்; நம்மை வாழ்விக்க படாத பாடுபட்டார். அய்ம்பத்தைந்து ஆண்டு காலம், பகல் என்றும் இரவென்றும் பாராமல், பட்டி தொட்டியெல்லாம் வலம் வந்தார்; நாட்டுப்பற்றை ஊட்டினார்; உண்மையைக் காட்டினார்; சொன்னபடி வாழ்ந்து காட்டினார். அந்தப் பெரியவர் யார்?

அவர்தான் உழைப்பால் உயர்ந்த பெருந்தலைவர், காமராசர். அவரளவு உயர்ந்தவர் ஒரு சிலரே. உயர்ந்த இலட்சியம், தெளிந்த சிந்தனை, நேரிய பாதை, எதற்கும் யார்க்கும் அஞ்சாத உறுதி, சபலங்களில் சிக்காத நீண்ட பொதுத் தொண்டு ஆகியவற்றின் திருவுருவமாக வாழ்ந்தார், கர்மவீரர் காமராசர்.

காமராசரின் இளமைப்பருவ சூழ்நிலை சாதகமாக இல்லை; பாதகமாகவே இருந்தது. பிறந்த ஊரோ அன்று விருதுப்பட்டி; நகரமல்ல. சமுதாயக் கொடுமையோ சொல்லொணாதது. அடிமை இந்தியாவிலே, சாதாரண குடும்பத்தில், அன்னை

| | | |
|---|---|---|
| 22 | மக்கள் நிலை அறிந்த தலைவர் | 122 |
| 23 | பிறர் கருத்தை மதித்த பண்பாளர் | 125 |
| 24 | தொண்டரைக் காத்த தலைவர் | I29 |
| 25 | துயர் கண்டு துடித்தவர் | 142 |
| 26 | தெளிந்த காட்சியர் | 145 |
| 27 | கடுமையான பத்தியம் | 147 |
| 28 | அறத்தினைக் காத்த சான்றோர் | 152 |
| 29 | பார் புகழ் பெற்ற தலைவர் | 156 |
| 30 | புகழ் வேண்டாதவர் | 160 |
| 31 | செருக்கற்ற சீலர் | 163 |
| 32 | இமயம் சாய்ந்தது | 166 |

# முன்னுரை

உலகில் கோடி கோடி மக்கள் இருக்கிறார்கள்; இறக்கிறார்கள். அவர்களைப்பற்றி உலகத்தில் சொல்லுவதற்கு ஒன்றுமிராது.

பலகோடியில் ஒருவரே பிறக்கிறார்! வாழ்கிறார்; வாழ்விக்கிறார்; மறைகிறார்; ஆயினும் உலகத்தார் உள்ளத்தில் எல்லாம் நிறைந்து நிற்கிறார்.

அத்தகைய பெரியவர் ஒருவர் நம்மோடு வாழ்ந்தார்; நமக்காக வாழ்ந்தார்; நம்மை வாழ்விக்க படாத பாடுபட்டார். அய்ம்பத்தைந்து ஆண்டு காலம், பகல் என்றும் இரவென்றும் பாராமல், பட்டி தொட்டியெல்லாம் வலம் வந்தார்; நாட்டுப்பற்றை ஊட்டினார்; உண்மையைக் காட்டினார்; சொன்னபடி வாழ்ந்து காட்டினார். அந்தப் பெரியவர் யார்?

அவர்தான் உழைப்பால் உயர்ந்த பெருந்தலைவர், காமராசர். அவரளவு உயர்ந்தவர் ஒரு சிலரே. உயர்ந்த இலட்சியம், தெளிந்த சிந்தனை, நேரிய பாதை, எதற்கும் யார்க்கும் அஞ்சாத உறுதி, சபலங்களில் சிக்காத நீண்ட பொதுத் தொண்டு ஆகியவற்றின் திருவுருவமாக வாழ்ந்தார், கர்மவீரர் காமராசர்.

காமராசரின் இளமைப்பருவ சூழ்நிலை சாதகமாக இல்லை; பாதகமாகவே இருந்தது. பிறந்த ஊரோ அன்று விருதுப்பட்டி; நகரமல்ல. சமுதாயக் கொடுமையோ சொல்லொணாதது. அடிமை இந்தியாவிலே, சாதாரண குடும்பத்தில், அன்னை

சிவகாமிக்கும் தந்தை குமாரசாமிக்கும் மைந்தனாகத் தோன்றியவர், காமராசர்.

ஆறு வயதில் தந்தையை இழந்தார். பள்ளிப் படிப்பும் ஆறாவதோடு நின்றது. இருந்தால் என்ன? படிப்பார்வம் பட்டுப் போகவில்லை. காலமெல்லாம் கொழுந்துவிட்டு எரிந்தது. எனவே காமராசரின் அறிவு கடலென விரிந்தது. சுவர்களால் அடைக்கப்படாத திறந்த உலகத்தில், மக்கள் பல்கலைக் கழகத்தில், தாமே முயன்று கற்றதால் மேதையானார் காமராசர்.

எங்கே பிறந்தால் என்ன? பள்ளிப் படிப்பு குறைவாக இருந்தால் என்ன? உயர்ந்த இலட்சியத்தைச் சிக்கெனப் பிடித்துக்கொண்டு, தன்னலமில்லாத, அப்பழுக்கற்ற, இடையறாத நாட்டுத் தொண்டும் பொதுத்தொண்டும் ஆற்றுவோர் உயர்வார்; பார்புகழ உயர்வார். இதை மெய்ப்பித்துக் காட்டியவர் பெருந்தலைவர் காமராசர்.

சாதாரணத் தொண்டராக இந்திய தேசிய காங்கிரசில் சேர்ந்த காமராசர், கால நிறைவில் பாரதத்தின் நெருக்கடிகளை, இருமுறை எளிதாக, அமைதியாகச் சமாளித்து, உலகப் புகழ் பெற்றார்.

பட்டம் பதவிகளில் நாட்டம் கொள்ளாதவர், தியாகச் செம்மல் காமராசர். அவர் வாழ்நாள் முழுவதும் காந்திய நெறியைக் கடைப்பிடித்தார். அளவற்ற பக்திக்கிடையிலும் காந்தியார் கண்ணோட்டம் தவறானது என்று உணர்ந்தபோது, மகாத்மாவிற்கும் மயங்காது, அஞ்சாது, பளிச்சென்று பதில் கொடுத்த வீரர் காமராசர்.

இந்திய அரசியல் விடுதலை, பொருளாதார விடுதலைக்கும் சமூக நீதிக்கும் அடிப்படை என்பதைத் தெளிவாக உணர்ந்தவர் காமராசர். எல்லோ

ரும் வாழும், நன்றாக வாழும், ஒன்றாக வாழும் மக்கள் சமத்துவத்திற்காக அயராது பாடுபட்ட ஏழை பங்காளர் காமராசர்.

தன்னேரிலாத நிர்வாகியாக ஒளிவிட்டார் காமராசர். அவர் தமிழ்நாட்டின் முதல் அமைச்ச ராக விளங்கிய அந்தப் பொற்காலத்தில், நான் பொதுக்கல்வி இயக்குனராகி, உரிமையோடும் உலைசையோடும் பணிபுரியும் நற்பேறு பெற்றேன். அப் பெருந்தலைவரோடு பலமுறை கல்வி மேடை களில் பங்கு பெறும் வாய்ப்புகள் ஏற்பட்டன.

முந்நூறு மக்களைக் கொண்ட சிற்றூர் தோறும் தொடக்கப்பள்ளி, ஈராயிரம் மக்களைக் கொண்ட பேரூரெங்கனும் நடுநிலைப்பள்ளி, அய்யாயிரம் மக்களுக்கு ஓர் உயர்நிலைப்பள்ளி என்பவை முதல் அமைச்சர் காமராசரின் கல்வித் திட்டமாகும்.

எல்லா சாதியினருக்கும் எவ்வளவு வருவாய் உடையவர் ஆனாலும் உயர்நிலப் பள்ளி முடிய இலவசக் கல்வி கொடுக்க வேண்டுமென்பது காமரா சரின் சமத்துவ கல்விக் கொள்கை.

பொதுமக்களுக்கான கல்வியில் பொதுமக்கள் அக்கறை கொள்ளவேண்டும் ; ஈடுபட வேண்டும். இது, மக்கள் நாடியறிந்த பெருந்தலைவரின் குறிக் கோள்.

கல்விக் கொள்கையை அரசியலுக்கு அப்பால் உருவாக்கியது காமராசரின் சிறப்பு. அனைத்துக் கட்சியினரின் ஒத்துழைப்பு பெறும் வகையில் கல்வி இயக்கங்கள் நடத்தியது அவரது முதிர்ந்த அரசியல் அறிவின் வெளிப்பாடு.

இருநூறாண்டு காலத்தில் பெற்ற கல்வி வளர்ச் சிக்கு மேலான வளர்ச்சியை எட்டாண்டு காலத்தில் கொடுத்த காமராசரை தந்தை பெரியார், கல்விக்

கண்கொடுத்த வள்ளல் என்று போற்றியது சாலப் பொருத்தமாகும்.

காமராசரின் திடீர் மறைவு எல்லோருக்கும் ஓர் அதிர்ச்சியை அளித்தது. 'சத்ய கங்கை'யின் ஆசிரியரும் எனது இனிய நண்பருமான திரு. பகீரதன் அவர்களின் விருப்பத்திற்கிணங்க காமராசரைப் பற்றி 'தலைவருள் மாணிக்கம்' என்ற தலைப்பில் 1975ல் புத்தகம் எழுதினேன். அதன் திருந்திய பதிப்பாக கல்வி வள்ளல் காமராசர் உங்கள் கைகளில்.

இந்நூலை வெளியிட பெர்ல் பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தார் முன்வந்துள்ளனர். அழகாகவும் விரைந்தும் இதனை வெளியிட்ட அந்நிறுவனத்தாருக்கு தமிழ்மக்கள் நன்றிக்கடன் பட்டிருக்கிறார்கள். நன்றியுடையேன்.

# 1

# தலைவராக உயர்ந்த தொண்டர்

சூழ்நிலை வலிமை மிக்கது. பல சமுதாயங்களில், எப்போதோ ஒரு முறை, யாரோ சிலருக்கு மட்டும் வளரத் துணை செய்வது, சூழ்நிலை.

உயர வேண்டிய கோடிக் கணக்கான மனிதர்களை மட்டந்தட்டி, அழுத்தி வைத்து, பாழாக்குவதே பெரும்பாலும் சூழ்நிலையின் திருவிளையாடல்.

கொடுமையான சூழ்நிலையைத் தகர்த்து எறிந்துவிட்டு, முன்னேறி, நாலு பேருக்கு உதவும் வளத்தோடு வாழ்வாரே, பாராட்டுக்குரியோர். சூழ்நிலையை வென்று வெற்றி வாகை சூடியவர், தனக்கென்று ஏதும் முயலாமல், பிறர்க்காகவே உழைத்தால், அது போற்றுதற்குரியது. நாட்டின் அடிமைத் தளையை அறுக்கவும், நலிவுற்ற மக்களெல்லாம் வலிவுற்று வாழவும் அறுபது ஆண்டு காலம் ஒருவர் உழைத்தார் என்றால், அவர் வணக்கத்திற்குரியவராவார்.

குலப் பெருமையோ இல்லை. செல்வப் பெருக்கும் இல்லை. பிறந்து வளர்ந்த ஊரும் பெரு நகரமல்ல. அன்று அது விருதுப்பட்டி.

சின்னஞ்சிறு ஊரிலே, சாதாரண குடும்பத்திலே பிறந்து, ஆறு வயதில் தந்தையை இழந்து, ஆறாண்டு படிப்போடு நிறுத்திவிட்டு, கடையில் வேலைக்குச் சேர்ந்த இந்தப் பிள்ளை, எப்படிப் பிழைக்கப் போகிறது என்று ஊர்க்காரர்கள் பலரும் பரிதாபப்பட்டிருப்பார்கள். தாயைக் காப்பாற்றும் பொறுப்பை, சிறுவயதிலேயே, தாங்கவேண்டிய நிலையில் இருந்த காமராசரோ, அதை மறந்து, தாய் நாட்டைக்காப்பாற்றும் நிலைக்கு உயர்ந்தார்.

காமராசர் வாலிபத்தை அடையாத வயதில், இந்திய விடுதலை இயக்கத்தில் எளிய தொண்டராகச் சேர்ந்தார். பிற தொண்டர்களுக்கு எடுத்துக் காட்டாக விளங்கினார். பம்பரம் போன்று, சுழன்று சுழன்று, காந்தியத்தைப் பரப்பினார். பகலென்றும் இரவென்றும் பாராமல், காடென்றும் மேடென்றும் கருதாமல், பட்டி தொட்டிகளெல்லாம் சென்று, மிரட்டிய அன்னிய ஆட்சியை, இணையிலாத் துணிவோடு எதிர்த்து நின்றார்.

'பேரன்பு கொண்டாரில் யாவரே பெரும் துயரம் பிழைத்து நின்றார் ?' பாரதத்தாயிடம் பேரன்பு கொண்ட கர்மவீரர் காமராசர் இதற்கு விலக்கல்லவே ! இந்திய விடுதலை இயக்கத்திற்குத்

தம்மை முழுக்க முழுக்க ஒப்படைத்துவிட்ட காமராசர், பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு, இடர்மிகு சிறைப்பட்டார். ஒரு முறையா? இல்லை. இருமுறையா ? அதற்குமேலும் எத்தனை முறை ? ஒன்பது முறை. சிறைப்பறவை காமராசர், வெஞ்சிறையில் வாடியது எத்தனை நாட்கள் ? மூவாயிரம் நாட்கள் சிறையில் வாடினார். ஆயினும்,

தம்மைப் பற்றிய சிந்தனையே இல்லாது, இன்னா செய்யாமை என்னும் காந்தியத்தில் மெய்ப் பற்று கொண்டவராக விளங்கிய காமராசரிடம் சிறைக் கொடுமை கசப்பை ஊட்டவில்லை;மாறாக• உறுதியை ஊட்டிற்று. தம்மிலும் வறியவர்களை, தம்மளவு கூடப் படிக்காதவர்களைப் பற்றிச் சிந்தித் துச் சிந்தித்து, புடம் போட்ட ஏழைபங்காளராக உருவானார்.

போராட்டத் தழும்புகள் காமராசரிடம் கசப்பி னைச் சுரக்கவைக்கவில்லை. தனக்கென எம் முயற்சியிலும் ஈடுபடாத, தியாகச் செம்மலாம் காமராசர் தம் முழுச் சிந்தனையையும் 'கடையனும் கடைத்தேற வேண்டும்' என்பதில் பாய்ச்சி விட்டார்.

அப்பழுக்கில்லாத, சாதிச் சேற்றிலே சிக்கிக் கொள்ளாத பொதுத் தொண்டு, எளிமையான பண்பு ஆகியவை காலப்போக்கில் காமராசரைத் தமிழ்நாடு காங்கிரசின் தலைவராக்கிற்று. 'மாநில காங்கிரஸ் தலைவர்களிலே, காமராசருக்கு இணை காமராசரே' என்னும் புகழோடு பல்லாண்டு பணி புரிந்தார்.

அந்நிலையில் ஒரு நெருக்கடி உருவாயிற்று. அது என்ன ?

1952ஆம் ஆண்டு, இந்தியாவில் பொதுத் தேர்தல் நடந்தது. அப்போதைய சென்னை மாகாணத்தில், காங்கிரசு கட்சி பெரும்பான்மை இடங்களைப் பிடிக்கத் தவறிவிட்டது. பொது உடைமைக் கட்சியை உள்ளடக்கிய அய்க்கிய முன்னணி பெரும்பான்மை பெற்றது. இருந்தும், அரசியல் சதுரங்கத்தினால் காங்கிரசு அமைச்சரவை அமைக்கப்பட்டது. அரசியலில் இருந்து ஒதுங்கியிருந்த சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியாரை அழைத்து, முதல் அமைச்சராக்க, தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் காமராசர் துணை நின்றார்.

அரசர் மெச்சினால் அரம்பை என்பது பழமொழி. முதல் அமைச்சர் நினைத்தது ஆணை என்பது புதுமொழி. இது மக்களாட்சியின் குழந்தை நிலையின் அடையாளம் ஆகும். முதல் அமைச்சர் இராசகோபாலாச்சாரியார், பொதுமக்களிடமிருந்து போட்டி வளர்வதைக்கண்டு கவலைப்பட்டார். எல்லோரும் படித்துவிட்டால், எப்படி எல்லோருக்கும் வேலை கொடுப்பது என்று ஏங்கினர். ஞானோதயம் ஆயிற்று.

சிறுவர் சிறுமியர் முழுநேரம் படிப்பதற்குப் பதில், அரைவேளைப் படித்தல்; அரைவேளை குலத்தொழில் கற்றல் என்று செய்துவிட்டால், போட்டி குறைந்துவிடும் என்று நினைத்தார்.

நகரங்களில் அத்தகைய முறையைக் கொண்டு வந்தால், எதிர்ப்பும் கிளர்ச்சியும் வெடிக்குமென்பது ஆச்சாரியாருக்குத் தெரியும். நாட்டுப்புறங்களில் செயல்படுத்தினால், மக்கள் பொறுத்துக் கொள்வார்கள் என்று அவருக்குத் தோன்றியது. எனவே, குலக்கல்வித் திட்டத்தை நாட்டுப்புறப் பள்ளிகளில் நடைமுறைப் படுத்தும்படி, அப்போதைய பொதுக் கல்வி இயக்குநர் திரு. கோவிந்தராஜுலுவிடம் கூறினார்.

'அவரவர் குலத்தொழிலைக் கற்பதை முன்னிறுத்தி, அரைவேளை படிப்புமுறையை'க் கொண்டு வரும்படி முதல் அமைச்சர்-அதுவும் ஆச்சாரியார் போன்றவர்-சொன்னதை எதிர்த்துச் சொல்ல முடியுமா ?

அப்போது நான் தொடக்கக் கல்விக்கு துணை இயக்குநன்.

'குலக்கல்விமுறை தேவையற்றது ; தீங்கானது ; நகரமக்களுக்கும் நாட்டுப்புற மக்களுக்கும் வேறுபாடு காட்டுவது ; ஏற்கனவே குலத் தொழிலில் ஈடுபட்டுள்ள பெரியவர்களில் பெரும்பாலோருக்கு, ஆண்டு முழுவதும் வேலை கிடைப்பதில்லை ; அந்நிலையில் குலத்தொழிலுக்குப் போவோர் எண்ணிக்கை பெருகுவது, உள்ளவர்கள் வயிற்றில் மண் போடுவதாகும்.' இது நான் இயக்குநருக்குத் தந்த குறிப்பின் சாரம்.

இயக்குநர் மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல், பல திங்களை ஓட்டினார்.

பின்னர் ஓர் நாள் மாலை,

'அரைவேளைப் படிப்பு முறையை நடைமுறைப் படுத்த, நீங்கள் தயங்குவதாகத் தெரிகிறது. அப்படி யானால், நான் பொது வாழ்க்கைப் பிரமுகர் ஒருவரை தனி அலுவலராகப் போட்டு, அப் பொறுப்பை அவரிடம் ஒப்படைக்கட்டுமா ? உங்கள் நிர்வாகத்தில் தலையிடாது, அவர் செயல் படும்படி, ஆணை பிறப்பிக்கட்டுமா ?' என்று இயக்குநர் கோவிந்தராசுலுவிடம் முதல் அமைச்சர் ஆச்சாரி யார், நேரில் கேட்டார்.

இயக்குநர், 'அரசு, அரைவேளைப் படிப்புதான் கொடுப்பதென்று முடிவு செய்துவிட்டால், அதை நிறைவேற்றுவது இயக்குநர் கடமை. அப்படி யிருக்க, அதற்குத் தனி அலுவலர் தேவையில்லை. தாங்கள் ஆணையிட்டால், நாட்டுப்புற தொடக்கப் பள்ளிகளில், அரை வேளையே பாடஞ் சொல்லிக் கொடுக்கும்படி, ஆணையிட்டு விடுகிறேன்' என்றார்.

'உடனே சுற்றறிக்கை வழியாக அரைவேளை படிப்புத் திட்டத்தை ஆணையிட்டு விடுங்கள் ; அப்புறம் அரசுக்குத் தெரிவியுங்கள். அரசின் முன் ஒப்புதலுக்கு அனுப்பினால், அக் கோப்பு இங்கும் அங்கும் போய்க் கொண்டிருக்கும் ; முடிவு எடுக்க, நாளாகும்' என்று முதல் அமைச்சர் ஆச்சாரியார் கூறினார்.

இயக்குநர் மாலை அய்ந்தரை மணிக்குமேல் உட்கார்ந்து புதிய கல்வி முறையை ஆணையிடும் சுற்றறிக்கையை ஆயத்தஞ் செய்தார். இரவோடு இரவாக, படிகள் எடுத்து, கல்வித்துறை அலுவலர் கள், ஆய்வாளர்கள் ஆகியோருக்கு அனுப்ப ஏற்பாடு செய்தார். அதற்கு முன் ?

ஆச்சாரியார் ஆலோசனைப்படி, நாளிதழ்களின் ஆசிரியரோடு இயக்குநர் தொடர்பு கொண்டார். முக்கியமான கல்விபற்றிய சுற்றறிக்கைக்கு இடம் வைத்திருக்கும்படி கேட்டுக் கொண்டார். இரவு பத்துமணிபோல், சுற்றறிக்கை நாளிதழ்களுக்குக் கிடைத்தது. அடுத்தநாள் காலைச் செய்தித்தாள் களில் புதிய கல்விமுறையைப் பற்றிய செய்தி வெளியானது.

அவ்வேளை, காமராசர் விருதுநகரில் தங்கி யிருந்தார். அன்று மாலை, அங்கு அவர் காங்கி ரசுப் பொதுக் கூட்டத்தில் இந்த குலக்கல்வித் திட்டத்தைப் 'பைத்தியக்காரத் திட்டம்' என்று தன் கருத்தை வெளியிட்டார். மேலும், 'அதை ஒழித்து விட்டுத்தான் மறுவேலை பார்ப்பேன்' என சூளு ரைத்தார்.

சுற்றறிக்கை வெளிவந்ததும், காமராசரைப் போலவே, தந்தை பெரியாரும் அறிஞர் அண்ணாவும் ஒருவரை ஒருவர் கலக்காமல், தனித்தனியாக எதிர்ப்பு அறிக்கைகளை வெளியிட்டார்கள். கம்யூ னிஸ்ட் கட்சி எதிர்த்தது. கல்வி அறிஞர்கள் எதிர்த்

தார்கள் ; ஆசிரியர் சமுதாயம் எதிர்த்தது ; காமராசரின் கருத்து தெரிந்ததும் காங்கிரசு சட்டமன்ற உறுப்பினர்கள் சிலர் முன்னின்று, குலக் கல்வித் திட்டத்தை எதிர்க்கும் காங்கிரசு சட்டமன்ற உறுப்பினர்களிடம் கையெழுத்து வாங்கினார்கள். மிகப் பெரும்பான்மையோர் கையெழுத்திட்டார்கள்.

மிகப் பெரும்பான்மை உறுப்பினர்கள் விரும்பாத கல்வித் திட்டத்தை எப்படியும் வெற்றி பெறச் செய்ய முதல் அமைச்சர் ஆச்சாரியார் முயன்றார்.

இந்த புதிய கல்விமுறைத் திட்டம் கல்வி இயக்குநரின் செயலே என்று காமராசர் முதலில் நினைத்திருந்தார்; ஆனால், சென்னைக்குத் திரும்பியதும் இத் திட்டம் இயக்குநருடையது அல்ல, முதல் அமைச்சருடையது என்பது அவருக்குத் தெரிய வந்தது.

திராவிடக் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும், பொது உடைமைக் கட்சியும் எதிர்ப்புக் குரல் எழுப்பிவிட்ட நிலையில், காமராசர் பொறுப்பு சங்கடமானதாயிற்று.

'குலக்கல்வித் திட்டத்தையும் எடுத்துவிட வேண்டும். அதைச் செய்யும்போது ஆச்சாரியாரின் பெருமைக்கும் இழுக்கு வரக்கூடாது' என்று காமராசர் கருதினார். புதிய வழி ஒன்று அவருக்குத் தோன்றியது.

ஆட்சியின்மேல் நம்பிக்கையில்லை என்று எதிர்க்கட்சியினர் தீர்மானம் கொண்டு வருவதே

நாடாளுமன்ற மரபு. அதற்கு மாறாக, இராச கோபாலாச்சாரியார் அமைச்சரவையின்மேல் நம்பிக்கை இருப்பதாகக் கூறும் தீர்மானமொன்றைக் கொண்டுவரச் செய்து நிறைவேற்றி விட்டால், இராசாசியின் பெருமை கெடாது என்று எண்ணினார். அத்தகைய தீர்மானத்தைக் கொண்டுவர ஏற்பாடு செய்தார். பெரும்பான்மையில்லாத போதும் அமைச்சரவை எவருடைய உள் உதவியால் இயங்க முடிந்ததோ, அவருடைய உதவியால், நம்பிக்கைத் தீர்மானம் நிறைவேறியது.

இதற்கிடையில், தமிழ்நாடு காங்கிரசின் தலைவர் என்ற முறையில், காமராசர், முதல் அமைச்சரைக் கண்டு, பெரும்பான்மையோர் புதிய கல்வி திட்டத்தை எதிர்ப்பதை தெளிவு படுத்தினார். அவர்கள் சொன்ன கருத்தை மதித்து, ஆண்டின் இறுதியில், அத்திட்டத்தைக் கைவிடும்படி ஆலோசனை கூறினார்.

காங்கிரசு, முதல் அமைச்சருக்கு இழுக்கு வராதபடி, தீங்கான திட்டத்தைப் போக்க முயன்றார் காமராசர்.

புதிய திட்டம் நடைமுறைக்கு வந்து சில திங்கள் கழிந்தபின், சென்னை சட்ட மன்றத்தில், அரசு சார்பில்,

'அரை வேளைப்படிப்பு முறையால், படிப்போர் எண்ணிக்கை பெருகும் என்று எதிர்பார்க்கப் பட்டது.

நடைமுறையில் அதற்கு மாறான நிலை உருவாகி யுள்ளது. படிப்போர் எண்ணிக்கை குறைந்து விட்டது' என்று அறிவிக்கப்பட்டது.

அப்படி அறிவித்த பிறகு, முதல் அமைச்சர் செயல் முறையை மாற்றி விடுவார் என்று சட்ட மன்ற காங்கிரசு உறுப்பினர்கள் எதிர்பார்த்தார்கள் ; நம்பிக்கையோடு இருந்தார்கள்.

தனி மனிதர்களின் தேவையற்ற பிடிவாதம் வரலாற்றைத் திசை திருப்பி விடுவதுண்டு.

அக்காலத்தில், சட்டமன்ற காங்கிரசுக்கட்சி, ஆண்டுக்கொருமுறை தலைவரைத் தேர்ந்தெடுப் பது வழக்கம். அப்படித் தேர்ந்தெடுக்கப்படுபவரே முதல் அமைச்சராவார்.

1954ம் ஆண்டுத் தேர்வு நெருங்குகையில் காமராசர் இராசாசியை அணுகினார் ; தொடர்ந்து தலைவராகவும் முதல் அமைச்சராகவும் இருக்க வேண்டினார்; குலக் கல்வித் திட்டத்தை அவ்வாண் டோடு நீக்கிவிடவும் வேண்டினார்.

அரம்போன்ற கூர்த்த மதியுடைய ஆச்சாரியார் என்ன செய்தார் ? 'நானா ? நீங்களா ?' என்ற போக்கினைத் தேவையின்றி மேற்கொண்டார்.

'நான் முதல் அமைச்சராக இருக்க விரும்பி னால், அரைவேளைப் படிப்பு முறையை ஏற்றுக் கொள்ள வேண்டும்' என்று நிபந்தனை விதித்தார்.

'குலக்கல்வி முறை' காங்கிரசின் கொள்கையில் இருந்து முளைத்ததல்ல ; அதன் திட்டமல்ல ; மேலும் பொது மக்களால் பெரிதும் வெறுக்கப் பட்டது. நாட்டுப்புற மக்களை இரண்டாம்தர மக்களாக அழுத்தி வைத்திருக்கவே பயன்படுமென் பதும் புலனாயிற்று. இவ்வளவிற்குப் பிறகும் அதைத் தொடர்ந்து நடைமுறைப் படுத்தமுயன்றி ருந்தால், காங்கிரசு ஆட்சி தொடரும் வாய்ப்பை அப்போதே இழந்திருக்கும்.

இதை உணர்ந்த சட்டமன்றக் காங்கிரசு கட்சி வேறு தலைவரைத் தேடும் நிலைக்குத் தள்ளப் பட்டது. ஆச்சாரியார், தன் சார்பில், திரு. சி. சுப்ர மணியத்தை தலைவர் பதவிக்கு நிறுத்திவைக்க முடிவு செய்தார்.

குலக்கல்வி எதிர்ப்பாளர்கள், திரு. சி. சுப்ரமணி யத்தை வெல்லக்கூடிய ஒருவரைத் தேட நேர்ந்தது. அப்போது டாக்டர் சுப்பராயனை நினைத்தார்கள் ; அணுகினார்கள். அவர் போட்டியிட மறுத்து விட் டார். பிறகு வேறு பெயர்கள் வந்தன. அவரவருக்கு எத்தனை வாக்குகள் கிடைக்கும் என்று கணக்குப் போட்டுப் பார்த்தார்கள்.

காமராசர் முன்வந்து, முதல் அமைச்சர் பதவியை ஏற்றுக் கொள்வதாக இருந்தால் மட்டுமே ஆச்சாரியார் ஆதரித்த சி. சுப்ரமணியத்தை வெல்ல முடியுமென்று தெரிந்தது. அவரை வெல்ல

முடியாவிட்டால் குலக்கல்வித் திட்டம் தொடரும் கேடு முன்னின்றது.

மக்களுக்குக் கேடான கல்விமுறை ஒழிய வேண்டுமானால், அதை ஒழிக்க ஒப்பும் முதல் அமைச்சர் தேவை. வேறு வழியின்றி, காமராசர் சட்டமன்ற காங்கிரசு கட்சியின் தலைமைப் பதவிக்குப் போட்டியிட்டார்; வென்றார். சென்னை மாநிலத்தின் முதல் அமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். அது, தமிழ்நாட்டின் பொற்காலத்தின் தொடக்கம். அதை அவரது ஆட்சி நடவடிக்கைகள் காட்டின.

காமராசரின் பெருந்தன்மைக்கும் நல்ல அரசியல் அணுகுமுறைக்கும் எடுத்துக் காட்டான ஒரு நிகழ்ச்சி அவர் தலைவராக அறிவிக்கப்பட்டதும் நடந்தது. அது என்ன ?

காங்கிரசு சட்டமன்றத் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டதும் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட சி. சுப்ரமணியத்தை பழையபடி கல்வி அமைச்சராகவும் நிதி அமைச்சராகவும் தனது அமைச்சரவையில் சேரும்படியும் அரைவேளைப் படிப்பை பழையபடி முழு நாள் படிப்பாக மாற்றி விடும்படியும் பகிரங்கமாகக் கேட்டுக் கொண்டார். திரு. சி. சுப்ரமணியமும் தயக்கமின்றி இசைவு தந்தார்.

'பொது வாழ்க்கை என்பது, அவரவர் விருப்பு வெறுப்புகளை, முனைப்புகளை நிறைவேற்றிக்

கொள்ளும் வாய்ப்பல்ல. எனவே, தன்னை பின்னே தள்ளிவிட்டு பொதுநன்மையைக் கருதி மக்களின் முடிவுக்குக் கட்டுப்படுவதே முதிர்ந்த அரசியல் வாதிக்கு அடையாளம்; இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாக ஒளிவிட்ட சி. சுப்ரமணியம் காமராசரின் வலக்கரமாக இயங்கினார்.

அது மட்டுமா ? சி. சுப்ரமணியத்தை தலைவர் பதவிக்கு முன்மொழிந்த மீ. பக்தவத்சலத்திடமும் காமராசர் பகை கொள்ளாது, அவரையும் அமைச்சர வையில் சேர்த்துக் கொண்டார்.

'முதல் அமைச்சர்களிலே ஈடு இணையற்றவர் காமராசர்' என்னும் புகழைப் பெற்றார்.

'உயிரோடு இருப்பவர்களின் சிலையைத் திறந்து வைப்பது சரியல்ல என்பது என் ஆழ்ந்த கருத்து. இருப்பினும், காமராசரைப் போன்ற பெருஞ்சாதனை யாளரைப் பொறுத்த மட்டில், விதிவிலக்கே சரி யென்று என்க்குத் தோன்றிற்று. எனவே காமராச ரின் சிலையைத் திறந்து வைக்கிறேன்' என்று பிரதமர் நேரு போற்றுமளவிற்கு சிறந்த சாதனை யாளராக விளங்கினார் காமராசர்.

ஒன்பதரை ஆண்டு முதல் அமைச்சராகச் சிறந்து விளங்கிய காமராசர், அப்பதவியை, தாமரை இலைத் தண்ணீரைப் போல் உதறி விட்டார். பிறகு அனைத்திந்திய காங்கிரசின் தலைவரானார். நேரு மறைந்தபோது, லால்பகதூர் சாஸ்திரியை எளிதாகப்

பிரதமராக்கி அவர் மறைந்தபோது, திருமதி இந்திரா காந்தியையும் எளிதாகப் பிரதமராக்கி, வெற்றி கொண்டார். இந்திய காங்கிரசு தலைவர்களிலே, சிறந்த இராஜதந்திரி காமராசர் என்று பாரதம் முழுவதும் பாராட்டும் புகழ் நிலைக்கு உயர்ந்த, முதல் தமிழர் காமராசரே ஆவார்.

தமிழ் நாட்டின் இரட்சகர், கல்வி வள்ளல், என்று தந்தை பெரியாரால் பாராட்டப்பட்ட பெருந் தலைவர் காமராசர், மக்களாட்சியின் மாண்பிற்குச் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்கினார்.

இதை விதியின் கொடை என்று ஒதுக்கி விட்டால் ஏமாந்து போவோம். வினையின், தூய வினையின், நீண்ட வினையின், காசும் கையில் ஒட்டாத அளவு துறவு மனப்போக்கோடு ஆற்றிய பொதுத் தொண்டின், நாட்டுத் தொண்டின், நற் கனிகளே, காமராசரின் உயர்வும் புகழும்.

தலைசிறந்த நிர்வாகியாகவும் உண்மையான சமத்துவ வாதியாகவும் தொண்டருக்குத் தொண்டராகவும் தலைவர்களுக்குத் தலைவராகவும் ஒளி விட்ட அப் பெருமகனாரின் கீழ் பொதுக் கல்வி இயக்குனராக நான் பணிபுரியும் வாய்ப்பு கிடைத்தது என் நற்பேறு. அவரிடம் இருந்த நற்குணங் களையும் நற்பண்புகளையும், யான் அறிந்த மட்டில் தெரிவிப்பது இளைய தலைமுறைகளுக்கு வழி, காட்டும், நம்பிக்கையூட்டும், கறைபடாத தொண் டாற்றத் தூண்டும்.

2

# முதல் சந்திப்பு

வயதோ பதினேழு. நிலையோ கட்டிளங் காளை. மங்கையர் மேல் மனம் பாயும் பருவம்.

ஆறுவயதில் தந்தையை இழந்த இளைஞர். எனவே தாயைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு. நெருக்கடியான கட்டம்.

இந்நெருக்கடியில் தாயை மறந்து, கன்னியரைக் கருதாமல், இந்தியாவை ஆங்கில ஆட்சியிலிருந்து விடுவிக்க முனைகிறார் அந்த இளைஞர். காந்திய இயக்கத்தில் குதிக்கிறார். அவ்விளைஞர் யார்? காமராசர்.

காமராசரின் நாட்டுப்பற்றும் ஆற்றல் மிகு தொண்டும் பலருடைய கவனத்தை ஈர்த்தது. போராட்டங்கள் அவரை ஈர்த்தன. கள்ளுக்கடை மறியல், தீண்டாமை யொழிப்பு, கொடிப் போராட்டம், ஒத்துழையாமை இயக்கம், ஆகியவை அவரை முன்னணியில் நிறுத்தின. சிறைக் கதவுகளும்

திறந்தன. முன் கூறியுள்ளதுபோல் மொத்தத்தில் மூவாயிரம் நாட்கள் சிறையில் வாடினார் கர்மவீரர்.

காமராசருக்கு எதையும் தாங்கும் இதயம் இயற்கையாகவே அமைந்திருந்தது. எனவே, சிறை வாழ்க்கை அவருக்குக் கசப்பை ஊட்டவில்லை. மாறாக பொது அறிவை வளர்த்தது. முன்னிலும் அதிக உலக அறிவுப் பெற்றவராகச் சிறையிலிருந்து வெளிவந்தார். மேலும் சிறந்த அமைப்பாளராக, தொண்டாற்றுபவராகப் பணிபுரிந்தார். அப்பழுக்கில்லாத நாட்டுத் தொண்டு, சூதறியா நல்ல உள்ளம், காமராசரைத் தமிழ்நாட்டு காங்சிரசின் தலைவர் ஆக்கிற்று.

பல்லாண்டு தன்னேரிலாத தலைவராகப் பவனி வந்தார் ; தறுக்கில்லாத தலைவராகப் பவனி வந்தார். அவர் கால் படாத ஊர் இல்லை. அவர் புகழ் படாத இடம் இல்லை. அப்படிப்பட்ட பெரியவரோடு அப்போது எனக்கு அறிமுகம் இல்லை.

ஆயிரத்துத்தொள்ளாயிரத்து அய்ம்பத்து நான்-காம் ஆண்டின் தொடக்கம். வழக்கம்போல, என் வீட்டிற்கு நாலாவது வீட்டிலிருந்த குத்தூசி குருசாமியைக் காணச் சென்றேன். வீட்டு வாயிலில் பெரிய கார் நின்றது. முன் தாழ்வாரத்தில் என் மாமனார் திரு. சுப்ரமணியம் உட்கார்ந்திருந்தார்.

'நீங்கள் மேலே போகலாம். காமராசர் தான் பேசிக் கொண்டிருக்கிறார். இரகசியம் இல்லை. சும்மா போங்க' என்றார்.

நான் திரும்பிப் போய்விட்டேன். அடுத்தடுத்து நான்கைந்து முறை இப்படி நிகழ்ந்தது. பிழைக்கத் தெரிந்தவனாயிருப்பின், அவ்வாய்ப்புகளை முதலாக்கியிருப்பேன். அதில் தவறி விட்டேன்.

விடுதலைவீரர், சிறைப்பறவை, ஏழைபங்காளர், கர்மவீரர், காங்கிரஸ் தலைவர், மாண்புமிகு கு. காமராசர், ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அய்ம்பத்து நான்காம் ஆண்டு ஏப்ரல் திங்கள் பதின் மூன்றாம் நாள், சென்னை மாநில முதலமைச்சரான போது, தமிழக வரலாற்றில் ஒரு பொற்காலம் தொடங்கிற்று.

தலைவர், முதல் அமைச்சராகி சில வாரங்களே ஆயின. அப்போது ஒருநாள், அன்றைய பொதுக் கல்வி இயக்குனராக இருந்த திரு கோவிந்தராசுலு நாயுடு, துணை இயக்குனராக இருந்த என்னை அழைத்தார்.

"முதலமைச்சர் காமராசரோடு அறிமுகம் உண்டா?" என்று என்னைக் கேட்டார். அறிமுகமாகும் பேறு கிட்டவில்லை என்றேன்.

"சரி! வண்ணாரப் பேட்டையில் விருதுநகர் நாடார் உறவின் முறையின் சார்பில், உயர் நிலைப் பள்ளியொன்று தொடங்க மனுப் போட்டிருக்கிறார்களாம். அதைப்பற்றி முதல் அமைச்சர் பேச விரும்பினார். அதுபற்றிய அஞ்சல்கோப்போடு, நானே நேரில் சென்று பேச நேரம் கேட்டேன்.

'விஷயம் சிறியது. இயக்குனர் வரத் தேவையில்லை. அதைப் பார்க்கும் துணை இயக்குனரை அனுப்பி வையுங்கள் போதும். என்ன செய்யலாம், என்ன செய்யக்கூடாது என்பதைப்பற்றிய உங்கள் கருத்தை அவரிடம் சொல்லியனுப்புங்கள்' என்று சொல்லுகிறார். ஏன் அப்படிச் சொல்லுகிறார் என்று விளங்கவில்லை. முதலமைச்சரைக் காண நீங்கள் சென்றாக வேண்டும். ஆனால் ஒன்று:

"என்னிடம் பேசுவதுபோல், உள்ளதை உள்ளபடி, பளிச்சென்று பேசிவிடாதீர்கள். முதலமைச்சர் விரும்புகிறபடி, ஆணையிட இயக்குனர் சித்தமாயிருக்கிறார் என்று எடுத்த எடுப்பிலேயே, சொல்லி விடுங்கள். நமக்கென்ன போச்சு. காமராசர் விரும்புவதுபோல் ஆணை இட்டு விடுவோம்" என்று இயக்குநர் அறிவுரை கூறி அனுப்பினார்.

குறித்த வேளை, கோட்டையில், முதலமைச்சர் மாண்புமிகு காமராசரைக் கண்டேன். முதலமைச்சர் எவரையும் நான் அதற்குமுன் பேட்டி காணும் வாய்ப்புப் பெற்றதில்லை. மிகுந்த அச்சத்தோடு நுழைந்தேன். நெஞ்சு படபடத்தது. நொடியில் அமைதி அருளினார் காமராசர்; சிரித்தபடியே உட்காரச் சொன்னார். உட்கார்ந்தேன். நான் பேச வாயெடுப்பதற்குமுன் முதல்வர் பேசினார்.

"தனியார் துறையில், உயர்நிலைப் பள்ளியொன்று தொடங்க வேண்டும். என்னென்ன செய்

தால், அனுமதி கிடைக்கும் ?" இது முதல்வர் கேள்வி.

நிறைவேற்ற வேண்டிய நிபந்தனைகளை வரிசையாகக் கூறினேன்.

பொறுமையாகக் கேட்டு விட்டு "வண்ணாரப் பேட்டையார்கள் இப்போது எத்தனை நிபந்தனை களை நிறைவேற்றுவார்கள் ?'' என்று முதல்வர் கேட்டார்.

"உயர்நிலைப் பள்ளிக்கூடத்திற்குப் பொருத்த மான புதுக் கட்டடம் தேவை : அதைத் தவிர, மற்ற எல்லாவற்றையும் நிறைவேற்றி விட்டார்கள். இப்போதைக்கு பெரிய மாடி வீடொன்றை வாட கைக்குப் பிடித்துள்ளார்கள். அதில் தொடங்கப் போகிறார்களாம். அடுத்த ஆண்டிற்குள் தனியாகக் கட்டடம் கட்டிவிடுவார்கள். அதை நம்பலாம்" என்று பதில் கூறினேன்.

'இப்படிப்பட்ட நிலையில்,சாதாரணமாக என்ன செய்வீர்கள்' என்று வினவினார். 'முதல் மூன்று படிவங்களுக்கு மட்டுமே அனுமதி கொடுப்போம். ஏற்ற கட்டடம் அமைத்த பிறகு நான்கு, அய்ந்து, ஆறு படிவங்களை, அடுத்தடுத்துக்' கொடுப்போம்" என்றேன்.

"சரிதான். பள்ளிக்கூட அனுமதியில்லாவிட் டால், பொதுப்பணத்தை எடுத்து, கட்டடம் கட்ட முடியாது. எடுத்த எடுப்பிலேயே, மேல் வகுப்பை

யும் கொடுத்து விட்டால், அப்புறம் எல்லோரும் அவரவர் வேலையைப் பார்க்கப்போய் விடுவார்கள்.

"இப்போதைய கல்வித்துறையின் நடைமுறை சரியாகவே இருக்கிறது. இவ்வாண்டு, முதல் மூன்று படிவங்களை மட்டும் அனுமதித்தால் போதுமென்று இயக்குனரிடம் சொல்லிவிடுங்கள்" என்றார் முதலமைச்சர்.

"தாங்கள் விரும்பினால், நான்கு வகுப்புகளை யுமே இவ்வாண்டே கொடுப்பதற்கு ஒப்புக் கொள்வ தாக இயக்குனர் சொல்லிவரச் சொன்னார். நான் காம் படிவமும் கொடுக்க விரும்பினால்.... ?"

நான் அடக்கமாகக் கூறிய பதில் முடியவில்லை. தயக்கத்தைப் புரிந்துகொண்ட பெரியவர், 'அது சரியில்லை. விதிமுறைகள் சரியாகவே உள்ளன. எனக்கு வேண்டியவர்களே, சட்டத்திற்கு கட்டுப் படாமல், சலுகைகள் கேட்டால், மற்றவர்களை எப்படிக் கட்டுப்படுத்த முடியும்? இப்போதைக்கு மூன்று வகுப்புகளோடு நிறுத்திக் கொள்ளுங்கள். சம்பந்தப்பட்டவர்களைக் கூப்பிட்டு, அப்படியே சொல்லி விடுகிறேன்' என்று அழுத்தந்திருத்தமாகக் கூறி விட்டார். மறுத்துப் பேசத் துணிவில்லாமல் வந்து விட்டேன். இதைக் கேட்ட கல்வி இயக் குனர், நிறைவு கொள்ளவில்லை. உள்ளூரக் கவலைப்பட்டார்.

அன்றுமாலை புதிய உயர்நிலைப் பள்ளிக்கு மனுப் போட்டவர்கள் வந்தார்கள். மூன்று படிவங்

கள் மட்டும் அனுமதித்தால் போதுமென்ற திருத்திய மனுவைக் கொடுத்தார்கள். அதைக் கண்டு, அவர்களோடு பேசிய பிறகே, இயக்குனருக்கு நிறைவு ஏற்பட்டது. காமராசரைப் பாராட்டினார், தொடர்ந்து மதித்தார்.

# 3

# சிந்தனைத் தெளிவு

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அய்ம்பத்து நான் காம் ஆண்டு ஆகஸ்டு பன்னிரண்டாம் தேதி அப்போதைய தலைமைச் செயலர் திரு ராமுண்ணி மேனன் அய். சி. எஸ். முதல் அமைச்சரிடம் சென்றார்.

"ஆந்திரப் பிரதேசத்தில், திருப்பதியில் ஒரு பல்கலைக் கழகம் நிறுவப்போகிறார்கள். அதன் வேந்தர் தலைமை நீதிபதி திரு கே. சுப்பராவிட மிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது.

'சென்னை மாநிலத்தில் பொதுக் கல்வி இயக்கு னராக இருக்கும் திரு. கோவிந்தராசுலு நாயுடுவை, துணைவேந்தராக நியமிக்க விரும்புகிறாராம். அவரை அனுப்பிவைக்க முடியுமா ?' என்று கேட்டி ருக்கிறார். என்ன பதில் எழுத என்று கேட்டுக் கொண்டுபோக வந்திருக்கிறேன்" என்று தலைமைச் செயலர் கூறினார்.

"கொடுக்காவிட்டால், பிரிந்துபோன மாநிலத் திற்கு உதவியை மறுக்கிறோமென்று, நினைப்பார் க்ள். நாயுடுவை விட்டு விட்டால், நாம் சமாளிக்க முடியுமா என்பதை நீங்களே சொல்லவேண்டும்" இது காமராசர் பதில்.

"அதையும் பார்த்தேன். இயக்குனர் பதவிக்கு உரியவர்கள் இரு துணை இயக்குனர்கள் மட்டுமே உள்ளனர். இரண்டு பேரும் இளைஞர்கள்; நாற்பத்தி இரண்டு வயது. யாரைப் போட்டாலும் பதின்மூன்று ஆண்டுகளுக்கு இருப்பார்கள். அது நல்லதா என்பதே கேள்வி" என்று புதிர் போட்டார் தலைமைச் செயலர்.

"இரண்டு பேரையும் விட்டுவிட்டு, வேறு யாரை யாவது நியமிக்க வழி இருக்கிறதா?" காமராசரின் கேள்வி.

"அதைப் பற்றிச் சிந்தித்தேன். யாராவது, அய். சி. எஸ்., அய். ஏ. எஸ். யைச் சேர்ந்தவர் களைப் போடலாமா?" கேள்விக்குப் பதில் கேள்வி.

"கல்வித்துறை இயக்குனராக விரும்புகிற அய். சி. எஸ்., அய். ஏ. எஸ். அதிகாரிகள் யாராவது இருந்தால், சொல்லுங்கள்" என்றார் காமராசர்.

"அப்படியொருவரும் இல்லை. நாம் பார்த்துப் போட்டால், மறுக்க மாட்டார்கள். அதிகாரிகளிடம் அந்த அளவிற்கு ஒழுங்கு இருக்கிறது." இது தலை மைச் செயலருடைய பதில்.

"கட்டுப்பாட்டிற்காகப் போகிறவர், மூன்று ஆண்டு எப்ப முடியும், என்று பார்த்துக்கொண்டே யிருப்பார். காலம் ஓடுமே ஒழிய, வேலை ஓடாது. இயக்குனர் பதவிக்கு ஆசைப்படுகிற, இந்திய சர்விஸ் அதிகாரிகள் இல்லாவிட்டால், கல்வித் துறையில் உள்ள இருவரில் ஒருவரைப் போட்டு டுங்க. அவராவது மகிழ்ச்சியாக வேலை செய்வார்" என்று கோடு காட்டினார் காமராசர்.

"யாரைப் போடலாம்?" என்று வினவினார் தலைமைச் செயலர்.

"அதை நீங்கதானே சொல்லணும். இது சீனியாரிடி பதவியா? செலக்ஷன் பதவியா?" இது காமராசரின் கேள்வி.

"செலக்ஷன் பதவியே" இப்படிக் கூறினார், தலைமைச் செயலர்.

"அப்படியானால், இரண்டுபேர் ரிகார்டுகளை யும் பாருங்கள். யாருடையது அதிகம் நன்றாக இருக்கிறதோ, அவரை நியமித்து விடலாம்" என்று காமராசர் ஆணையிட்டார்.

"அதையும் ஒரு மாதிரி பார்த்துக்கொண்டுதான், வந்திருக்கிறேன். நெ. து. சு.வின் ரிகார்டு முதலில் நிற்கிறது."

"அப்படின்னா, அவரைப் போட்டுடுங்க."

"இல்லை. எதற்கும் இரண்டு ரிகார்டுகளையும்

சர்வீஸ் கமிஷனுக்கு அனுப்பி, அவங்க கருத்தையும் கேட்டுக் கொள்ளலாம்.''

“சட்டம் அப்படிச் சொன்னா, அவங்களையும் கேட்டு முடிவு செய்யுங்கள். இல்லாவிட்டால், நீங்கள் சொல்லும் முடிவை நாங்கள் ஏற்றுக் கொள்ளுகிறோம். எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. அப்புறம் உங்கள் விருப்பம்'', என்று முடிவு செய்தார் முதல் அமைச்சர்.

“எதற்கும் கமிஷனுடைய கருத்தையும் கேட்டு விடுகிறேன்.'' என்று தலைமைச் செயலர் கூறினார். காமராசர் இசைந்தார்.

இரண்டு நாட்களுக்குப்பின், இச்செய்தி என் காதில் வீழ்ந்தது. அன்றுமுதல் முடிவு தெரியும் வரை, ‘பதுங்கி'க் கொண்டேன். சென்னையில் போயிருக்க வேண்டிய அமைச்சர் கலந்துகொண்ட பல நிகழ்ச்சிகளுக்குச் செல்லாமல் நின்றுவிட்டேன்.

என்னை நியமித்ததற்காகக் கல்வி அமைச்சருக்கு நன்றி சொன்னபோது, அவர், ‘இரு திங்களாக தலைமறைவாகி விட்டீர்களே' என்று சிரித்தார்.

# 4

# உரிமை தந்தவர்

உண்மை விந்தையாக இருப்பதுண்டு; நம்ப முடியாததாகவும் இருப்பதுண்டு. ஆயினும் உண்மையைச் சொல்லத்தான் வேண்டும். சொல்ல வேண்டிய நேரத்தில் உரைக்கத்தான் வேண்டும். யாருக்கு எரிச்சல் ஊட்டினாலும், இப்போதாவது உண்மையை வெளியிடாமல் இருத்தல், குற்றமாகும்.

எனக்கு 'சீனியரை', அமெரிக்காவில் டாக்டர் பட்டம் பெற்றவரை, பரிந்துரைகள் பல உடையவரை, தன் சாதிக்காரரை ஒதுக்கிவிட்டு, தமிழ் நாட்டுப் பட்டம் மட்டுமே பெற்ற என்னை, பொதுக் கல்வி இயக்குனராக்கியவர் யார்? சாதிச் சேற்றிலே என்றும் சிக்கிக்கொள்ளாத பெருந்தலைவர், ஏழை பங்காளர், காமராசரே. தமிழ்நாட்டின் முதல் அமைச்சர் என்ற முறையிலும் எனக்கு மிகப் பெரிய பதவியைக் கொடுத்தவர் என்ற உரிமையிலும், இதையும் அதையும் செய்யும்படி காமராசர் கட்டளையிட்டிருந்தால் உலகம் பழித்திருக்காது. மாறாக,

பரிந்துரை நோய் எங்கும் பரவியுள்ள நம் சமுதாயம், பாராட்டியிருக்கும்.

பெரிய பதவியைக் கொடுத்து, அதற்கு மேலாகப் பெரிய உரிமையைக் கொடுத்து, அதற்கு ஆதரவாக, உயர்ந்த மதிப்பையும் கொடுத்த காமராசரோ, என்னிடம் எந்த பரிந்துரையும் சொன்னதில்லை. ஒன்பது ஆண்டுகாலம் எனக்கு ஆணையிடும் உரிமையைப் பெற்றிருந்த முதல் அமைச்சர் காமராசர் எத்தகைய பரிந்துரையும் செய்யவில்லை. கட்சியை வளர்ப்பதில் ஈடு இணையற்றவர் காமராசர். இருப்பினும் கட்சித் தொண்டர்களுக்குக்கூட எவ்வித பரிந்துரையும் சொல்லவில்லை. தாம் சொல்லாதது மட்டுமா? தம்முடைய தனிச் செயலர் மூலமும் எதையும் கேட்டிராதவர். பல நூறு மேடைகளிலே நான் அவர் உடன் இருந்தபோதும், தன்னைச் சார்ந்தவர்களுக்காக எதையும் கேட்காத நெறியாளராக விளங்கினார் காமராசர்.

என்னை ஒருமையில் அழைக்க உரிமையுடைய கல்வி அமைச்சர் சி. சுப்ரமணியமும் எப்போதும் யாருக்காகவும் எதற்காகவும் என்னிடம் பரிந்துரை செய்யவில்லை. இது பெருமையா? ஆம். இது நன்மையா? ஆம். ஆம்.

பெரியவர்கள் இருவரும் பரிந்துரைக்காத, நோன்பினை பல்லாண்டு கடை பிடித்ததனால் ஊழியனாகிய நான், என்னைச் சார்ந்தவர்கள், என்னைச் சுற்றிக் கொண்டிருப்பவர்கள் என்பதற்

காக, நீதிக்குப் புறம்பானதை, சமூக நீதிக்குப் புறம்பானதை, எந்நிலையிலும் செய்யத்துணியவில்லை, தாழ்த்தப்பட்டோரையும் பின் தங்கிய வகுப்பினரையும் தேடித்தேடி, உதவி புரிந்த நெறியாளனாக, நான் இயங்க முடிந்ததன் இரகசியம், மேலே இருப்பவர்கள் சிறந்த நெறியாளர்களாக இருந்ததே.

முதல் அமைச்சர் காமராசரும், கல்வி அமைச்சர் சி. சுப்ரமணியமும் அன்று நிர்வாகத்தில் ஊழல் தலைகாட்டாதபடி, கட்டிக்காக்கும் நெறியை உணர்ந்திருந்ததோடு, அதை நோன்பாகக் கொண்டிருந்தார்கள்.

# 5

# மாற்றுக் கட்சிகளையும் மதித்தவர்

காமராசர் முதல் அமைச்சராக விளங்கிய காலம் தமிழ் நாட்டுக் கல்விக்குப் பொற்காலம். அக்காலத் தில் நினைத்துப் பார்க்க முடியாத பெரும் அளவு பல நிலைக் கல்வியும் வளர்ந்தது. இருபால் ஆசிரி யர்களும் ஆயிரம் ஆயிரம் ஒளிகொள் விழிகளில் இறக்கை கட்டிப் பறந்தார்கள். 'சாமி' வந்தவர் களைப்போல ஆவேசத்தோடு கல்விப் பணி புரிந் தார்கள். பொதுமக்களும் கட்சி வேறுபாடுகளை ஒதுக்கி வைத்துவிட்டு, கல்வித் தொண்டிற்குத் தாராளமாக உதவினார்கள். அதற்கான காரணங்கள் சில. அவற்றில் முதலானது, உயிர் நாடியானது, ஒன்று உண்டு. அது எது ?

கல்விக் கொள்கைகளையும் கல்வித் திட்டங் களையும் கல்வி பற்றிய கருத்துக்களையும் கல்வி வளர்ச்சிக்கான நடவடிக்கைகளையும் கட்சி அரசியல் சிமிழுக்குள் அடைக்காததே.

கல்வி, சில நாள் பயிரன்று; பல நாள் பயிருமன்று. பல்லாண்டுப் பயிர். நல்ல கல்வி முயற்சிகள் பலன் அளிப்பது, பல்லாண்டுகளுக்குப் பிறகே. அரச மரத்தைச் சுற்றி வந்ததும் அடிவயிற்றைத் தடவுவோருக்கு, அங்கே இடம் இல்லை. தவறான கல்விப் போக்கால் ஏற்படும் கேடும் பல்லாண்டுகளுக்குத் தொடரும். எனவே, கல்வித் திட்டத்தை, முறையை வகுக்கும் உரிமையை ஆளும் கட்சியின் தனியுரிமையாக ஆக்கிக் கொள்ளவில்லை, காமராசரின் நல்லாட்சி. மாறாக, கல்விக் கொள்கைகளை முடிவு செய்யும்போது, கட்சி அரசியலை அப்பால் நிறுத்திவிட்டே, முடிவு செய்தது, அன்றைய ஆட்சி. பல பேர்களும் சேர்ந்து, சிந்தித்து, பேசி முடிவு செய்யவேண்டும் என்று கருதியது, தொலை நோக்குடைய அந்த ஆட்சி. எனவே, அனைத்துக் கட்சிகளும் கொண்ட கல்வி ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டது. அக்குழு பலமுறை கூடி, ஆழமாக அலசி, முடிவுகளை எடுத்தது. அப்போதும் ‘கட்சித் தலைவர்கள் சொன்னால் சொன்னதுதான்’ என்று வாலறிவுக்கு உரிமை கொண்டாடவில்லை. கருத்துத் தொகுப்புகளை ஆசிரிய மையங்கள் அனைத்திற்கும் அனுப்பினோம். ஆசிரிய சமுதாயத்தின் பரவலான கருத்தை அறிந்தபின்னரே கடைசி முடிவுகள் எடுக்கப்பட்டன.

எல்லோரையும் கலந்து முடிவு எடுத்ததால், எல்லோர் ஆதரவும் ஈடுபாடும் எளிதில் கிடைத்தன.

எனவே, இன்று நினைக்கக்கூட அஞ்சவேண்டிய அருஞ்செயல்களை, அன்று மாநிலம் முழுவதிலும், அரசியல் பொம்மலாட்டம் ஆட்டத் தெரியாத, என்னைப்போன்ற எளிய கல்வித் தொண்டன்கூட, எளிதாகச் செய்ய முடிந்தது.

# 6

# விதை முளைத்தது

சென்னை பூங்கா நகர். காலை ஒன்பது மணி. பனி போக்கும் இளம் வெயில். மெமோரியல் மண்டபம் நிறைந்து வழிகிறது. தமிழ்நாட்டுத் திலகர், டாக்டர் வரதராஜுலு நாயுடு தலைமை வகிக்கிறார். அவருக்கு அடுத்து அமர்ந்திருப்பவர் யார் ? சென்னை மாநில முதல் அமைச்சர், மாண்பு மிகு காமராசர். அடுத்து உட்கார்ந்திருப்பவர் யார் ? பொதுக் கல்வி இயக்குனராகிய நெ. து. சு.

அவையோரின் கண்களிலே ஒளி. முகங் களிலோ ? மகிழ்ச்சிப் பொங்கல். வாயிலில் நின்று வரவேற்போர் மொழிகளோ ? இனிமைப் பொழிவு. ஆர்வமும் கனிவும் நம்பிக்கையும் ஒன்றோடு ஒன்று போட்டியிடும் அக் கூட்டம் என்ன கூட்டம் ? பொதுக் கூட்டமா ? இல்லை. பின் என்ன ? மாநாடு. தியாகிகள் மாநாடா ? இல்லை. நிர்வாகி கள் மாநாடு. எதை நிர்வகிப்பவர்கள் ? தனியார் தொடக்கப்பள்ளி நிர்வாகிகள் மாநாடு அது. ஏழை

பங்காளர் முதல் அமைச்சரிடம் முறையிட்டால், குறை தீரும் என்பது அவர்கள் நம்பிக்கை. அதன் விளைவுகளே, ஆர்வமும் கனி மொழியும்.

குறித்த நேரத்தில் மாநாடு தொடங்கிற்று. வரவேற்புரை நிகழ்கிறது.

மாண்புமிகு காமராசர் என் பக்கம் திரும்பினார். "நீங்கள் மாநகராட்சிக் கல்வி அதிகாரியாக இருந்தீர் களே ? அப்பள்ளிகளில் பகலுணவு போடுகிறார்கள். அதனால்தான் நிறையப் பிள்ளைகள் வருகிறார்க ளாமே ! மெய்யா" என்று கேட்டார்.

"ஆம் அய்யா ! சனிக்கிழமை பாதிநாள் பள்ளிக் கூடம். அன்று சோறு போடுவதில்லை. ஆகவே, ஏழைப்பிள்ளைகள் வருகை குறைகிறது" என்றேன்.

"அப்படியா ! சாப்பாட்டிற்கு எவ்வளவு ஆகிறது ?" இது காமராசர் கேள்வி.

"சிறுவர்கள் சாப்பாடு தானே ! ஒரு சாப்பாட் டிற்கு ஒன்றரை அணா ஆகும்" என்பது எனது பதில்.

"அந்தக் கணக்கில் செலவு செய்வதைக் கொண்டு, அப்படியே சொல்லுகிறார்களா ?ஏதாவது அடிப்படை உண்டா ?"

"உண்டுங்க. படி அரிசி சமைத்தால், பத்து மாணவர்கள் சாப்பிடலாம். படி அரிசி பத்தணா.

ஆளுக்கு ஓரணா அரிசி போதும். அரிசிச் செலவில் பாதி, மேற் செலவு ; சமைக்க, சாம்பாரோ, மோரோ கொடுக்க ; கொண்டுபோய்க் கொடுக்க.

இராமகிருஷ்ண லஞ்சுஹோம் முதலாளி, திரு. இராமநாத அய்யர் மாநகராட்சி உறுப்பினர்.எனக்கு வேண்டியவர். அவரிடம் தனியாகக் கேட்டுப் பார்த்தேன். ஒன்றரை அணா நியாயமானதே என்றார்."

இதைக் கேட்ட காமராசர், "சரி, சரி ! நாட்டுப் புறப் பள்ளிகளிலும் சோறு போடவேணும். அது ஏழைகள் படிக்க உதவும். அப்படிச் செய்வதானால், எவ்வளவு பேருக்குப் போடவேண்டியிருக்கும் ?" என்று வினவினார்.

"சென்னையில் நூற்றுக்கு இருபத்தைந்து மாணவர்களுக்குப் போடுகிறோம். சிற்றூர்களில் ஏழ்மை அதிகம். ஆகவே, கூடுதலாகப் போட வேண்டியிருக்கும்."

"சந்தேகமில்லை. நூற்றுக்கு முப்பதுக்குக் குறையாமல் போடணும். எல்லாரும் பள்ளிக்குப் போகும்போது, அது எத்தனை இலட்சமாக இருக்கும் ?" என்று ஆய்ந்தார் காமராசர்.

"இருபது இலட்சத்திற்குப் போகுங்க. இப்போதைக்கு, அய்ந்தாண்டில், பத்து இலட்சம் பேருக்கு, சோறுபோட ஏற்பாடு செய்தால் சரியாக இருக்கும்" என்றேன்.

"இருநூறு நாட்கள் போடணும். எவ்வளவு பணம் என்று மனக்கணக்கு போட்டுப் பாருங்கள்." என்று ஆணையிட்டார்.

இருவரும் மனக்கணக்கு போட்டோம். இருவருடைய மதிப்பீடுகளும் ஒத்திருந்தன.

"இந்தத் தொகை பெரிதல்ல. எப்படியும் கண்டு பிடித்துக் கொடுக்கிறேன். விரைவில் விரிவான திட்டத்தைப் போட்டுக் கொடுங்கள்."

இரண்டாவது ஆணையும் பிறந்தது.

முதல் அமைச்சர் காமராசர் பேசவேண்டிய முறை வந்தது. உலகளந்த உத்தமர், எழுந்து நின்றார். சொற்பொழிவு ஆற்றினாரா? இல்லை. உரையாடினார். குழந்தைகளோடு உரையாடுவது போல் இனித்தது.

தமது பேச்சினூடே,

"அத்தனை பேரும் படிக்கணும் என்றேன். வயிற்றிலே ஈரமில்லாதவன் எப்படிப் படிப்பான்? அவனுந்தானே நம் இந்தியாவிற்குச் சொந்தக்காரன். ஏழைக் குழந்தைகளுக்கு பள்ளிக்கூடத்திலேயே சோறு போட்டு படிக்க வைக்கணும். இதைத் தள்ளிப்போட முடியுமா என்ன? இது 'மிக முக்கியம். உடனடியாகத் தொடங்கி விடணும். பணத்திற்கு எங்கே போவது ?இப்படிக் கேட்பீர்கள். வழி இருக்குது. தேவைப்பட்டால், பகல் உணவிற்கென்று, தனியாக வரி போடத் தயங்கமாட்டேன்,

எப்படியும் எல்லா ஏழைகளும் படிக்கணும். அவர் களுக்குந்தான் தேசம்'' என்று தெளிவுரையும் அருள் உரையும் ஆற்றியபோது, கைதட்டல் ஓய பல மணித்துளிகள் ஆயின.

கல்வி மடையைத் திறந்துவிடும் இப் புதிய திட்டத்தை பெரிய தலைப்பில் வெளியிட்டன செய்தித் தாள்கள்.

'ஏற்கனவே, வரிச்சுமை பெரிதாக இருக்கிறது. பதினாயிரக்கணக்கான ஊர்களில் இப்படியொரு திட்டத்தை செம்மையாக நடத்தமுடியுமா என்பது அய்யப்பாடு. இந்நிலையில் புது வரியைப் போட்டு மக்களைத் துன்பப்படுத்த வேண்டுமா ?' இப்படி எழுதிய செய்தித் தாள்களும் உண்டு.

# 7

# திட்டம் உருவாயிற்று

கர்மவீரர் காமராசரின் ஆணையைக் கல்வி அமைச்சர் மாண்புமிகு சி. சுப்ரமணியத்திடம் நேரில் தெரிவித்தேன். முதல் அமைச்சரே, தன்னிடம் தகவல் கொடுத்ததாகக் கூறினார். திட்டம் தீட்டிக் கொடுங்கள் என்றார்.

இரண்டாவது அய்ந்தாண்டு திட்டங்களைத் தீட்டும் கால கட்டம் அது.

புதிதாக எத்தனை தொடக்கப் பள்ளிகளைத் தொடங்குவது ? அவற்றிலும் ஏற்கனவே உள்ள பள்ளிகளிலுமாக எத்தனை இலடசம் சிறுவர் சிறுமியர்களைச் சேர்ப்பது ? புதிய உயர் தொடக்கப் பள்ளிகள் எத்தனை ? அந் நிலையில், எவ்வளவு பேரைக் கூடுதலாகச் சேர்க்க முடியும் ? அதே போல், உயர்நிலைப் பள்ளிக் கல்வியை எவ்வள விற்கு வளர்ப்பது ? கட்டடங்களுக்கு எத்தனை கோடி ஒதுக்குவது, தளவாடப் பொருள்களுக்கு எவ்வளவு நிதி? விஞ்ஞானத் துணைக்கருவிகளுக்கு

எவ்வளவு ஒதுக்குவது ? சோதனைக் கூடங்களின் பங்கு எத்தனை கோடி ? பள்ளிக்கூட நூல் நிலைய வளர்ச்சிக்கு மான்யம் எவ்வளவு ? பொது நூலக வளர்ச்சிக்கு எவ்வளவு பணம் ? இப்படிப் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைத் தீட்டினோம். அவற்றிற் கான செலவைக் கணக்கிட்டோம். ஒருமுறைக்கு இருமுறை சரிபார்த்தோம்.

தொடக்கப் பள்ளிகளில் பகல் உணவு போடுவ தற்குத் தனியாகத் திட்டம் போட்டோம். தொடக் கத்தில் எவ்வளவு பேருக்கு ஏற்பாடு செய்யமுடியும்? ஆண்டுக்கு ஆண்டு எத்தனை பேருக்கு அதிகப் படுத்தலாம் ? அய்ந்தாண்டின் முடிவில், எத்தனை இலட்சம் குழந்தைகள் நன்மை பெறுவர் ? இப்படி நுணுக்கமாகக் கவனித்து கணக்கிட்டோம். கல்விக் கான இரண்டாம் அய்ந்தாண்டு திட்டத்தில், பகல் உணவுத் திட்டத்தை சேர்த்து அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது.

# 8

# முதற்கோணல்

ஒவ்வொரு துறையினரும் அனுப்பிய அய்ந்தாண்டு திட்டக் குறிப்புகளை பரிசீலித்துப்பரிந்துரை செய்ய, மூவரடங்கிய உயர் அதிகாரிகள் குழு ஒன்று இருந்தது. வளர்ச்சி ஆணையர் என்ற பெரிய ஐ. சி. எஸ். அதிகாரி நிலையான உறுப்பினர். அன்றைய வளர்ச்சி ஆணையர் திரு. டி. என். எஸ். இராகவன். நிதிச் செயலர் திரு. டி. ஏ. வர்கீஸ் மற்றொரு நிலையான உறுப்பினர். மூன்றாவது உறுப்பினர் யார் ? எத்துறையின் திட்டங்கள் அலசப்படுகின்றனவோ, அத்துறையின் செயலர்.

கல்வித்துறைத் திட்டங்களைப் பரிசீலிக்கும் முறை வந்தது. குழுக்கூட்டத்திற்கு வரும்படி எனக்கு அழைப்பு வந்தது. தன்னந்தனியே சென்றேன். துணைக்கு அலுவலர்களையோ, அதிகாரிகளையோ அழைத்துக்கொண்டு போக வில்லை.

"பல திட்டங்கள் உள்ளன. பகல் உணவுத் திட்டம் பெரியது ; புதியதும். அதைக் கடைசியாக எடுத்துக் கொள்வோம். மற்றதை ஒவ்வொன்றாக விளக்குங்கள்" என்று எடுத்த எடுப்பிலேயே ஆணை பிறந்தது.

ஒவ்வொன்றாக விளக்கினேன். அத்திட்டக்குறி என்ன ? அதற்குத் தேவையென்ன ? அதை எப்படி நடைமுறைப் படுத்துவது ? அதற்கான செலவை மதிப்பிடும்போது, என்ன என்ன கூறுகள் கவனிக்கப்பட்டன ? இப்படி விவரமாக விளக்கிச் சொல்லி ஒப்புதல் கேட்டேன்.

மூன்றுமணி நேரம், பெரிய அதிகாரிகள், என்னை மடக்கப் பார்த்தார்கள். கடைசியில் எல்லாத் திட்டப் பிரிவுகளையும் ஒப்புக்கொண்டார்கள். மதிப்பீட்டில் சிறு சிறு குறைப்புகள் செய்தார்கள். அவை, குறைபட வேண்டிய வெட்டுகள் அல்ல.

"நம் நாடு உள்ள நிலையில் செய்ய வேண்டிய நல்ல திட்டங்கள் எத்தனையோ உள்ளன. அத்தனையும் ஒப்புக் கொள்ளலாம். பணம் இருந்து கொடுத்தால், வளம் பெருகும். ஆனால், நிதிப் பற்றாக் குறையே நமக்குள்ள பெரிய நோய். அதனால் எந்தத் துறைக்கும் கேட்டதை முழுதாகக் கொடுக்க முடியவில்லை.

"கல்வித் துறைக்கு இப்போது நாங்கள் ஏற்றுக் கொண்ட அத்தனை பிரிவுகளின் மதிப்பீட்டையும்

கூட்டிப் பார்த்தோம், அதுவே, நாங்கள் உத்தே சித்ததைவிட பெரிய தொகை ஆகிவிட்டது. உங்களைப் போன்ற ஆர்வமுள்ள அதிகாரிகளை ஊக்கப்படுத்த வேண்டும். அந்த ஒரே காரணத்திற்காக, இதுவரை ஏற்றுக்கொண்ட பகுதிகளுக்கான நிதி முழுவதையும் எப்படியாவது ஒதுக்கித் தருகிறோம். ஆனால் ஒரு நிபந்தனை.

"பகல் உணவுத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளச் சொல்லி வற்புறுத்தாதீர்கள். திட்டத்தில் குறை ஏதும் இல்லை. நிதி இல்லை என்பதற்காகவே இப்படி முடிவு செய்கிறோம்" என்றார்கள். இதிலே மூன்று அதிகாரிகளும் ஒன்றுபட்டு இருந்தார்கள். அம்மூவர் பெயர்கள் என்ன ? வளர்ச்சி ஆணையர் பெயர் டி. என். எஸ். ராகவன் என்பதாம். நிதித் துறைச் செயலர் பெயர் வர்கீஸ். கல்விச் செயலர் பெயர் சி. எஸ். இராமச்சந்திரன் என்பதாம். அவர்கள் நூல் நுழையும் இடங்கூடக் கொடுக்க வில்லை. அரைமணிபோல் வாதாடினேன். அடக்கமாகவும் வாதாடினேன். பயன் இல்லை. வேறு வழியின்றித் துருப்புச் சீட்டு ஒன்றைப் போட்டேன்.

"கல்வியாளன் என்ற முறையில் எல்லோரும் படிக்க வேண்டுமென்று துடிக்கிறேன். சமுதாயத்தின் கீழ் மட்டத்தில் இருப்பவர்களைப் படிக்க வைக்க, ஒரே வழிதான் உண்டு. இலவசக் கல்வி கொடுப்பதோடு, சோறும் போடாமல் முடியாது.

"தள்ளிவிடலாமென்பது ' குழுவின் ஒருமித்த கருத்து ; ஆனால் இயக்குனர் வேண்டுமென்று

பிடிவாதம் செய்கிறார் ; அவருடைய மாற்றுக் கருத்தைப் பதிவு செய்துகொள்ள வற்புறுத்துகிறார், என்று கூட்டக்குறிப்பில் எழுதிவிடுங்கள். அது போதும் எனக்கு" என்றேன்.

சில மணித்துளிகள் என்னை அமைதிப்படுத்த முயன்றார்கள்.

நான் இணங்கவில்லை. "முதல் அமைச்சரே இதை மாநாட்டில் அறிவித்துள்ளார். இதற்காகத் தனி வரி போடவும் தயங்கமாட்டேன்" என்று கூறியுள்ளார். இது வெளியிடப்பட்ட உண்மை. இருந்தும், பகல் உணவுத் திட்டங்களை அதிகாரிகள் மட்டத்தில் தள்ளிவிடுவது சரியா ? பெரியவர்களாகிய உங்கள் முடிவிற்கு விட்டு விடுகிறேன். நான் வற்புறுத்துகிறேன் என்பது மட்டும் ஏட்டில் குறிக்கப் படட்டும்'' என்றேன்.

மாறிவிட்டார்கள் அதிகாரிகள்.

"இதைப்பற்றி நாம் பரிந்துரையோ எதிர்ப்போ சொல்ல வேண்டாம்.

"அமைச்சரவை முடிவுக்கு விட்டு விடுவோம். கூட்டக் குறிப்பு அப்படி இருக்கட்டும்.''

முதற்களத்தில் வெற்றி. நடந்தவற்றைக் கல்வி அமைச்சரிடம் சொன்னேன். அவர் ஆணைப்படி, முதல் அமைச்சர் காமராசரிடமும் தெரிவித்தேன்.

'சரி ! பார்க்கலாம்' என்றார் காமராசர்.

அடுத்து ?

# 9

# இரண்டாம் இடக்கு

சில வாரங்கள் கழிந்தன. அமைச்சரவை கூடிற்று. ஒவ்வொரு துறையும் அனுப்பியுள்ள இரண்டாவது அய்ந்தாண்டுத் திட்டங்களை ஆய்ந்து பார்த்து, முடிவு செய்தது.

கல்வித்துறைத் திட்டங்கள் ஆய்விற்கு வந்தன. ஒவ்வொன்றாக விளக்கினேன். உயர் அதிகாரிகள் குழுவின் பரிந்துரையும் சுட்டிக் காட்டப்பட்டது. கடைசியாக, பகல் உணவுத் திட்ட மதிப்பீடு ஆய்வுக்கு வந்தது. அத்திட்டத்தின் தேவை, அதை எப்படி வளர்ப்பது, எந்த அடிப்படையில் செலவு கணக்கிடப்பட்டுள்ளது, என்பனவற்றை விளக்கினேன்.

‘இது பெரிய புதிய திட்டம். இச்சுமையைத் தொடர்ந்து தாங்கவேண்டும் என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும். அதிகாரிகள் குழு மட்டத்தில் இதைப்பற்றி எவ்வித முடிவுக்கும் வரவில்லை. முழு அமைச்சரவையே முடிவு செய்வதே பொருத்

தம் என்று கருதி விட்டு விட்டோம்' இப்படி அதி காரிகள் குழுவின் சார்பில் கூறப்பட்டது.

'நடுத்தர வர்க்கத்தினர் ஏற்கனவே பள்ளிக்கு வருகிறார்கள். ஏழைகளே வருவதில்லை. பள்ளி களிலேயே உணவு கொடுத்துத்தான் அவர்களை இழுக்க வேண்டும். பகல் உணவுத் திட்டத்தை விட்டு விடுவதானால், மாணவர் சேர்க்கை இலக் கையும் குறைத்துக் கொள்ளவேண்டும். வேறுவழி யில்லை' என்று எடுத்துரைத்தேன்.

உயர் அதிகாரிகள் இரண்டொருவர்—இவ் விவ காரத்தோடு தொடர்பு இல்லாதவர்கள்—தங்கள் கருத்தைச் சொல்ல அனுமதி கோரினர். அனுமதி கிடைத்தது.

'அரிசனப் பள்ளிகளில் இத்தகைய திட்டம் இருக்கிறது. அது கண்ட்ராக்டர்களுக்கும் ஆசிரியர் களுக்கும் உதவும் அளவு பிள்ளைகளுக்கு உதவுவது இல்லை. மற்ற பள்ளிகளிலும் பணச் செலவைத் தவிர பலன் இருக்காது. ஆசிரியர்கள் சாப்பாட்டை எடுத்துக்கொண்டு போய்விடுவார்கள். அந்தப் பணத்தை, வேறு நல்ல காரியம் எதற்காகிலும் செல விடலாம்.' இப்படி மூத்த அதிகாரிகள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

முதல் அமைச்சர் காமராசர் முகங் கோண வில்லை ; குறுக்கிடவில்லை. பொறுமையாகக் கேட்டார். பிறகு,

'இத்திட்டத்தை 'கண்ட்ராக்டர்' மூலம் நடத்தக் கூடாது என்பதை இப்போதே பதிந்து கொள்ளுங் கள். பொதுமக்கள் குழுவே, பகல் உணவுத் திட்டத்தை நடத்த வேண்டும்.

'அடுத்து, ஆசிரியர்களும் பள்ளிக்கூடத்தி லேயே குழந்தைகளோடு உட்கார்ந்து சாப்பிடலாம் என்று ஆணையிட வேண்டும். இந்த முடிவையும் எழுதிக் கொள்ளுங்கள்.

'பகல் உணவுத் திட்டத்தை அப்படியே ஏற்றுக் கொள்வோம்' என்று, வெகுளாமல், ஆனால் உறுதி யாகத் தீர்ப்புக் கூறினார். எனவே,

இந்திய திட்டக் குழுவிற்கு அனுப்பிய நூற்றுக் கணக்கான திட்டங்களில், தொடக்கப்பள்ளி, பகல் உணவுத் திட்டமும், முழுமையாக இடம் பெற்றது.

## 10

# முடிந்த முடிவு

சில திங்களுக்குப் பிறகு, தில்லியிலிருந்து அழைப்பு வந்தது. சென்னை மாநில அய்ந்தாண்டுத் திட்டங்கள் அனைத்தையும் பரிசீலிக்கும் திட்டக் குழுக் கூட்டத்திற்கு வரும்படி அழைப்பு வந்தது.

சென்னையிலிருந்து, முதல் அமைச்சர் காமராசர், நிதி அமைச்சர் சி. சுப்ரமணியம், அமைச்சர் மீ. பக்தவத்சலம் ஆகிய மூவரும் சென்றனர். எல்லாத் துறை இயக்குனர்களும் செயலர்களும் சென்றனர். மூன்றுநாள் கூட்டம் நடந்தது.

முதல் நாள் காலை, திட்டக்குழுவின் துணைத் தலைவர், திரு. வி. டி. கிருஷ்ணமாச்சாரியார், அமைச்சர்கள், அதிகாரிகள் அடங்கிய கூட்டத்தில் தொடக்க உரை ஆற்றினார். சென்னை மாநிலத்திற்கு எவ்வளவு தொகை ஒதுக்க முடியுமோ, அதற்கு மேலான தொகைக்கு திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. ஆங்காங்கே வெட்டுகள் வரலாம். எங்கே, எவ்வளவு வெட்டு, என்பதை சம்பந்தப்

பட்ட சிறு குழுக்கள், விரிவாக ஆலோசித்து முடிவு செய்யும். அவற்றோடு ஒத்துழைத்து, சுமுகமான முடிவுக்கு வரும்படி கேட்டுக் கொண்டார்.

பிறகு, ஒவ்வொரு அதிகாரியும் தனக்குத் தொடர்புடைய சிறுகுழுக் கூட்டத்திற்குச் சென்றார்.

'இந்திய இராச்சியங்களில், வேறெந்த இராச்சியமும் பகல் உணவுத் திட்டத்தைக் கொண்டு வரவில்லை. சென்னை மாநிலம் முன்னோடியாக இருக்கிறது. ஆனால் அகலக் கால் வைக்கலாமா ? நீங்கள் கேட்ட அளவு பணத்தை ஒதுக்க முடியாத போது, சிறிய அளவில் வெள்ளோட்டம் பார்க்கும் திட்டமாகக் குறைத்துக் கொள்ளும்படி கல்விக் குழுவில் பலர் கூறினர். சென்னை மாகாண அரசின் கொள்கை எனக்குத் தெரியும். அது நன்றாகப் புரிந்தது. எனவே, 'அடம்' பிடித்தேன். நீண்ட 'கயிறு இழுத்தல் போட்டி'க்குப் பிறகு பகல் உணவுத் திட்டத்தை முழுமையாக ஏற்றுக் கொண்டார்கள்.

இரண்டாம் நாள் மாலைக்குள், எல்லாத் துறைக் குழுக்களின் ஒப்புதல் மதிப்பீடுகள் தெரிந்து விட்டன, கூட்டிப் பார்த்ததில், இந்திய அரசு கொடுக்க முன்வந்த தொகையைவிட அய்ந்து கோடி அதிகமாக இருந்தது.

மூன்றாம் நாள் காலை ஒன்பது மணிக்கே, நாங்கள் அனைவரும், அப்போது வணிகத்துறை

அமைச்சராக இருந்த திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி யார் வீட்டில் கூடினோம். முதல் அமைச்சரும், மற்ற இரு அமைச்சர்களும் இருந்தனர்.

'மொத்தத்தில் அய்ந்து கோடி வெட்டு பெரிதல்ல. இந்திய அரசின் முடிவை ஏற்றுக் கொள்வோம். அடுத்த கேள்வி எங்கெங்கே வெட்டுவது என்பதே. அதைப்பற்றியும் ஆலோசித்தேன். பகல் உணவுத் திட்டம் மட்டுமே இரண்டு கோடியைச் சாப்பிடுகிறது. அதுவோ, இதுவரை நடத்திப் பார்க்காத திட்டம். அதைத் தள்ளிப் போட்டு விட்டால், இரண்டு கோடி மிஞ்சும். மற்ற மூன்று கோடி சிக்கனத்திற்கு, பல திட்டங்களில் அய்ந்து பத்து இலட்சம் வீதம் சரிக்கட்டி விடலாம். பகல் உணவுத் திட்டத்தைக் கைவிட்டு விட, கல்வி இயக்குனர் ஒப்புக் கொள்ளட்டும்' என்று வளர்ச்சி ஆணையர் இராகவன் வழி காட்டினார்.

நான் ஊமையாக இருந்தேன். மீண்டும்,

"இயக்குனரே ! ஏன் பேசாமல் இருக்கிறீர்கள் ? ஒரே திட்டத்தில் இரண்டுகோடி மிச்சப்படுத்த உதவுங்கள்" என்றார் அந்த அதிகாரி.

நான் பதில் சொல்லியாக வேண்டிய நெருக்கடி.

'பணம் கண்டுபிடிக்க வேண்டிய பெரியவர்கள், நம்மோடு இருக்கிறார்கள். கொள்கைகளை வகுக்க வேண்டியவர்களும் அவர்களே. அவர்கள், எதை விடச் சொன்னாலும் கீழ்ப்படிய வேண்டியவன் நான். என்னை சங்கடப்படுத்தாதீர்கள். என்றேன்.

'அது இருக்கட்டும். பகல் உணவுத்திட்டத்தில் கை வைக்காதீர்கள். வேறு எங்காகிலும் குறைத்துக் கொள்ளப் பாருங்கள்', என்று முதலமைச்சர் காமராசர் முடிவு கூறினார். பகல் உணவுத் திட்டம் தப்பிப் பிழைத்தது. அய்ந்தாண்டு திட்டத்தின் ஒரு பகுதியாகச் சேர்ந்தது. எனவே, நம் மாநிலத்தின் அடுத்த ஆண்டின் கல்விமான்யக் கோரிக்கையில் இடம் பெற்றது. சட்டமன்றம் ஒப்புதல் அளித்தது; ஆயினும் தடைகள் அகலவில்லை. உரிய கோப்பினை இங்கும் அங்கும் பல முறை தள்ளிக்கொண்டிருந்தார்கள், அலுவலர்கள். ஆகவே, தாமதம். ஆணை பிறக்கவில்லை.

# 10

# நிலை தெரிந்து

நான் பொதுக் கல்வி இயக்குனராக இருந்த காலத்தின் தொடக்கத்தில், மலபார் மாவட்டம் சென்னை மாநிலத்தில் இருந்தது. அங்கு அணைக் கரை என்னும் ஊர் இருக்கிறது. அவ்வூரில் ஆசிரியப் பயிற்சிப் பள்ளியொன்று நடந்து கொண்டிருந்தது. அதன் ஆண்டு விழாவிற்கு வரும்படி அழைக்கப்பட்டேன். அணைக்கரை, திருமதி அம்மு சுவாமிநாதன் அவர்களுடைய ஊர். ஆகவே, அவர்கள் தலையிட்டார்கள். அழைப்பை ஏற்றுக் கொள்ளும்படி பரிந்துரைத்தார்கள். அப்படியே செய்தேன்.

ஒரு நாள் முற்பகல், பயிற்சிப்பள்ளி ஆண்டு விழா. பகல் உணவைத் திருமதி சுவாமிநாதன் இல்லத்தில் முடித்துக்கொண்டு பிற்பகல் புறப்பட்டு, இரவு தங்கலுக்கு, மன்னன்தாடி என்ற ஊரைச் சேருவதெனத் திட்டமிட்டிருந்தார்கள்.

SENTAMIL COLLEGE 4784 MADURAI

வழியில் பெரிந்தல்மண்ணா என்ற ஊரைத் தாண்டிச் செல்லவேண்டும். அவ்வூரில் மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளி ஒன்று இருந்தது. அப் பள்ளிக்கு வந்து மாணவர் மன்றத்தில் பேசும்படி கடைசி நேரத்தில் எனக்கு அழைப்பு வந்தது. ஒப்புக்கொண்டேன்.

குறித்த நேரத்தில், உயர்நிலைப் பள்ளிக்குப் போய்ச் சேர்ந்தேன். மாணவ மாணவிகள் ஒழுங் காக, ஒவ்வொரு பிரிவாக, பள்ளிக்கூட வெளிச் சோலையில் அமர்ந்திருந்தார்கள். அது கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது.

ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் வியந்து கொண்டே, மேடை ஏறினேன்.

கடவுள் வாழ்த்து, வடமொழியில் பாடப் பட்டது. எல்லோரும் எழுந்து நின்றுகொண்டிருந் தோம். வாழ்த்து முடிவதற்குள், ஒரு மாணவன் மயங்கி விழுந்தான். அதைக் கண்ட இரு ஆசிரியர் கள், பாய்ந்து சென்று அவனைத் தூக்கிக்கொண்டு போனார்கள்.

அடுத்து, மலையாளப் பாட்டு இசைக்கப் பட்டது. அப்போது, இன்னொருவன் விழுந்தான் அவனையும் ஆசிரியர்கள் தூக்கிச் சென்றார்கள்.

இரண்டையும் கண்ட நான் பதறிப் போனேன். ஏதோ தவறு நடந்து இருக்கவேண்டும். குறித்த

நேரத்திற்கு வெகு முன்னதாகவே மாணவ மாணவி களைக் கொண்டு வந்து உட்கார வைத்திருக்க லாம். அப்போது, சுரீள் என வெய்யில் உறுத்திய தால், இப்படி மயங்கி விழுகிறார்கள் போலும்' என்று கருதினேன். கூட்டத்தை நடத்த மன மில்லை. 'உங்கள் அனைவருக்கும் நல்வாழ்த்து' என்பதோடு திடுமென முடித்துவிட்டேன்.

பின்னர் அதுபற்றி, தலைமை ஆசிரியரை அவரது அறையில், விசாரித்தேன். அறு நூறுபேர் படிக்கும் அப்பள்ளியில் பெரும்பாலோர் அய்ந்தாறு மைல்கள் மலைக்காட்டில் நடந்துவந்து படிக்கிறார் கள். அவர்களில் நூறு பேராவது பகலெல்லாம் பட்டினி. நடந்த அலுப்பும் பசியும் அவர்களில் பலரை மயங்கி விழச் செய்கிறது என்று தெரிந்து கொண்டேன்.

அன்றுமுதல், இவ்வாராய்ச்சியில் ஈடுபட்டேன். 'வீட்டுக்கு வீடு மண் அடுப்பே' என்று தெரிந்து கொண்டேன். பசியால் வாடும் மாணவிகளும் மாணவர்களும் எல்லாப் பள்ளிகளிலும் இருக்கிறார் கள் என்பது தெளிவாயிற்று. இதைப்பற்றியே ஒவ்வோர் கூட்டத்திலும் பேசினேன். அவ்வமயம் தூத்துக்குடிக்குச் செல்ல நேர்ந்தது.

# 11

# மாலை குவிந்தது

சென்னை மாநிலக் கல்வித்துறை நூற்று இரு பத்தேழு ஆண்டுகளாக இயங்கி வருகிறது. அதன் முதல் நூற்றாண்டு முடியும்போது, முதன் முதலாக, தமிழன் ஒருவனுக்கு—எனக்குப் பொதுக் கல்வி இயக்குனர் பதவி கிட்டியது. பிறப்பால் தமிழனாக இருப்பதோடு, தமிழ் பேசும் தமிழனாகவும் இருப்பதால், என்னைப் பல ஊர்களுக்கும் அழைத்தனர்.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அய்ம்பத்து ஆறாம் ஆண்டின் தொடக்கத்தில், தூத்துக்குடி நகர ஆசிரிய மைய ஆண்டு விழாவிற்கு அழைத்தார்கள். அதற்கு முன், இருபத்தைந்து ஆண்டு காலம் இயக்குனர் யாரும் தூத்துக்குடிக்குச் சென்றதில்லையாம். நான் ஆண்டு விழாவில் கலந்து கொண்டேன்.

அந்நகரில் அப்போது அறுபது தொடக்கப் பள்ளிகள் இருந்தன. அத்தனை பள்ளிகளும் இயக்குனரை, தமிழ் இயக்குனரைச் சிறப்பு செய்வ தில் போட்டியிட்டன. ஒரே மாலையோடு வந்த பள்ளி ஒன்றுகூட இல்லை. அவ்வமயம், என்னு டன் வந்த, என் மனைவிக்கும் விழாத் தலைவருக்கு மாக குறைந்தது மூன்று மாலைகளையாவது ஒவ்வொரு பள்ளியும் கொண்டு வந்தது. மேலும் பல மாலைகளோடு வந்த பள்ளிகளுக்கும் குறை வில்லை.

மாலைகளில் பல பெரியன. கடைசியாக ஓர் உயர் தொடக்கப்பள்ளியின் தாளாளராக இருந்த தி. மு. க. பிரமுகர் திரு கே. வி. கே. சாமி, ஆள் உயர, கனத்த மாலையை என் கழுத்தில் இட்டு, திக்கு முக்காட வைத்து விட்டார்.

பல நூறு மாலைகளைக் கண்ட என் மகன், க்ா. சு. திருவள்ளுவன் மேடையில் இருந்தபடியே,

“அப்பா, மாலை வாங்கிய பணத்தை உங்க ளிடம் கொடுத்திருந்தால், ஒரு பள்ளிக்கூடமே கட்டியிருப்பீர்கள்” என்றான்.

அவையோர் கொல்லென்று சிரித்தனர். அவன் கருத்துக்குப் புது உருவம் கொடுக்க முயன்றேன்.

“பகுத்தறிவு இயக்கத்தைச் சேர்ந்த தோழர் கே. வி. கே சாமியே பணத்தை வீணாக்குவதில் இவ்வளவு ஆர்வம் காட்டினால், மற்றவர்களை

எப்படித் திருத்துவது? சில மணி நேரங்களில் உதிர்ந்து, பயனற்றுப் போய்விடும் இம்மாலைகள், இவற்றிற்குச் செலவிட்ட பணத்தைத் திரட்டி, பகல் உணவு அறக்கட்டளை ஏற்படுத்தியிருக்கலாம். சீட்டுப் போட்டு எடுத்து, ஏதாவது ஒரு பள்ளியில் இவ்வாண்டு முழுவதும் ஏழைக் குழந்தைகளுக்குச் சோறு போட்டிருக்கலாம். அது எனது வருகையை நெடு நாளைக்கு நினைவுபடுத்திக் கொண்டிருக்கும்.

"பின்னர், அமைச்சரோ, பிற பெரியவர்களோ, வரும்போதும் இவ்வழியைப் பின்பற்றலாம். இப்படி வளர்த்தால் பல பள்ளிகளில் சாப்பாடு போட முடியும்.

"சிற்றூர்களில் உள்ளவர்கள் எப்படி செய்து, தானியத்தை அளக்கும்போது என்ன செய்கிறார்கள்?"

"முதல் அளவையை சாமிக்குக் கொடுக்கிறார்கள். அதைத் தொடவேண்டாம்.

"இரண்டாம் அளவை ஊர்க்காவலர்களுக்கு அளக்கிறார்கள். அதுவும் தொடரட்டும்.

"மூன்றாவது அளவையைப் பள்ளிக்கூட அன்னதானத்திற்குக் கொடுக்கும் புது முறையைத் தொடங்க வேண்டும். இதனால் குடியானவர் ஏழையாகிவிடப் போவதில்லை.

"பலதுளி, பெருவெள்ளம். பல களத்து மேட்டு நன்கொடைகளைக் கொண்டு, பச்சைக் குழந்தைகளுக்குச் சோறு போட்டு, படிப்பை வளர்க்கலாம். இனியாவது பணத்தை வீணாக்காமல், அப்படிச் செய்யுங்கள்" என்று வேண்டுகோள் விடுத்தேன்.

கைதட்டல் பலமாக இருந்தது. பலன் இருக்குமென்று எதிர்பார்க்கவில்லை. சில வாரங்கள் கழிந்தன.

# 12

# முடுக்கி விட்டார்

சைதாப்பேட்டை ஆசிரியர் கல்லூரியின் நூற்றாண்டு விழா. முதல் அமைச்சர் காமராசர் விழாவில் பங்கு கொண்டார். அவருடைய வருகையை ஆவலோடு எதிர்பார்த்து நின்றோம். யார்? கல்லூரி முதல்வர் எம். ஆர். பெருமாளும் நானும்.

உரிய நேரத்தில், முதல் அமைச்சர் வந்தார். காரில் இருந்து இறங்கும் வேளை, இருவரும் கை கூப்பி வணங்கினோம்.

காமராசரும் கை கூப்பினார். இமைப் பொழுதில் என் பக்கம் திரும்பினார்.

'நீங்கள் சொன்னது பலித்துவிட்டது' என்று சொல்லிக்கொண்டே வெளியே வந்தார்.

திருதிருவென, விழித்தேன். என் நிலையைச் சட்டென்று புரிந்து கொண்டார்.

"இன்று காலை, 'தினத்தந்தி' படிக்க வில்லையா ?" என்று கேட்டபடியே நடந்தார்.

'இல்லீங்க' என்று சொல்லியவாறு உடன் சென்றேன்.

"களத்துமேட்டு அளவையின்போதே, பகல் உணவுத் திட்டத்திற்கு மூன்றாம் அளவையைக் கொடுக்கச் சொல்லி தூத்துக்குடியில் பேசினீர் களாம். அப்படியே செய்வதென்று நாகலாபுரத்து ஊர்க்காரர்கள் முடிவு செய்துவிட்டார்களாம்" என்று சொல்லிக்கொண்டே நடந்தார்.

"அப்படிங்களா ? நல்ல முடிவு" என்றேன்.

"அந்த ஊரை உங்களுக்குத் தெரியுமா ?" காம ராசர் கேள்வி.

"நகரி நாகலாபுரத்தைப் பற்றி கேள்விப்பட்டி ருக்கிறேன். பார்த்ததில்லை" என்றேன்.

"நான் சொல்லுகிற நாகலாபுரம் கோயில்பட்டி தாலுக்காவில் இருக்கிறது. அந்த ஊர்க்காரர்கள் சொன்னதைச் சொன்னபடி, முடித்துவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பார்கள்.

"நல்ல அதிகாரிகள்கூட 'பைல்' பார்ப்பதில் திறமை சாலிகளாக இருக்கிறார்களே ஒழிய, பொது மக்களிடம் போய் நல்லதைச் சொல்லத் தயங்கு கிறார்கள்.

"அங்கே சொன்னதுபோல், பல ஊர்களுக்கும் போய்ச் சொன்னால், நிச்சயம் கேட்பார்கள். கேட்காத ஊர் இருந்தால், என் கவனத்திற்குக் கொண்டு வாருங்கள்."

இப்படிச் சொல்லும் நேரம், விழா மேடைக்கு வந்து விட்டோம், மேடையில் அமர்ந்ததும்,

'தாங்கள் சொல்லியபடி முயல்கிறேன்' என்று வாக்குறுதி செய்தேன்.

'அப்படியே செய்யுங்கள்' என்று கூறியபோது காமராசரின் முகம் மலர்ந்தது.

# 13

# மதிய உணவுத் தொடக்கம்

மூன்று திங்கள் உருண்டன. ஒருநாள் காலை, ஏழுமணி. முதல் அமைச்சர் காமராசரே தொலை பேசியில் என்னோடு பேசினார்.

“காமராஜ் பேசுகிறேன். சும்மா இருந்தால், காலை ஒன்பது மணிக்குள், என்னை வீட்டில் வந்து பாருங்கள். அது முடியவில்லை என்றால், பதி னோரு மணிக்குமேல் அலுவலகத்தில் பாருங்கள்,’ இது காமராசர் ஆணை.

“தங்களுக்கு இடையூறாக இல்லையென்றால் எட்டு மணிக்கு வீட்டில் வந்து பார்க்கிறேன்” என்றேன்.

அப்படியே முதல் அமைச்சரைக் கண்டேன். நான் நாற்காலியில் உட்கார்ந்ததும், “நான் கோயில்

பட்டி பக்கம் பயணஞ்செய்துவிட்டு வருகிறேன். அங்கே பத்துப் பன்னிரண்டு ஊர்களில், போதிய அளவு, தானியம் வசூலித்து வைத்திருக்கிறார்கள். நன்றாக நடத்தக்கூடியவர்கள். நீங்கள் வந்து, பகல் உணவுத் திட்டத்தைத் தொடங்கி வைக்கணுமாம். அதற்காகக் காத்திருக்கிறார்கள். உங்களுக்கும் எழுதியிருக்கிறார்களாம், சீக்கிரம் போய், தொடங்கி வைத்துவிட்டு வாருங்கள். நன்றாகத் தொடர்ந்து நடத்துவார்கள்" என்று ஆணையிட்டார்.

"அய்யா, மன்னிக்கவேண்டும். இது பெரிய திட்டம், தாங்களே தொடங்கி வைப்பதே சரி. அப்படி வேண்டிக் கொள்ளக் காத்துக் கொண்டிருந்தேன். அதற்குள் கூப்பிட்டு விட்டீர்கள். தயவு செய்து, தாங்கள் வந்து, பகல் உணவுத் திட்டத்தைத் தொடங்கி வையுங்கள்" என்று வேண்டினேன்.

'நீங்கள் சொல்கிறது தெரியுது. ஆனால் கான்ஸ்டேபில் அவங்க அதிகாரியிடந்தான், ஆணையை எதிர் பார்க்கணும்; என்னிடமல்ல. நான் ஐ. ஜிக்குத்தான் சொல்லலாம்.

'பகல் உணவை நடத்தப்போவது ஆசிரியர்களே. அவர்கள் கல்வித்துறை அதிகாரிக்கே கட்டுப்படணும். அவர்கள் உங்களை எதிர்பார்ப்பதே சரி. இப்ப, நீங்கள் போய்த் தொடங்கி விடுங்கள். வேறு ஊர்களுக்கு நான் வருகிறேன்.'

'அய்யா ! குறுக்கச் சொல்லுகிறேன், என்று நினைக்காதீர்கள். நீங்கள் தொடங்கினால்தான் திட்டத்திற்கு மதிப்பு வரும். நானும் தங்களோடு வருகிறேன். விரைவில் தொடங்கி வைக்க, நாள் குறிப்பிடுங்கள்' என்று வேண்டினேன்.

பல நாள் தள்ளிப் போடாமல், இரு நாட்கள் ஒதுக்கினார். முதல் நாள் முதல் நிகழ்ச்சியாக, எட்டையாபுரம் அரசரின் தொடக்கப்பள்ளியில், முதல் அமைச்சர் காமராசர் பகல் உணவுத் திட்டத் தைத் தொடங்கி வைக்க ஏற்பாடு செய்தோம். பின்னர்,அய்ந்தாறு ஊர்களில் காமராசரே தொடங்கி வைக்க ஏற்பாடு.

குறிப்பிட்ட நாளைக்கு நான்கு நாள் முன்ன தாக முதல் அமைச்சர் மீண்டும் என்னை அழைத்தார்.

'எட்டையாபுரம் ராஜாவுக்கு நம்ம தேதி சரி யாக வரவில்லை. முன்னாளே வைத்துக் கொள்ளச் சொல்லுகிறார். அன்றைக்கு நான் வரமுடியாது. வேறு நிகழ்ச்சிகள் உள்ளன.

'பகல் உணவு நடத்தணும் என்று கட்டாயம் பண்ண முடியுமா என்ன ? ராஜா நடத்த விரும்பி னால், அவர் சௌகரியத்தையும் கவனித்துக் கொள்வதே முறை. நீங்கள் போய்த் தொடங்கி விடுங்கள். மற்ற ஊர்களில் முன்னரே திட்டமிட்ட படி, நானே வந்து தொடங்கி வைக்கிறேன்' என்றார்.

சோகம் கவ்வியது என்னை.

'மனதில் குறை வேண்டாம். அடுத்த இரண்டு நாட்கள், நானே, உங்களோடு பல ஊர்களுக்கு வந்து இதைத் தொடங்கப் போகிறேனே. நான் சொன்னபடி செய்யுங்கள்' என்று ஆணையிட்டார்.

செங்கோலுக்கு முன்னே சங்கீதமா ?

முதல் அமைச்சர் காமராசர் ஆணைப்படி எட்டயபுரம் மன்னர் தொடக்கப்பள்ளியில் முதல் பகல் உணவு மையத்தைத் தொடங்கி வைக்கும் நற்பேற்றினை ஏற்றுக் கொண்டேன். அவர் நினைத்தபடி நடந்தது.

அடுத்தநாள் வைப்பாற்றுப் பாலத்திற்கு அடிக்கல் நாட்டும் விழா நடந்தது. முதல் அமைச்சர் காமராசர் அடிக்கல் நாட்டினார். கூட்டம் பெரியது. தடபுடலான ஏற்பாடுகள். வேட்டி ஜிப்பாவோடு சென்றிருந்த என்னைக் கண்டு அதிகாரிகள் திகைத்தார்கள்.

முதலமைச்சர் காமராசர், தமது பேச்சில் எதற்கு முதல் இடம் கொடுத்தார். பாலத்திற்கா ? இல்லை. பகல் உணவுத் திட்டத்திற்கு.

"எதற்காகச் சுதந்திரம் வாங்கினோம். எல்லோரும் வாழ. எப்படி வாழணும் ? ஆடுமாடுகள் மாதிரி, உயிரோடு இருந்தால் போதுமா ? மனிதர்களாக வாழணும். அதற்கு படிப்பு வேணும்.

பட்டினியாக இருந்தால் படிப்பு வருமா? வராது. ஏழைகளுக்கெல்லாம் பள்ளிக்கூடங்களிலேயே சாப்பாடு போடணும். அப்பதான் படிப்பு ஏறும். இதுவே முதல் வேலை; முக்கியமான வேலையுங் கூட.

"இதை நான் ரொம்ப முக்கியமாகக் கருது கிறேன். அதனால், மற்ற வேலைகளையெல்லாம் ஒதுக்கிவிட்டு, இதே வேலையாக, ஊர் ஊராகப் பிச்சையெடுக்க வருவதற்குத் தயாராக இருக்கி றேன்." செயல் வீரர் காமராசரின் இந்த அருளுரை யைப் பாராட்டிய கை தட்டல், ஓய, பல மணித் துளிகள் ஆயின.

பின்னர், அன்று மூன்று நான்கு பள்ளிகளில் புகல் உணவுத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார். அதற்கு ஆதரவு தரும்படி பொதுமக்களை வேண்டி னார்.

அடுத்த நாள் காலை, செய்தித் தாள்களைப் பிரித்தோம். மற்ற வேலைகளையெல்லாம் ஒதுக்கி விட்டு, ஏழைகளுக்கெல்லாம் பள்ளிக்கூடங்களிலே சாப்பாடு போடுவதற்காக, ஊர் ஊராகப் பிச்சை யெடுக்கத் தயாராக இருக்கிறேன்" என்று பேசிய அருளுரையை, செய்தித் தாள்கள் காமராசர், இராஜினாமா செய்யப் போவதாகத் தலைப்புச் செய்தியாக திருத்தி வெளியிட்டனர்: காங்கிரசாருக் குக் கோபம் பொங்கிற்று.

அன்றைய நிகழ்ச்சிகளுக்குப் புறப்படும் நேரம் நிருபர்கள் வந்து சேர்ந்தார்கள். காமராசர் சிரித்த படியே.

'ஏன் ? நான் முதலமைச்சராக இருப்பதில், உங்களுக்கென்ன கஷ்டம் ? விட்டுவிட்டுப் போய் விட வேண்டுமென்பதில், ஏன் இவ்வளவு ஆசை' என்று நிருபர்களைக் கேட்டுக்கொண்டே காரில் ஏறினார்.

'நிருபர்களையெல்லாம் பார்த்து, விட்டுவிடாமல், ஏற்றிக்கொண்டு வாருங்கள்' என்று காமராசர் சொன்னபோது, நிருபர்களின் முகங்களைப் பார்த்திருக்க வேண்டும்.

மாநில அரசின் ஆணை வருவதற்கு முன்பே, மக்கள் இயக்கமாக வளரத் தொடங்கியது, பகல் உணவுத் திட்டம். காமராசர் மேல் உயிரை வைத்திருந்த எண்ணற்ற ஊர்களில் விரைந்து ஏற்பாடுகள் செய்தனர். முதல் அமைச்சரே அடுத்தடுத்து பல இடங்களுக்கு வந்து தொடங்கி வைத்து ஆதரித்தார். கல்வி அமைச்சர் சி. சுப்பிரமணியமும் நிகழ்ச்சிகளில் பங்குகொண்டு ஊக்குவித்தார்.

அரசின் நிதி உதவியைப் பெறாமல், முழுக்க முழுக்க மக்கள் இயக்கமாகப் படர்ந்த, பகல் உணவுத் திட்டம் 4400 தொடக்கப் பள்ளிகளில் வேரூன்றிற்று. இலட்சத்து இருபதாயிரம் பிள்ளைகள் பயன் அடைந்தார்கள் ; நாள்தோறும் பகல் உணவு பெற்றார்கள்.

பள்ளிக்கூட பகல் உணவுத் திட்டத்திற்கு எப்படிப் பொருள் சேர்ந்தது? பல சிற்றூர்களில், பணக்காரர்கள், நிறையக் கொடுத்தார்கள். ஆனால் அவர்களோ சிலர். பலரோ நடுத்தர வர்க்கத்தினர் அல்லது ஏழைகள். அவர்கள் பங்கு பெரிது. மாதச் சம்பளம் பெற்றவர்கள், மாத நன்கொடை தந்தனர். குடியானவர்கள், களத்து மேட்டில், ஒப்படியின் போது, அன்னதானத்திற்கு உதவினார்கள். எத்தனையோ ஆயிரக்கணக்கான ஊர்களில், நாள் தோறும் பிடியரிசி ஒதுக்கினார்கள். வாரந்தோறும் பள்ளிக்கு அனுப்பிவைத்து உதவினார்கள். குடும்பப் பெண்களே, முறை போட்டுக்கொண்டு, சமைத்துக்கொடுத்து, உதவினார்கள். ஆசிரியர்கள் உதவியை எப்படிப் பாராட்டுவோம். அவர்களே உயிர் நாடி, அவர்களே் சேர்க்கும் கரங்கள், நடத்தும் கரங்கள். பதில் சொல்லும் தொண்டர்கள். வணங்குவோம் அவர்களை.

அந்நிலையில் ஆணையும் பிறந்தது. நிதி உதவியும் வந்தது. வளர்ச்சி மிகுந்தது. காமராசர் முதல் அமைச்சர் பதவியை உதறிவிட்டுப் போவதற்குள், முப்பதாயிரம் தொடக்கப் பள்ளிகளில் பதினாறு இலட்சம் மாணவ மாணவியர் உண்டனர். இதற்கு முன்னே யாரும் இவ்வளவு பெருமளவில் சாதிக்கவில்லை. ஏழை பங்காளர் காமராசர் அவர்களே, செயற்கரிய செய்த பெரியார் ஆனார். இதைப் பற்றியும் காமராசர் விளம்பரப்படுத்திக் கொண்டு, புகழ் தேடிக்கொள்ளவில்லை. பெரியதோர் சமுதாயப் புரட்சி இயக்கத்தை முடுக்கிவிட்ட

போதிலும் அனைத்திந்தியத் தலைவர்களிடம்கூட, பறைசாற்றிக் கொள்ளவில்லை.

பகல் உணவுத் திட்டம் வளரும் பருவத்தில், நேரு, காந்தி கிராமத்தின் பத்தாம் ஆண்டு விழா வில் கலந்து கொள்ள வந்தார். பிரதமரோடு அதே வான ஊர்தியில் வந்த இந்திய கல்வி அமைச்சக செயலர் திரு. சயதீன், இவ்விவரத்தைப் பிரதமருக் குத் தெரிவித்தார். மதுரை விமான நிலையத்தில் இறங்கியதும் நேரு, காமராசரை நோக்கி,

'சென்னை மாநிலத்தில் நடக்கும் அற்புத இயக் கத்தைப் பற்றி, எனக்குக்கூடச் சொல்லாமல், மூடி வைத்திருக்கிறீர்களே' என்றார். அதற்குப் பிறகு தான் அதுபற்றிய விவரக் குறிப்பு பிரதமர் நேருவுக்கு அனுப்பப்பட்டது.

# 14

# கல்விப் பெருக்கு

காமராசர் முதல் அமைச்சராக இருந்த காலம், தமிழ்நாட்டுக் கல்விக்குப் பொற்காலம். எல்லா சிற்றூர்களுக்கும் தொடக்கப்பள்ளிகள் கிடைத்தன. பேரூர்களுக்கு உயர் தொடக்கப்பள்ளிகள் வந்தன. நாட்டுப் புறங்களில் உயர்நிலைப்பள்ளிகள் ஒளி விட்டன.

அதற்கு முன், ஒரு நூற்றாண்டில் ஏற்பட்ட வளர்ச்சியை, முதல் அமைச்சர் காமராசர், எட்டாண்டுகளில் சாதித்துக் காட்டினார். பதினாறு ஆயிரம் தொடக்கப்பள்ளிகளும் அவற்றில் பதினாறு இலட்சம் குழந்தைகளும் படித்த தமிழ் நாட்டிற்குப் பொறுப்பேற்றார் காமராசர். தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை முப்பதாயிரமாக வளர்ந்தது. படிப்போர் எண்ணிக்கையோ நாற்பத்

தெட்டு இலட்சமாக உயர்ந்தது. அதில் பதினாறு இலட்சம் பேர்களுக்கு பகல் உணவு கிடைத்தது.

அறு நூற்று அய்ம்பது உயர்நிலைப் பள்ளிகளைக் கொண்டிருந்த தமிழ் நாட்டில் இரண்டாயிரத்து இரு நூறுக்கு மேற்பட்ட உயர்நிலைப் பள்ளிகள் வளரச் செய்த பெருமை, கல்வி வள்ளல் காமராசருடையதாகும். அவர் பதவி ஏற்றபோது 3.86 இலட்சம் மாணவ மாணவியர் உயர்நிலைப் பள்ளிகளில் படித்தார்கள். அந்த எண்ணிக்கையை 13 இலட்சமாக்கி மகிழ்ந்தார்.

வளர்ச்சியில் மட்டுமா தமிழ்நாடு முன்னணியில் நின்றது? இல்லை. பிரதமர் நேருவால் பிற மாநிலங்களுக்குப் பரிந்துரைக்கப்பட்ட முற்போக்கு திட்டங்கள் தமிழ் நாட்டிலேயே தோன்றின. அக்காலகட்டத்தில் தோன்றின. வளர்ந்தன.

இலவசக் கல்வியும் இலவச உணவும் சிறுவர்களைக் கவர்ந்த அளவில், சிறுமிகளைப் பள்ளிக்குக் கொண்டு வரவில்லை. உடைக் கொடைக்கு ஏற்பாடு செய்தால், சிறுமிகளைப் பள்ளிகளில் சேர்ப்பது எளிதாகுமென்று தோன்றிற்று. உடைக் கொடை, சீருடைக் கொடையாக இருந்தால் மேலும் சிறப்பு என்று கருதினோம். அரசின் ஆதரவு கிடைத்தது. பொதுமக்களின் நன்கொடைகளைக் கொண்டு, சீருடை வழங்கு விழா, பல இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டம் கடம்பூரில் அத்த கைய விழாவிற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். அது காலை நிகழ்ச்சி. அதில் நானும் குன்றக்குடி அடிக ளாரும் கலந்து கொண்டோம். அடிகளார், சற்று முன்னதாகவே விழாவிற்கு வந்தார். ஊரை நெருங் கும்போது சாலையின் இரு பக்கங்களிலும் வரிசை யாக மாணவ மாணவிகள் செல்வதைக் கண்டார். காரை நிறுத்தச் சொன்னார். கீழே இறங்கினார். குழந்தைகள் வணக்கம் கூறினார்கள்.

அவர்களைப்பார்த்து, 'ஏன் எல்லோரும் ஒரே மாதிரி உடையில் போகிறீர்கள் ?' என்று கேட்டார்.

'சாமி, எங்களைப் பாருங்கள். எவன் பணக் காரப் பையன் எவன் ஏழைப்பிள்ளையென்று அடையாளம் காட்டுங்கள்' என்று ஒரு மாணவன் கேட்டான்.

அடிகளார் அவர்களை உற்றுப் பார்த்தார்.

'வேற்றுமை தெரியவில்லையே' என்றார்.

'சாமி ! இன்னொன்று. எங்களில் பள்ள சாதிப் பையன் யார் ? பிள்ளைமார் வீட்டுப்பிள்ளை யார் ? சுட்டிக்காட்டுங்கள்' என்று வேண்டினான் மற்றொரு சிறுவன்.

மறுபடியும் உற்றுப்பார்த்தார். 'யார், எந்த சாதி என்று தெரியவில்லை' யென்றார், அடிகளார்.

"எல்லோரும் ஒன்றா ஆகணும். அதற்குத்தான் சாமி சீருடை" என்று பல மாணவர்கள் ஒரே மூச்சாகப் பதில் அளித்தார்கள்.

விழாவில் இதைக் குறிப்பிட்டு, அடிகளார் சீருடைக் கொடையை ஊக்குவித்தார்கள்.

அதே கடம்பூருக்கு அடுத்த முறை முதல் அமைச்சர் காமராசரோடு போனேன். நிகழ்ச்சி மாலை ஆறுமணிக்கு.

கோயில்பட்டியில், திடீரெனக் கொட்டிய கடும் மழையினால், ஏழு மணிக்கே போய்ச் சேர்ந்தோம். கட்டுக்கடங்காத பெருங்கூட்டம்.

முதல் அமைச்சர் காரிலேயே, நானும் மாவட்ட ஆட்சித் தலைவரும் சென்றோம். விழாப்பந்தல் ஒரு திடலில். அங்கே வந்து நின்றதும், முதல் அமைச்சர் முதலில் இறங்கினார். அடுத்து நாங்கள் இறங்கினோம். கூட்டம் காமராசரை நோக்கித் தள்ளிக்கொண்டு வந்தது. நெரிசலைச் சமாளிக்க காவல்துறையினர் பட்டபாடு, பரிதாபமாக இருந்தது.

நான்கடி நடந்ததும் காமராசர் காவல்துறையினரைப் பார்த்து, சும்மா இருக்கும்படி ஆணையிட்டார். மக்களைப் பார்த்து,

'ஏம்பா உன்னைத்தான். உங்களோடு இருந்து பேசி விட்டுப் போகவே வந்திருக்கிறோம். அதற்குள்

ஏன் ஆத்திரப்படுகிறே ! பெரியவங்க வருகிறார்கள். வழிவிடு என்று கூறியபடியே, பொதுமக்கள் தோளைத் தொட்டு வழி விலக்கிக் கொண்டே சென்றார். இரண்டு பர்லாங்கு தூரமும் பெரியவர் பாதுகாப்பில் இடிபடாமல் போய்ச் சேர்ந்தோம்,

எங்களையும் பெரியவர்கள் என்று சொல்லி இப் பெருந்தலைவர் ஊக்குவித்தார். எதற்காக ? ஏழை எளியவர்கக்கு மேலும் தொண்டு செய்வதற்காக ; நாட்டின் நன்மைக்காக.

விழா முடிந்து, ஒன்பதரை மணிக்கு அவ்வூரிலேயே இரவு சாப்பாடு. பொதுமக்கள் இயல்பை மட்டும் அல்லாது அதிகாரிகளின் இயல்பையும் உணர்ந்தவர் காமராசர்.

அலுவல்பற்றிய கூட்டங்களில், விதிமுறைகளை சுட்டிக்காட்டுவதில், முந்திரிக் கொட்டைகளாக இருக்கும் அதிகாரிகள்கூட, அமைச்சர்களோடு விருந்துக்குப் போகும்போது, சற்று பின் வாங்குவார்கள். எங்காவது ஒரு மூலையில் சிக்கிக் கொண்டு தவிப்பார்கள். இது காமராசருக்கு நன்றாகத் தெரியும். அவர் விருந்துண்ண நுழையும்போது, உடன் வந்த பெரிய அதிகாரிகளை மறப்பதே கிடையாது. அத்தனை பேரையும் கவனத்தில் வைத்துக்கொண்டு, அவர்களையும் உடன் அனுப்பச் சொல்வார். தாம் உட்கார்ந்த பந்தியில் அடுத்த சில இடங்களில் யாரையும் உட்கார விடமாட்டார்.

வந்த அதிகாரிகளை அமரச் செய்வார். பிறகு காலி யுள்ள இடங்களில் யாரும் உட்காரலாம்.

அவரோடு பயணஞ்செய்யும் போதும் சரி, விருந்துண்ணும்போதும் சரி, அதிகாரிகளை அலட்சியப்படுத்த மாட்டார். தம்முடைய பண்ணையாளாகவோ, கட்சி ஊழியராகவோ கருதாமல், பொது மக்களின் மதிப்பிற்குரியவர்கள் என்பதைக் காட்டும் வகையில் தாமே, மரியாதை காட்டுவார்.

அதிகாரிகளுக்கு வரும் பெருமையைக் கண்டு அழுக்காறு கொள்ளாத பண்பாளர், காமராசர். எனக்கு, முதல் அமைச்சர் காமராசரும் கல்வி அமைச்சர் சி. சுப்ரமணியமும் அலுவல் பார்ப்பதில் முழு உரிமை கொடுத்திருந்தது உலகறிந்த செய்தி.

உலகம் அறியாத உண்மை ஒன்று உண்டு. அது என்ன ? பேச்சுரிமை. அதற்கு மேலும், நீண்டு பேசும்படி இருவருமே ஊக்குவித்தார்கள்.

முதல் அமைச்சர் காமராசரோடு, முதலில், கலந்துகொண்ட நிகழ்ச்சியிலேயே, தாராளமாகப் பேசும்படி பெரியவர் ஆணையிட்டார். அவரை விட அதிக நேரம் பேசியதைப் பற்றி மகிழ்ந்தார், அவர் கலந்துகொண்ட எல்லா நிகழ்ச்சிகளிலும் நான் நீளமாகப் பேசினேன். பெருந்தலைவர் என்றும் முகஞ்சுளித்ததில்லை. ஒரே ஒரு முறை அவர் ஏமாந்து போனார்.

அம்முறை அவர் சாத்தூர் பகுதியில், பயணஞ் செய்தார். ஒரே நாளில் பல நிகழ்ச்சிகள். முதல் நிகழ்ச்சி சாத்தூரில். அது கல்வி பற்றியது. காமராசரும் நானும் கலந்து கொண்டோம். அவர் பேசினார். அடுத்து நான் பேசவேண்டும். என் பேச்சைக் கேட்டுவிட்டு, அடுத்த அரசியல் நிகழ்ச்சிக்குப் போகலாம் என்றார். மாவட்டப் பெரியவர்கள் பல நிகழ்ச்சிகள் இருப்பதால், உடனே புறப்பட வேண்டினார்கள். அவர் இணங்கவில்லை.

அவர் வேலைக்கு உதவியாக இருப்போமென்று, கருதி அரைமணியில் என் பேச்சை முடித்து விட்டேன்.

'என்ன இப்படிப் பண்ணிவிட்டீர்கள் ?இன்னும் நீளமாகப் பேசியிருக்கலாம்' என்றார். ஆனால் கோபிக்கவில்லை.

இமயமலை, பரங்கிமலையைக் கண்டா பொறாமைப்படும் ?

# 15

# பள்ளிச் சீரமைப்பு இயக்கம்

அந்த அந்த ஊர்மக்களின் உழைப்பையும் நன்கொடைகளையும் சேகரித்து, உள்ளூர் பள்ளிக் கூடங்களின் நிலையைச் சீராக்கும், பள்ளிச் சீரமைப்பு இயக்கம், தமிழ்நாட்டில்தான் தோன்றிற்று. அதன் புகழோ, பாரதம் முழுவதும் பரவிற்று. இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் இராசேந்திரப் பிரசாத் பள்ளிச் சீரமைப்பு மாநாடு ஒன்றைக் காண விரும்புவதாகத் தகவல் வந்தது. கூடிய வரையில் சென்னைக்கு அருகில் இருந்தால், நல்லது என்ற குறிப்பும் இருந்தது.

முதல் அமைச்சர் காமராசர் என்னை அழைத்தார்; செய்தியைச் சொன்னார். அத்தகைய மாநாட்டை எங்கே ஏற்பாடு செய்யலாம் என்று கேட்டார்.

"குடியரசுத் தலைவர் வருவது வேலூர் கிறுத்தவ மருத்துவமனையின் பொன்விழாவிற்கு

என்று கேள்வி. அப்படியாயின் வேலூரிலேயே பள்ளிச் சீரமைப்பு மாநாட்டை நடத்தலாம்.

"வேலூரில் ஏற்கனவே அத்தகைய மாநாட்டுக்கு ஏற்பாடு செய்துவிட்டு, தங்கள் தேதிக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். தாங்கள் விரும்பினால் குடியரசுத் தலைவரை அதில் பங்கு கொள்ளச் செய்யுங்கள்'' என்றேன்.

"அது நல்ல யோசனை.முடியுமானால்,வேலூர் வட்டத்தோடு பக்கத்து வட்டங்களையும் சேர்த்து பெரிய மாநாடாகவே நடத்திவிடுங்கள்'' என்றார்.

ஒப்புக் கொண்டேன். வரவேற்புக் குழுப் பொறுப்பை யாரிடம் கொடுக்கலாமென்று கேட்டேன்.

'நீங்கள் சொல்லுங்களேன்' என்றார்.

அம்மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் பெயர்களைச் சொன்னேன். "திரு முகம்மது அன்வர் எம்.பி.யைத் தலைவராகவும், திரு. வி. கே.கிருஷ்ணமூர்த்தி எம். எல். ஏ வைச் செயலராகவும் போடலாம். அதைப் பக்குவமாக ஏற்பாடு செய்ய முடியுமா ?'' என்று கேட்டார்.

"ஆகட்டும்'' என்றேன்.

முதல் அமைச்சர் ஆதரவு இருக்கிற துணிவில், வேலூர் பெரியவர்கள் கூட்டமொன்றைக் கூட்டி,

அவர் விரும்பியபடியே ஏற்பாடு செய்துவிட்டேன்.

சிலநாட்கள் சென்றன. வேலூர் பள்ளிச்சீரமைப்பு மாநாட்டிற்கு, குடியரசுத் தலைவரே வர இருந்ததால், பந்தல் ஏற்பாடுகளை நேரில் தாமே முடிவு செய்ய விரும்பினார், முதல் அமைச்சர் காமராசர். குறிப்பிட்ட நாளன்று, காமராசர் வேலூர் கோட்டை மைதானத்தைப் பார்வையிட்டார். அப்போதுப் பொதுப்பணித் துறையின் தலைமைப் பொறியர், சில பெரிய அதிகாரிகள், மாவட்ட ஆட்சியாளர், நான், உடன் இருந்தோம். பரந்த மைதானத்தில் பொருத்தமான இடத்தைத் தேர்ந்தெடுத்தார் காமராசர்.

போடப்போகும் கொட்டகை எவ்வளவு பெரிதாக இருக்கவேண்டும்? இது அடுத்த கேள்வி. மாநாடு மாலையில் நடக்க இருப்பதால், வெளியூர்க்காரர்கள் காலையிலேயே இராசேந்திரப் பிரசாத்தைப் பார்த்துவிட்டுப் போய்விடுவார்கள். ஆகவே பதினைந்து ஆயிரம் பேர்களுக்கு இடம் இருக்கும்படி போட்டால் போதுமென்று கருதினார் காமராசர்.

நான் மாற்றுக் கருத்தைக் கூறினேன்.

“பதினாறு ஆயிரம் நன்கொடையாளர்களுக்கும் நுழைவுச் சீட்டுக் கொடுத்திருக்கிறோம். தான் வர முடியாவிட்டால், வேறு யாருக்காகிலும் கொடுத்தனுப்புவர். பத்தாயிரம் ஆசிரியர்களுக்குக் குறையாமல் எதிர்பார்க்கலாம். பொதுமக்கள் சில

ஆயிரம் பேர்களாவது வந்து விடுவார்கள். அவர் களைத் தடுக்க முடியாது. ஆகவே முப்பதாயிரம் பேர்களுக்காவது இடம் வேண்டும். முப்பத்தைந் தாயிரம் பேருக்கு இடம் இருந்தால் நன்றாக இருக் கும்'' என்றேன்.

நாலுபேர் முன்பு மறுத்துப் பேசிய என்மேல் சினந்தாரா ? இல்லை. சிரித்துக்கொண்டே,

“அவருக்கு ஏன் குறை ? முப்பத்தைந்தாயிரம் பேர் இருக்கிற அளவுக்குக் கொட்டகை போட்டுக் கொள்ளுங்கள்'', என்று தலைமைப் பொறியருக்கு ஆணையிட்டார். அப்படியே நடந்தது.

மாநாட்டன்று, நிகழ்ச்சிக்கு இரண்டு மணி முன்னதாக திடீரென, காமராசர் பந்தருக்கு வந்தார். நானும் பிற கல்விஅதிகாரிகளும் அங்கு இருந்தோம். திடீரென வந்தாரே, ஏதோ, என்னவோ என்று பதட்டத்தோடு வணங்கினோம். இளநகையோடு பந்தரை ஒருமுறை கண்ணால் சுழன்று பார்த்தார். நன்கொடையாளர்கள், ஆசிரியர்கள் பகுதி அப் போதே நிறைந்திருந்தது. மாநாடுகளை நடத்து வதில் பெரும் பட்டறிவுடைய அவருக்கு மகிழ்ச்சி. என்னைப் பார்த்து, “உங்கள் கணக்கு சரியே, பொதுமக்கள் பிரிவும் சீக்கிரம் நிரம்பிவிடும்'' என்று கூறிவிட்டுச் சென்றார்.

மாநாட்டு நேரத்திற்கு, குடியரசுத் தலைவ ரோடு வந்தார். மேடைக்கு இருமருங்கிலும் நீண்ட,

ஆறுபடி 'தாலரி'களில் ஒழுங்காக அடுக்கி வைக்கப் பட்டிருந்த கல்விக் கூடங்களுக்கான பொருள் களைக் கண்டு வியந்து நின்றார், அடுக்கி வைக்கப் பட்டிருந்த பாடக் கருவிகளையும் பிறவற்றையும் கண்டு, இராசேந்திரபிரசாத் வியப்போடு, 'எவ்வளவு மதிப்பிருக்கும்' என்று கேட்டார்.

நிதி அமைச்சர், 'ஆறு ஏழு இலட்ச ரூபாய் பெறும்' என்று சொல்லி முடிப்பதற்குள், உடன் இருந்த காமராசர், ஆங்கிலத்தில்,

'இல்லை ; இல்லை ; இயக்குனரே, தகவல் கொடும்' என்றார்.

நான், 'பன்னிரெண்டு இலட்சம் பெறும்' என்று சொன்னபோது, மீண்டும், காமராசர்

'அதுவே சரி' என்று உறுதிப்படுத்தினார்.

இராசேந்திரபிரசாத், அவர் தமது உரையில்.

"மகாத்மா காந்தியும் நானும் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பதுகளில் பீகாரில் செய்ய முயன்ற முயற்சியில்... நாட்டின் வளர்ச்சித் திட்டங் களில் மக்களை ஈடுபடுத்தும் முயற்சியில் தமிழ் நாட்டில், கல்வித்துறையில் சிறந்த வெற்றி பெற்று விட்டீர்கள். அதற்காக என்னுடைய பாராட்டுதல்" என்று கூறியபோது, காந்தியின் சிறந்த வாரிசாகிய கறுப்பு காந்தி காமராசர் மனம் எவ்வளவு மகிழ்ந் ததோ ! முகத்திலும் மகிழ்ச்சி ஒளிவிட்டது.

# 16

# மூன்று நன்மைத் திட்டம்

முன்பு, சென்னை மாநில தொடக்கப் பள்ளிகளில், அரிசனப் பள்ளிகளை மட்டும் அரசே நேரடியாக நடத்தி வந்தது. அவை சொற்பம். பெரும்பாலானவை, தனியார் அல்லது நகராட்சி அல்லது மாவட்ட ஆணைக்குழுவால் நடத்தப்பட்டவை.

உயர்நிலைப் பள்ளிகளிலும் சிலவே அரசினரால் நடத்தப்பட்டன. மற்றவை மாவட்டக் கழகம் நகராட்சி, தனியார் நிறுவனங்கள், ஆகியவற்றால் நடத்தப்பட்டன.

அரசின் பள்ளிகளில் பணியாற்றிய சில ஆயிரம் பேர்களுக்கு ஓய்வுகால ஊதியம் உண்டு. மற்ற இலட்சக் கணக்கான ஆசிரியர்களுக்கு, அது, இல்லை. பிராவிடண்ட் பண்டு பணமே உண்டு.

காமராசர் முதல் அமைச்சரானதும் இதை மாற்றி அமைத்துவிட்டார். நான், இயக்குனராக,

முதன் முறை அவரைக் கண்டபோதே, "எல்லா ஆசிரியர்களுக்கும் பென்ஷன் கொடுக்க வேண்டும். அதற்கு ஒரு திட்டம் தீட்டிக் கொடுங்கள். இது உங்களோடு இரகசியமாக இருக்கட்டும். அலுவலகத்திற்குக் கூடத் தெரியவேண்டாம்" என்று ஆணையிட்டார்.

இராசகோபாலாச்சாரியார், முதல் அமைச்சராக இருந்தபோதும் இப்படியொரு திட்டம் போட்டுத் தரும்படி கேட்டார். அப்போதிருந்த அதிகாரிகள் கலந்து ஆலோசித்தார்கள். அப்படிச் செய்ய இயலாது என்று பதில் எழுதிவிட்டார்கள்.

நானே வழி வகைகளைச் சிந்தித்தேன். கல்வித் துறையின் முதற்ப் படியிலிருந்து வாழ்க்கையைத் தொடங்கியது அப்போது உதவிற்று. எந்தெந்த தகவல்கள் எதில் எதில் கிடைக்குமென்று எனக்குத் தெரியும். அவற்றின் உதவியால் நானே ஆசிரியர்களுக்கான, 'மூன்று நன்மைத் திட்ட'மொன்றைத் தீட்டினேன். செலவு மதிப்பீட்டை ஒரு முறைக்கு இரு முறை சரிபார்த்துக் கொண்டேன்.

திட்டம் ஆயத்தமாயிருப்பதை முதல் அமைச்சரிடம் சொன்னேன்.

"சரி ! சரி ! கல்வி அமைச்சர் அதுபற்றி உங்களிடம் பேசுவார்", என்றார்.

அப்படியே கல்வி அமைச்சரிடமிருந்து அழைப்பு வந்தது. திட்டத்தோடு சென்றேன். அதற்கு அடிப்படையான புள்ளி விவர வெளியீடுகளையும் என்னுடன் கொண்டு போனேன்.

கல்வி அமைச்சர், நிதித்துறை செயலரை அழைத்தார். அமைச்சர், திட்டத்தை என்னிடம் இருந்து வாங்கிப் பார்த்தார். பிறகு செயலரிடம் கொடுத்தார். அவர் தணிக்கை செய்துவிட்டு, ‘கணக்கு சரி’ என்றார்.

மூவரும் முதல் அமைச்சரிடம் சென்றோம்.

‘மதிப்பீட்டுக் கணக்கு சரியாக இருக்கிறதா ? என்று நிதித்துறை செயலரைக் கேட்டார், காமராசர்

‘ஆம்’ என்றார் செயலர், டி. ஏ. வர்கீஸ்.

‘அப்படியானால், இது நம் நால்வரோடு இரகசியமாக இருக்கட்டும். அடுத்தாண்டு வரவு செலவுத் திட்டத்தை ஆலோசிக்கும் வரையில் இரகசியமாக இருக்கட்டும். அப்போதும் நீங்களே தனியாக என் கவனத்திற்குக் கொண்டு வாருங்கள்’ என்று நிதித்துறைச் செயலருக்கு முதல் அமைச்சர் ஆணையிட்டார்.

வரவு செலவுத் திட்ட ஆலோசனையின்போது, அச்சில் ஏறிய திட்டங்களைப்பற்றி முடிவு செய்த பிறகு, நிதித்துறை செயலர்,

“இயக்குனர் புதியதொரு திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார். அவர் போட்டுள்ள செலவுக் கணக்கு சரியாக உள்ளது” என்றார்.

நான் திட்டத்தை விளக்கினேன். ‘ஏற்கனவே பெற்று வரும் பிராவிடெண்ட் பண்டோடு, ஓய்வு கால ஊதியம் கொடுக்கவேண்டும். ஆசிரியர் ஓய்

வொருவரும் கட்டாயமாக ஆயுள் காப்பு ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும்' என்று விளக்கினேன்.

பல அதிகாரிகள் குறுக்கிட்டார்கள். ஆசிரியர்களைப் போலவே, ஓய்வுகால ஊதியம் இல்லாமல் பல துறையிலும் பல்லாயிரக்கணக்கானவர்கள் துன்பப்படுகிறார்கள். கொடுக்கும் உதவியை எல்லோருக்கும் கொடுக்கவேண்டுமென்று வாதாடினார்கள்.

பொறுமையாகக் கேட்டார், காமராசர்.

"நீங்கள் சொல்வதில் தவறில்லை. எல்லோருக்கும் நியாயம் வழங்கவேண்டும். அதை எங்காவது தொடங்கவேண்டும். அப்புறம் அது எல்லாருக்கும் எட்டும்".

"இவ்வாண்டு தொடக்கப்பள்ளி ஆசிரியர்களோடு தொடங்குவோம்" என்று முடிவு செய்தார். முதல் அமைச்சர் காமராசர்.

1-4-1955 முதல் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் மூன்று நன்மைத் திட்டத்தைப் பெற்றார்கள். 14-4-1958 இல் அது உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கும் கிடைத்தது. அடுத்து கல்லூரி ஆசிரியர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. இந்தியாவில் இப்படியொரு திட்டத்தைக் கொண்டு வந்த முதல் மாநிலம் தமிழ் நாடாகும். கல்வி பரவலாக ஏழை எளியவர்களுக்குப் போதிக்க வேண்டின், அதன் ஆசிரியர்களை ஊக்குவிப்பதற்காக, காமராசர் இந்த, மூன்று நன்மைத் திட்டங்களையும் அமுல் படுத்தினார். என்னே அவரது வள்ளல் தன்மை.

## 17

# வேலை நிறுத்தம்-காமராசரின் திட்டம்

1956ஆம் ஆண்டு, அக்டோபர் 2ஆம் நாள், இந்தியா, மொழிவழி மாநிலங்களாகச் சீரமைக்கப் பட்டது. பன்மொழி மாவட்டங்கள் மொழி அடிப்படையில் பிரிக்கப்படும்போது எல்லைத் தகராறுகள் ஏற்படுவது வியப்பல்ல.

அவ்வாண்டின் தொடக்கத்தில், தமிழ்நாட்டுக்கும் கேரளத்திற்கும் இடையே அத்தகைய சிக்கல் எழுந்தது.

தேவி குளம், பீர் மேடு பகுதிகளில் வாழ்ந்தவர்களில் தமிழர்கள் பெரும்பாலோர். எனவே அப்பகுதிகளை தமிழ்நாட்டோடு சேர்க்க வேண்டுமென்று கோரிக்கை எழுந்தது. அதன்பால், இந்திய அரசின் கவனத்தை ஈர்த்து, தமிழர்களின் உணர்வினை வெளிப்படுத்த வேண்டிய நிலை உருவாயிற்று.

தேவிகுளம், பீர்மேடு போராட்டத்திற்காக, பல கட்சிகளை உள்ளடக்கிய குழுவொன்று அமைக்கப் பட்டது அக் குழுவின் தலைவராக, சர். பி. டி. இராசன் இருந்தார்.

1956ஆம் ஆண்டு பிப்ரவரி 20ஆம் நாள், தமிழ் நாடு முழுவதும் கதவடைப்பு, வேலை நிறுத்தம் முதலியவற்றிற்கு ஏற்பாடு செய்யும்படி, குழுவின் சார்பில் அறிவிப்பு வந்தது. மாணாக்கரும் அவ் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு, தமிழகத்திற்குரிய நிலத்தை மீட்க உதவும்படி கோரப்பட்டார்கள்.

வேலை நிறுத்த அறிவிப்பு வந்த இரண்டொரு நாட்களில் அன்றைய தமிழக முதல்வர் மாண்புமிகு காமராசர் தலைமை செயலகத்தில், ஆலோசனைக் கூட்டமொன்றைக் கூட்டினார்.

அக்கூட்டத்தில், நிதி அமைச்சர் சி.சுப்ரமணிய மும் உள்துறை அமைச்சர் மீ. பக்தவத்சலமும் கலந்து கொண்டார்கள்.

அதிகாரிகள் சார்பில், தலைமைச் செயலர், காவல் துறைச் செயலர், கல்வித் துறை செயலர், காவல்துறைத் தலைவர், பொதுக்கல்வி இயக்குநர் ஆகிய நானும் கலந்து கொண்டோம்.

“தேவிகுளம், பீர்மேடு விவகாரம் ஆழ்ந்த உணர்வின் அடிப்படையில் கிளம்புவது, அதைப் பக்குவமாகச் சமாளிக்க வேண்டும்”.

"பொது மக்களுக்கும் பொதுச் சொத்துக்கும் கேடில்லாமல் எப்படி சமாளிக்கலாம் ?

"காவல் துறைத் தலைவரின் திட்டமென்ன ?

மேற்கூறியவாறு, காமராசர் கலந்துரையாடலைத் தொடங்கினார்.

காவ்ல் துறைத் தலைவர் பதில் வருமாறு :

"முன்பு நடந்த வேலை நிறுத்தங்களின்போது, கல்வி நிலையங்களை மூடும்படியும் மாணாக்கர்களை வேலை நிறுத்தஞ் செய்யும்படியும் வேண்டுகோள் விடுப்பதில்லை. இம்முறை மாணாக்கரைக் குறிப்பிட்டு, தனியாக வேண்டுகோள் விடுத்திருப்பதால், எங்கள் நிலை சங்கடமாகியுள்ளது.

"மற்ற நேரங்களில் அந்தந்த ஊரிலுள்ள சமூக விரோதிகளை முன்னதாகவே காவல் நிலையத்திற்கு கொண்டுவந்து பூட்டி வைப்போம். அரசியல்வாதிகள் மட்டும் வெளியில் போராட்டம் நடத்தும்போது, வயது வந்த அவர்களை சமாளிப்பது தொல்லையல்ல. இம்முறை இளம் பிள்ளைகள்-மாணாக்கர்-கூட்டத்தோடு சேர்ந்து ஊர்வலம் போனால், ஆர்ப்பாட்டம் செய்தால், அவர்களை பிடித்து வைத்துக் கொண்டால் கூட விபரீதமாகி விடலாம்.

"மாணாக்கரைப் பொருத்தமட்டில், அவர்கள் பொதுமக்களோடு சேர்ந்து ஊர்வலம் போகாமல் இருந்துவிட்டால், அமைதியைக் காத்து விடுவோம். மாணவர்களைத் தனிமைப்படுத்த பொதுக்கல்வி இயக்குனரே உதவ வேண்டும்."

முதல்வர் காமராசர் என் பக்கம் திரும்பி, "உங்கள் யோசனை என்ன ?" என்றார்.

"தாங்கள் எப்படி ஆணையிட விரும்புகிறீர்கள் என்று தெரிந்தால், அதற்கேற்ப திட்டம் தீட்டலாம்" என்றேன்.

"அப்படியா ! எனக்குத் தோன்றியதைச் சொல்லுகிறேன். அதுவே சரியாக இருக்குமென்று சொல்லவில்லை. கலந்து பேசுவதற்காகக் கூறுகிறேன்."

"பீர்மேடு, தேவிகுளம் பற்றி, பொதுமக்கள் மட்டுமல்ல ; படித்தவர்கள் கூட உணர்ச்சி வயப்படலாம். அது பற்றி எரியச் செய்துவிடக் கூடாது. அடங்கி வெளிப்பட்டால் தப்பில்லை ; நல்லது கூட."

"நீங்கள் உடனே திட்டமிட்டு ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகருக்கும் செல்லுங்கள். ஆங்காங்கே அம்மாவட்டத்தின் கல்லூரி முதல்வர்கள், உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள், பள்ளித் தலைமை ஆசிரியைகளைக் கூட்டிப் பேசுங்கள்."

"அவர்களிடம் தைரியமாகச் சொல்லுங்கள் இப் போராட்டத்திற்கு ஆதரவான உணர்வினை நீங்கள் கொண்டிருந்தால், அதை நாங்கள் குற்றமாகக் கொள்ள மாட்டோம்."

"கல்வி நிலையங்களை, மாணாக்கரை வழி நடத்த வேண்டியவர்கள், முதல்வர்களும், பள்ளித் தலைவர்களுமே. ஆகவே. நீங்கள் அடுத்து வரும் ஒவ்வோர் நாளும், பொதுக் கிளர்ச்சிகளில் மாட்டிக் கொள்ள வேண்டாமென்று, மாணவர் கூட்டத்திலோ மாணவத் தலைவர்கள் வழியாக நிதானப் படுத்தட்டும்."

"அது, பலிக்காது என்று தோன்றினால், கல்வி நிலையத் தலைவரே முன்வந்து, நாமெல்லோரும் சேர்ந்து, கல்வி நிலையத்திற்குள் கூடி, பீர்மேடு, தேவிகுளத்தை தமிழ்நாட்டோடு சேர்க்கும்படி தீர்மானம் போட்டு அனுப்புவோம் என்று சொல்லிப் பார்க்கட்டும். அதற்கு உடன்பட்டால், சொற்பொழிவுகள் இல்லாமல் கல்வி நிலையத் தலைவரே முன்னின்று தீர்மானம் போட்டு உங்களுக்கும் மற்றவர்களுக்கும் அனுப்பச் சொல்லுங்கள்."

"அதுவும் முடியாத இரண்டொரு இடங்களில் மாணாக்கர் வேலை நிறுத்தஞ் செய்துதான் தீர்வோம் என்றால், ஊர்வலத்தில் சேராமல், வீடுகளிலேயே இருந்து விடும்படி தலைவரே சொல்லிப் பார்க்கட்டும்."

"இப்படி செய்ய முடியுமா ?" என்று காமராசர் வினவினார்,

'அய்யா' இதில் சிக்கல் இல்லை. நாளையே தொடங்கி விடுவேன். ஒரே ஒரு பாதுகாப்பு தேவை."

"எந்த கல்லூரி முதல்வர் பேரிலாவது, தலைமை ஆசிரியர் பேரிலாவது, மாணாக்கர்களைத் தீர்மானம் போடத் தூண்டினார், வீட்டில் நின்றுவிட முடுக்கி னார் என்று புகார் வந்தால், அவற்றின் பேரில் நட வடிக்கை எடுக்கமாட்டோம் என்றால் கல்லூரி முதல்வர்களும் பள்ளித் தலைவர்களும் துணிந்து இயங்குவார்கள். மாணாக்கர்களைத் தனிமைப் படுத்தி விடலாம்" என்று நான் கூறினேன்.

"ஆமாம்! ஆமாம்! நாம் சொல்லித்தான் அவர்கள் அவ்வளவு உரிமை எடுத்துக் கொள்ளு கிறார்கள். அவர்கள் பேரில் இது பற்றி நடவடிக்கை எடுக்க வேண்டாம்" என்று காமராசர் கூறிவிட்டு, காவல்துறைத் தலைவரைப் பார்த்து,

"போதுமில்லையா ?" என்றார்.

"சரியா இருக்குங்க" என்று அவர் பதில் கூறிய பின், கூட்டம் கலைந்தது.

நான் உடனே செயல்படத் தொடங்கினேன். ஒவ்வோர் மாவட்டத்திலும் கல்லூரி முதல்வர்களை யும் உயர்நிலைப் பள்ளி தலைவர்களையும் கூட்டி, கலந்துரையாடினேன். காமராசர் திட்டத்தைக் கூறினேன்.

அனைவரும் பூரித்தனர்; தெம்பு கொண்டனர்.

"இப்படி எங்களுக்கு இதுவரை யாரும் எப்போதும் பக்கபலமாக நின்றதில்லை. மாணாக் கர்களால் தொல்லை ஏற்படாதபடி பார்த்துக் கொள்வோம்" இது ஒருமித்த முடிவு.

எதிர்பார்த்தபடி நடந்ததா ? ஆம். மாணவர்கள் வேலை நிறுத்தஞ் செய்யவில்லை ; ஊர்வலங்களில் கலந்து கொள்ளவில்லை. எந்த அளவிற்கு காமராசர் வெற்றி பெற்றார் தெரியுமா ?

''கல்வி நிலையங்களும் மாணவர்களும் நீங்க லாக மற்றவர்கள் எங்களோடு எல்லைப் போராட் டத்தில் ஒத்துழைத்தார்கள்'' என்று இரத்தினச் சுருக்கமாக, சர். பி. டி. இராசன், போராட்ட நாளை யடுத்து அறிவித்தார்.

காமராசரின் அணுகுமுறை இளம்பிஞ்சுகளை கிளர்ச்சித் தீயில் தள்ளாமல் காப்பாற்றியது. கல்வி கற்கும் மாணவர்கள் அரசியல் கிளர்ச்சிகளில் தீவிர ஈடுபாடு கொண்டால் அவர்களின் முன்னேற்றம் பாதிக்கும் என்பதை உணர்ந்திருந்தார் காமராசர்.

# 18

# அழுக்காறிலாத செம்மல்

என் பேச்சுக்காக என்மேல் அழுக்காறு கொள்ளாத காமராசர், எனக்கு வந்த வரவேற்புகள், பாராட்டுகள் மாலைகளைப் பற்றியும் அழுக்காறு கொண்டதில்லை. அவரோடு கலந்துகொண்ட கல்வி நிகழ்ச்சிகளில் எனக்குச் சம பெருமை இருக்கும்படி வற்புறுத்துவார். எனக்குக் கொடுக்கும் வரவேற்பு இதழ்களை, கால நெருக்கடியிலும், முழுவதும் படித்துக் கொடுக்கச் சொன்னதுண்டு. எதற்காக ? கல்வித் தொண்டில் என்னை மேலும் மேலும் ஊக்குவிப்பதற்காக ; அதிலும் அவர் கொண்டுள்ள கல்விக் கொள்கையினை நான் செயல்படுத்துவதில் அவருக்கு என் மீதிருந்த அசையாத நம்பிக்கையினால்.

ஒருமுறை தென்காசியில் பள்ளிச் சீரமைப்பு மாநாடு நடந்தது. அதற்கு, முதல் அமைச்சர்

காமராசரோடு நானும் சென்றேன். சட்டமன்ற உறுப்பினர் அய். ஏ. சிதம்பரம்பிள்ளை நாலுக்கு மூன்று அடி அளவில் வாழ்த்துரை வாசித்து முதல் அமைச்சருக்கு அளித்தார். அடுத்து, அதே அளவில் உள்ள வாழ்த்துப் பத்திரத்தை—எனக்கானதை—படிக்கத் தொடங்கினார். காலத்தின் அருமையைக் கருதி, 'தயவு செய்து படிக்காமல் கொடுத்து விடுங்கள். நான் படித்துக் கொள்ளுகிறேன்' என்றேன்.

முதல் அமைச்சர் காமராசர் தலையிட்டார். முழுவதையும் படிக்கச் செய்தார். நான் பொறுத்துக்கொண்டேன். கல்வித் தொண்டனை ஊக்கி, வேலை வாங்குவதில் அவருக்கு இணை அவரே.

நான் பொதுக்கல்வி இயக்குனராகி இரண்டு மூன்று திங்களே ஆயின. அப்போது அழைப்பு ஒன்று வந்தது. அதைப் பார்த்ததும் அதிர்ச்சி யடைந்தேன். ஏன் ?

என் உருவப் படத்தை வண்ணாரப்பேட்டை, சர். தியாகராயர் கல்லூரியில், முதல் அமைச்சர் காமராசர் திறந்து வைக்கப்போவதாக அறிவித்தது அந்த அழைப்பு.

அரசின் ஊழியத்தில் இருக்கும்போது, ஊழியருடைய படத்தைத் திறந்து வைப்பது முறையல்ல என்று தோன்றிற்று. அதிலும் முதல் அமைச்சரே

திறந்து வைத்தால், அது தேவையில்லாத அக்கப் போருக்கு இடம் கொடுக்குமென்று கருதினேன். எனவே அதிர்ச்சியடைந்தேன்.

முதல் அமைச்சரிடம் பேட்டி கோரினேன். எளிதில், விரைவாகக் கிடைத்தது. அவரைக் கண்டதும்,

"அய்யா ! என்னை அதிகப் பிரசங்கி என்று எண்ணி விடாதீர்கள்."

"நான் வேலையில் இருக்கிறேன். தாங்கள் எங்கள் முதல் அமைச்சர், ஓய்வு பெறும்போதோ, பெற்ற பிறகோ என் உருவப் படத்தைத் திறந்து வைத்தீர்களென்றால் யாரும் குற்றம் சொல்லப்பட மாட்டார்கள். இப்போது அப்படியே செய்வது சரி யாகப் படவில்லை."

"கல்லூரியை நடத்துபவர்கள், என்னைக் கேட்காமலே இப்படிச் செய்து விட்டார்கள். இது தவறான முன்மாதிரியாகிவிடும். தயவுசெய்து அவர்களைக் கூப்பிட்டுச் சொல்லி விடுங்கள். தயவு செய்து தாங்கள் போகவேண்டாம்" என்று வேண்டினேன்.

"இருக்கட்டும்" என்று ஒரே சொல்லில் பதில் அளித்தார்.

என்ன செய்வாரென்பது விளங்கவில்லை.

திட்டமிட்டபடி சென்றார். என் உருவப் படத்தைத் திறந்து வைத்தார்.

“ஸ்ரீமான் சுந்தர வடிவேலு கறுப்பா, செவப்பா என்றுகூட எனக்குத் தெரியாது. நான் தமிழ்நாடு காங்கிரசுத் தலைவராக இருந்தபோது, பலர், கல்வித்துறை சம்பந்தமாக என்னிடம் வந்திருக்கிறார்கள். பள்ளிக்கூட நிர்வாகி வந்தாலும், நெ. து. சு.வுக்குச் சொல்லுங்கள்;அவர் உதவியாக இருப்பார் என்பார். ஆசிரியர், நிர்வாகிமேல் புகார் செய்து கொண்டு வந்தாலும், நெ. து. சு. கண்டிப்பானவர், நியாயமானவர் என்று சொல்வார். அவர் மேற்பார்வையில் இல்லாத விஷயத்தைப் பற்றியும் அவரிடமே சொல்லச் சொல்லுவார்கள். உதவிக்குப் பாத்திரமானவர்கள், என்று அவருக்குத் தோன்றிவிட்டால், எப்படியும் உதவி செய்து கொடுப்பார் என்பார்கள். மாணவர்களும் அவரிடம் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். எல்லாருடைய நம்பிக்கைக்கும் உரியவராக இருப்பதால் அவரை இயக்குனராக நியமித்தோம்.

‘‘படம் திறக்கிறது, அவரைப் பெருமைப் படுத்த அல்ல. கிராமத்தில், சாதாரண விவசாயி வீட்டில், பிறந்தவர்கூட பெரிய நிலைக்கு வரலாம் என்பதை நினைவுபடுத்தி, இளைஞர்களை ஊக்குவிப்பதற்கே’’ என்று உரையாற்றி, சிறப்பித்தார்.

அடுத்து சில ஆண்டுகளுக்குப் பின் திருவல்லிக் கேணி தேசிய பெண்கள் உயர்நிலைப் பள்ளியில்

என் முழு உருவப் படத்தைத் திறந்துவைத்த போதும் காமராசர் வாழ்த்தினார். எப்படி என் நன்றிக் கடனைச் செலுத்துவேன்? யாரிடமும் கைம்மாறு பெறாமலே, நொடியில் மறைந்துவிட்டாரே, தியாகச் செம்மல்.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபத்து ஓராம் ஆண்டு குடியரசு நாளன்று, எனக்கு 'பத்மஸ்ரீ' விருது கொடுத்தார்கள். கடற்கரை சாலையில் நடந்த குடியரசுநாள் கொண்டாட்டத்தைப் பார்த்துவிட்டு, முதல் அமைச்சர் காமராசர் இல்லம் சென்றேன். அவருக்கு மாலையிட்டு நன்றி கூறினேன். நாலு சொற்கள் சொல்லக்கூட விடவில்லை.

"மகிழ்ச்சி. விருது கொடுக்கும் யோசனை குடியரசுத் தலைவரே சொன்னது. உங்களுக்கு மிக நல்ல பெயர். இங்கே மட்டுமல்ல; தில்லியிலும்; மற்ற மாநிலங்களிலும்". என்று பாராட்டி அனுப்பி விட்டார்.

அறுபத்து மூன்றாம் ஆண்டு, 'காமராசர்' திட்டமொன்றை, அவர் உருவாக்கினார். அதன்படி, மூத்த அரசியல் தலைவர்கள் ஆட்சி பொறுப்புகளை உதறிவிட்டு. கட்சிப் பொறுப்புகளை மேற்கொள்ளவேண்டும். காமராசர், தாமே வழி காட்டினார். தாம் ஏற்றிருந்த முதல் அமைச்சர் பதவியை துறந்து விட்டார். அவ்வமயம் அவரிடம் விடை பெறுவதற்காக அதிகாரிகள் சென்றோம்.

நான் அவரைக் கண்டு, எனக்குச் செய்த பேருதவிகளுக்கெல்லாம் நன்றி கூறினேன். 'இலவசக் கல்வியை விரிவு படுத்துவதில் கடைசி, சிறு கட்டம் பாக்கியிருக்கிறது. அதையும் நிறைவேற்றி விட்டிருந்தால்...' நான் சொற்றொடரை முடிக்கவில்லை; அதற்குள் காமராசர் குறுக்கிட்டார்.

"யார் செய்தால் என்ன ? வரும் செலவு திட்டத்தில் சேர்ந்துவிடும். பக்தவத்சலம் செய்துவிடுவார். அவருக்கும் அதில் ஆர்வம் உண்டு."

"உங்க வேலையைப் பற்றி எனக்கு ரொம்பத் திருப்தி."

"எல்லாரைப் போலவே, ஆசிரியர்களும் ஆசிரியைகளும் இந்தியக் குடிகளே. அவர்களுக்குக் கருத்துரிமை உண்டு. அவங்க சொந்த விவகாரம். அவங்க எந்தக் கட்சியினராக இருந்தாலும் நாம் தலையிடக்கூடாது. ஆனால் அவங்களும் வகுப்பறையைக் கட்சிப் பிரசாரத்திற்குப் பயன்படுத்தக் கூடாது."

"இந்தப்படி, தமிழ் ஆசிரியர்களைத் தவிர எல்லாரையும் ஒழுங்குபடுத்தி விட்டீர்கள். அதற்காக உங்கள்மேல் திருப்தி. பக்குவமாக தமிழ் ஆசிரியர்களையும் சரிசெய்து விடுவீர்கள் என்று நம்புகிறேன்" என்றார்.

## 19

# உரிமை பறிக்காத உத்தமர்

நான் பொதுக்கல்வி இயக்குனரான சில வாரங்களுக்குப் பிறகு, தென்பாண்டி நாட்டிலிருந்து, ஏழாயிரம் பண்ணையிலிருந்து பெரியவர் ஒருவர் வந்து என்னைக் கண்டார். அவர் இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு, சிறை சென்றவர். முதல் அமைச்சர் காமராசருக்கு வேண்டியவர். ஓர் உயர் நிலைப் பள்ளியின் தாளாளர்.

உயர்நிலைப் பள்ளியின் வளர்ச்சிக்காக, நிதி உதவி கோரும் விண்ணப்பம் ஒன்றை என்னிடம் கொடுத்தார். படித்துப் பார்த்தேன். கவனிப்பதாகக் கூறினேன.

தாளாளர் தயங்கினார். தழதழத்த குரலோடு,

“தப்பாக நினைத்துக் கொள்ளாதீர்கள். நீண்ட கால நெருக்கத்தின் காரணமாக, இங்கு வருவதற்கு

முன் காமராசரைப் பார்த்தேன். பள்ளிக்கூடத்தைப் பற்றி விசாரித்தார்."

"நன்றாக வளர்க்கச் சொன்னார். அதற்காக நிதி உதவி கோரவே வந்திருப்பதாகத் தெரிவித்தேன். விண்ணப்பத்தின் படிவத்தையும் அவரிடம் கொடுத்துவிட்டேன். அப்படிச் செய்திருக்கக் கூடாது. தவறி விட்டேன்.

"காமராசர், தங்களிடம் அதைப்பற்றி பேசினால் வேறு விதமாக நினைத்து விடாதீர்கள். உங்களை நெருக்கணும் என்பதற்காக அப்படிச் செய்ய வில்லை" என்றார்.

"நீங்கள் செய்ததில் பிழையேதும் இல்லை. முதல் அமைச்சரே சொல்லிவிட்டால், அது என் வேலையை எளிதாக்கிவிடும். நீங்கள் சங்கடப் படத் தேவையில்லை" என்று ஆறுதல் கூறி அனுப் பினேன்.

இவ்விண்ணப்பத்தைப் பற்றி,காமராசர் ஏதாவது பரிந்துரைக்கக் கூடுமென்று எதிர்பார்த்தேன். ஒரு திங்கள் காத்திருந்தேன். முதல் அமைச்சரிடமிருந்து எவ்விதக் குறிப்பும் வரவில்லை. ஏங்கிக் கொண்டிருந்தேன். வலியச்சென்று கேட்கவும் மனம் இடந் தரவில்லை.

தியாகராய நகர் உயர்நிலைப் பள்ளியின் ஆண்டுவிழா வந்தது. முதல் அமைச்சரும் நானும் கலந்துகொண்டோம். பள்ளிக்கூட அறிக்கையில்,

தக்கர்பாபா வித்யாலயா அரிசன மாணவர்கள் அனைவரும் அங்கே படிப்பதைக் குறிப்பிட்டிருந் தார்கள். காமராசருக்கு ஒரே மகிழ்ச்சி.

"குழந்தைகள் கலைநிகழ்ச்சிகளையும் பார்த்து விட்டுப் போகிறேன்" என்று தங்கிவிட்டார்.

அதுவே தக்க சமயம் என்று எண்ணினேன். குறிப்பிட்ட தாளாளருடைய விண்ணப்பத்தைப் பற்றிய பேச்சை எடுத்தேன். ஏதாவது சாடை யுண்டா என்பதை வினயமாகக் கேட்டேன்.

முதல் அமைச்சர் சிரித்துக்கொண்டே,

"நான் இருக்கும் நிலையில், நாளைக்கு இரு நூறு முந்நூறு பேருக்குக் காது கொடுத்தாகணும். உங்க நிலைக்கு நூறு பேருக்காவது காது கொடுக் கணும்; காது கொடுத்துக் கேட்கணுமே ஒழிய, முடிவை நாமே சுயமாக எடுக்கணும். அத்தனை பேர் விருப்பப்படியும் எப்படி முடிவு எடுக்க முடியும்? உங்களுக்குச் சரியென்று பட்டபடி, முடிவு செய்யுங்கள்" என்று சொன்னபோது புன்முறுவல் இருந்தது.

"மன்னிக்கணும் அய்யா! வீட்டுக்கோ, அலு வலகத்திற்கோ, வந்து கேட்டுக்கொள்ளுகிறேன்" என்று மெல்ல இழுத்தேன்.

"வேண்டாம் என்கிறேன். உங்களிடம் நம் பிக்கை இருக்கிறது என்றேன். நீங்களே எல்லா வற்றையும் முடிவு செய்யுங்கள்" என்று முடித்த போதும் சிடுசிடுப்பு இல்லை.

உரிமையோடு பணிபுரிந்தேன்.

பொதுத் தேர்தலுக்கு முன்பு எல்லா கட்சிகளும் வாக்குறுதிகளை அள்ளி வீசும். வேட்பாளர்கள் தங்கள் விருப்பத்திற்கு, இதையும் அதையும் செய்து கொடுப்பதாக வாக்களிப்பார்கள். பல இடங்களில் நடப்பதைப் போலவே சேலம் மாவட்டத்திலும் நடந்தது. விளைவு ?

அடுத்தடுத்து, உயர்நிலைப் பள்ளிகளைக் கேட்டு போட்டி மனுக்கள் குவிந்தன. அத்தனையும் மாவட்டக் கல்வி அதிகாரியின் குறிப்போடு என் அலுவலகத்திற்கு வந்தன. ஏற்றுக்கொள்ளும் படி பரிந்துரைக்கப்பட்டவை சில. "தேவைபற்றியல்லாது போட்டி பற்றி கோரப்பட்டவை இவை. ஆகவே மறுக்கப்பட வேண்டும்"என்று குறிப்போடு வந்தவை பல. ஏற்கனவே ஒப்புக்கொண்ட நிபந்தனைகள் நிறைவேற்றப்படாததால், தள்ளப்பட வேண்டியவை சில இருந்தன.

வந்தவற்றை நானே ஆய்ந்து பார்த்து, முடிவு செய்தேன். பன்னிரண்டு உயர்நிலைப்பள்ளிகள் அனுமதிக்கப்பட்ட நிலையில், முதல் அமைச்சர் காமராசர் கூப்பிட்டு அனுப்பினார். அவர் முன் அமர்ந்ததும்,

"உயர்நிலைப் பள்ளிகளைக் கொடுக்க என்னென்ன நிபந்தனைகள் நிறைவேற்ற வேண்டும் ?" என்று முதல் அமைச்சர் கேட்டார்.

நிபந்தனைகளை வரிசையாகச் சொன்னேன்

"எந்த ஊருக்காவது, எந்த நிபந்தனையை யாவது, இவ்வாண்டு தளர்த்திக் கொடுத்திருக்கிறீர் களா?" இது அடுத்த கேள்வி.

"இல்லை" என்றேன்.

"லஙிகம் என்ற ஊருக்கு உயர்நிலைப் பள்ளி வேண்டுமாம். கொடுக்க வாய்ப்பு உண்டா?" என்று கேட்டார்.

"சென்ற ஆண்டில் முதல் மூன்று படிவங்களை அனுமதித்தோம். உயர்நிலைப் பள்ளிக்கென்று புதிய கட்டடம் கட்ட வேண்டுமென்பது நிபந்தனை களில் ஒன்று. ஓராண்டாகியும் இன்னும் கட்டி முடிக்கவில்லை. ஆகவே கொடுக்க மறுத்து விட் டோம். ஆணையும் போய்விட்டது" என்றேன்.

"அத்தொகுதி எம். எல். ஏ. என்னை வந்து பார்த்தார். உயர்நிலைப் பள்ளிக்கூட கட்டடத் தைத் திறந்து வைக்கக் கோரினார். 'வருகிறேன், ஆனால் பள்ளிக்கூடத்திற்கு அனுமதி கிடைத்து விட்டதா' என்று கேட்டேன்.

"வந்துவிடும் என்று எதிர்பார்த்தாராம். இங்கு வந்த பிறகு, அனுமதி மறுக்கப்பட்டதாகக் கேள்விப் பட்டாராம். 'ஏன் என்று தெரியவில்லை' என்கி றார். கட்டடம் இல்லையென்பது உண்மையா? திறப்பு விழாவிற்கு ஆயத்தமாயிருப்பது உண் மையா?" என்றார்.

"அய்யா! ஒரு நிமிடம் பொறுங்கள்"என்று கூறி விட்டு, கோப்பைப் புரட்டிப் பார்த்தேன். கல்வி அதிகாரி ஜனவரி திங்களில் பார்வையிட்டு, கட்டடம் கட்டப்படவில்லை என்று குறித்திருந்தார்.

"அய்யா, இப்போது ஜூன் மாதம். நான்கு மாதங்களில் முடித்து விட்டிருக்கலாம். மறுபடியும் தணிக்கை செய்து விட்டு, நாளைக்கு மறுநாள் வந்து காண்கிறேன்", என்றேன்.

"சரி" என்றார்.

அலுவலகத்திற்குச் சென்றேன். தருமபுரி பள்ளி ஆய்வாளரைத் தொலைபேசியில் அழைத்தேன். அவர் நேரில் சென்று பார்த்து, லலிகம் உயர் நிலைப் பள்ளிக் கட்டடம் முடிந்து விட்டதா ? இல்லையெனில் எந்நிலையில் உள்ளது என்பதை விவரமாகத் தெரிவிக்கச் சொன்னேன். அவரிடமிருந்து தந்தி வந்தது.

"சுவர்கள் நாலடி உயரத்தில் நிற்கின்றன். மரமும் சீமை ஓடும் வாங்க, சில வாரங்களில் கள்ளிக் கோட்டைக்குப் போவார்களாம். குறைந்தது ஆறு மாதமாவது பிடிக்கும் என்று கட்டடப் பொறுப்பாளர் சொல்லுகிறார்" என்பது தந்தி.

இதைக் கொண்டுபோய் முதல் அமைச்சரிடம் காட்டினேன். அப்போது காமராசர் சொன்னது மிகச் சுவையானது. அப்படியே எழுதுகிறேன்.

"பாருங்கள்! எவ்வளவு பெரிய புரட்டு. கட்டாத கட்டடத்தைத் திறந்து வைக்கக் கூப்பிட்டார். அதோடு நின்றாரா?

'இயக்குனர். சாதி அடிப்படையில், உயர் நிலைப்பள்ளி அனுமதி கொடுக்கிறார்' என்று புகார் சொன்னார்.

'இயக்குனருக்கு எந்த சாதி உணர்வும் கிடையாதே என்றேன்.'

'அவருக்குச் சாதி உணர்வு கிடையாது. மெய் தாங்க. ஆனால் அவங்க அமைச்சரைத் திருப்தி படுத்துவதற்காக வெள்ளாளக் கவுண்டர் ஊர்களுக்கு உயர் நிலைப் பள்ளிகளைக் கொடுத்து விட்டார். வன்னிய கவுண்டர் ஊர்களைக் கைவிட்டு விட்டார்' என்று மேலும் விரித்தார்.

'அப்படியிருக்காது. கல்வி அமைச்சரும் தலையிட்டிருக்க மாட்டார். இயக்குனரும் தனக்குச் சரியென்பதை மட்டுமே செய்வார். எவ்வளவு பெரியவர்களைத் திருப்தி படுத்தவும் மனச்சாட்சிக்கு மாறாக, எதையும் செய்யமாட்டார்' என்றேன்.

எப்படியோ! இந்தமுறை அப்படி நடந்து இருக்கிறது' என்று மறுபடியும் கூறினார்.

"எதற்கும் உங்களையும் கேட்டுப் பார்த்து விடலாமென்று உங்களை விசாரித்தேன்.

"சட்டமன்ற உறுப்பினரே எவ்வளவு பெரிய பொய்யைச் சொல்லியிருக்கிறார்! என்னிடமே சொல்லியிருக்கிறார்! இப்படிப்பட்டவர்களை வைத்துக் கொண்டுதான் நாங்களும் எங்கள் காலத்தைத் தள்ள வேண்டியிருக்கிறது. எங்களுக்கு உள்ள மண்டையிடி என்ன என்பது உங்களுக்குத் தெரிந்து போய்விட்டது.

"அவர் வந்து பார்ப்பார். நீங்கள் போட்ட உத்தரவை மாற்றவேண்டாம்", என்று சொல்லியனுப்பினார்.

அவர் வந்து பார்த்தார், ஆணையை மாற்றக் கோரவில்லை. ஆனால், மன்னிப்பு கோரினார்.

'மறந்துவிட்டேன் என்றேன்' கட்டட வேலை துரிதமாயிற்று. அடுத்த ஆண்டு உயர்நிலைப் பள்ளி துவங்க அனுமதிக்கப்பட்டது.

அரசியல் கட்சிச் சார்பற்ற கல்வி நடைமுறை, காமராசர் காலத்து, 'கண்ணி'யல்ல; உண்மையான அடிப்படைக் கொள்கை.

அன்று ஆளுங்கட்சி காங்கிரசுக்கட்சி. ஆனால் பல இடங்களில், காங்கிரசை எதிர்த்து வந்த கட்சியைச் சேர்ந்தவர்கள், முன்னோடிக் கல்வித் திட்டங்களை நடத்தி வைப்பதில் முனைப்பாக இருந்தார்கள். பகல் உணவுத் திட்டத்தையும் பள்ளிச் சீரமைப்பு மாநாடுகளையும் சீருடை வழங்கும் விழாக்களையும் மாற்றுக்கட்சிப் பெரியவர்களும் நடத்திக்

காட்டினார்கள். கல்வித் துறையோ அவர்களை ஏற்றுக் கொண்டதோடு, உடன் இருந்து ஒத்துழைத்தது. அவ்வளவு துணிச்சல் எப்படி வந்தது?

வடார்க்காடு மாவட்டம் திருப்பத்தூர் நகரில் எதிர்க் கட்சிப் பெரியவராகிய மாற்றுக் கட்சி சட்ட மன்ற உறுப்பினராக ஆன திரு. இராகவ முதலியார் தலைமையில் பகல் உணவுக்குழு அமைக்கப் பட்டது.

ஆட்சியில் உள்ளவர்கள் என்ன நினைப்பார் களோ என்று அஞ்சிய கல்வி அதிகாரிகள், அதை உடனே என் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். நான் அதைக் கல்வி அமைச்சர் மாண்புமிகு சுப்ர மணியம் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு போனேன்.

"இத்தகைய ஆக்கப் பணிகளில் கட்சிக் கண் ணோட்டம் கூடாது. கல்விப் பணியில், அதற்கு இடமே இல்லை. மேலும் அரசின் ஊழியர்களாகிய நீங்கள், கட்சி ஊழியர்கள் அல்லர்" என்று சொன் னார். முதல் அமைச்சர் காமராசரிடமும் அழைத் துப் போனார்.

முதல் அமைச்சரும் அதே முடிவை, கல்வி அமைச்சரின் தூண்டுதல் இல்லாமலேயே கூறினார்.

எனவே, கல்வித் திட்டங்களை முன்வந்து நடத்துவோர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்ப தைப்பற்றி நாங்கள் சிந்திக்கும் தேவை நீங்கி விட்டது.

காஞ்சிபுரம் நகரத்திலுள்ள எல்லாப் பள்ளிகளுக்குமாக, பொதுக் குழுவை அமைத்து, பொது மையத்திலிருந்து பகல் உணவு அனுப்ப ஏற்பாடு செய்த குழுத்தலைவர், தி. மு. க. தலைவர்களில் ஒருவராகிய திரு. ஏ. கே. தங்கவேலு முதலியார் ஆவார். பள்ளிச் சீரமைப்பு மாநாட்டை நடத்தும் பொறுப்பை ஏற்றுக் கொண்டவரும் அவரே. அதற்கு முன்பே, அனைத்திந்திய ஆதாரக் கல்வி மாநாட்டின் கூட்டுச் செயலர் பொறுப்பை, அவர், என் வேண்டுகோளின்படி, ஏற்றுக்கொண்டு, நல்ல வண்ணம் உதவினார். இப்படி, தி. மு. க. தலைவரோடு தோளோடு தோள் சேர்த்து உழைத்ததைப் பற்றி, என்னையோ என்னுடைய அலுவலகத் தோழர்களைப் பற்றியோ, சந்தேகக் கண்ணோடு பார்த்ததில்லை.

மேலும் சேலம் மாவட்டம் ஆத்தூரில், அப்போது தேர்ந்தெடுக்கப்பட்ட தி. மு. க. சட்டமன்ற உறுப்பினர் திரு. எம். பி. சுப்ரமணியம் தலைமைப் பொறுப்பை ஏற்று பள்ளிச் சீரமைப்பு மாநாட்டை நடத்தினார். அம் மாநாட்டில் முதல் அமைச்சர் காமராசரே கலந்து கொண்டு, கடைசிவரை இருந்து சிறப்பித்தது, கல்வித்துறைத் தொண்டர்களுக்குத் துணிவையும் தடையேதுமில்லாத உரிமையையும் கொடுத்தது.

அதேபோல் கோவை நகர பள்ளிச் சீரமைப்பு மாநாட்டில், அன்னாள் நகரசபைத் தலைவரும் பொது உடைமைக் கட்சி பெரியவர்களில் ஒருவரு

மாக இருந்த, தோழர் பூப்தி பங்கு கொண்டதைப் பற்றி அதிகாரிகள் எவரும் கூச்சப்படவில்லை.

கல்வியைக் கட்சி அரசியலுக்கு வெளியே வைத்திருந்தது. பல கட்சி சார்புடைய மக்களு டைய ஆதரவைத் தேடுவதற்காகக் கண்டுபிடிக்கப் பட்ட உபாயமல்ல. கல்விக் கூடங்களை அனும திப்பதிலும் கட்சிக் கண்ணோட்டம் இருக்கவில்லை.

காமராசர் ஆட்சிக் காலத்தில், உயர்நிலைப் பள்ளிகளுக்கு அனுமதி கொடுக்கும் அதிகாரம் பொதுக்கல்வி இயக்குனர் கையில் இருந்தது. 'இந்த ஊர் எங்கள் கட்சிக்கு ஆதரவானது. இங்கே எப்படியாவது உயர்நிலைப் பள்ளி அமைக்க அனுமதி கொடுக்கவேண்டும். அந்த ஊர் எதிர்க் கட்சிக்கு ஆதரவானது. அதற்கு உயர்நிலைப் பள்ளியைக் கொடுக்கவேண்டாம்' என்று முதல் அமைச்சர் காமராசரோ, கல்வி அமைச்சர் சி. சுப்ர மணியமோ ஆணையிட்டதில்லை.

பொதுக் கல்வி இயக்குனராக இருந்த எனக்கு எது சரியென்று பட்டதோ,அப்படியே முடிவு செய்ய முழு உரிமை இருந்தது. அதில் எவ்வித தலையிடு தலும் இல்லை. காமராசரின் ஒரேக் குறிக்கோள் கல்வி வசதி எல்லோருக்கும் பரவ வேண்டு மென்பதே.

ஓராண்டு, வடார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த தண்டாரம் பட்டிற்கு உயர்நிலைப் பள்ளி

வேண்டுமென்று கோரி, மனு வந்திருந்தது. அது திருவண்ணாமலையை அடுத்திருக்கிறது. சுற்றுப் பக்கத்திலுள்ள வேறு ஊர்கள் இரண்டொன்றும் அப்படியே கோரியிருந்தன. இவற்றைப் பரிசீலித்துக்கொண்டிருந்தோம்.

அதற்கு முன்புதான் பொதுத்தேர்தல் போராட்டம் முடிந்தது. அத் தேர்தலில், தண்டாரம்பட்டு காங்கிரசுக்கு எதிராக வாக்களித்தது. உயர்நிலைப் பள்ளிக்கு மனுப் போட்டிருந்த மற்ற ஊர்களோ, காங்கிரசுக்கு ஆதரவாயிருந்தன. அத்தொகுதியில் தி. மு. க. வெற்றி பெற்றது. அப்பகுதி காங்கிரசு கட்சிப் பெரியவர்கள் முதல் அமைச்சரிடம் சென்றார்கள். காங்கிரசுக்கு வாக்களித்த ஊருக்கு உயர்நிலைப் பள்ளியை பெற்றுத் தரும்படி வேண்டினார்கள். எக் காரணம் பற்றியும் அந்த ஆண்டு தண்டாரம் பட்டிற்கு உயர்நிலைப் பள்ளியைக் கொடுக்கக் கூடாது. எப்படியும் அதை நிறுத்தி வைக்க வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். காமராசர் பொறுமையாகக் கேட்டார். வழக்கம்போல், 'பார்க்கலாம்' என்று சொல்லியனுப்பினார்.

இப்படி நடந்தது எனக்குத் தெரியாது.

அடுத்தநாள் முதல் அமைச்சரைக் காண அழைப்பு வந்தது. சென்று கண்டேன். தண்டாரம் பட்டில் உயர்நிலைப் பள்ளி தொடங்க அனுமதி யளிப்பதைப்பற்றி என் கருத்தைக் கேட்டார். இன்னின்ன காரணங்களுக்காகக் கொடுக்கலாமென்று கருதுகிறேன் என்று விளக்கினேன்.

'உங்களுக்கு எது நியாயமென்று தோன்று கிறதோ அப்படியே செய்யுங்கள்' என்று ஆணை யிவிட்டார்.

திருவண்ணாமலைப் பகுதியிலிருந்து மற்ற ஊர்க்காரர்கள் உயர்நிலைப்பள்ளி வேண்டுமென்று கோரியிருந்ததை முதல் அமைச்சர் கவனத்திற்குக் கொண்டு வந்தேன்.

'எந்த ஊராயிருந்தாலும் சரி. உங்கள் இலாகா வின் விதிமுறைப்படி, உங்களுக்குச் சரியென்று தோன்றுகிறபடி முடிவு செய்யுங்கள்'. இதுவே முதல் அமைச்சர் காட்டிய பச்சைக்கொடி.

அதே ஆண்டு, காஞ்சிபுரத்திற்கு அடுத்த ஊர்களில் இத்தகைய போட்டி எழுந்தது.

காஞ்சிபுரத்திற்குக் கிழக்கே உள்ள இரு பேட்டை வாழ்மக்கள் போட்டி போட்டுக்கொண்டு, உயர்நிலைப் பள்ளிக்கு விண்ணப்பித்திருந்தார்கள்.

அப்போதுதான் நடந்து முடிந்திருந்த பொதுத் தேர்தலில் ஒரு பேட்டை காங்கிரசிற்கு ஆதரவாக இருந்தது. மற்றொரு பேட்டை, தி. மு. க. விற்கு ஆதரவு தந்தது.

கல்வித்துறையின் பரிந்துரைப்படி இரண்டில் ஒரு ஊருக்கே உயர்நிலைப்பள்ளி கொடுக்கலாம். எதற்கு என்று எடைபோடுகிறபோது. தி. மு. க. வுக்கு ஆதரவாக இருந்த பேட்டைக்கே முன்னுரிமை

இருந்தது. அந்த ஊருக்கே உயர்நிலைப் பள்ளியை அனுமதித்தேன்.

ஆணை பிறப்பித்த சில நாட்களுக்குப் பிறகு, கல்வி அமைச்சர் சி. சுப்ரமணியமும் நானும் காஞ்சி புரத்தில் ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொள்ளச் சென்றோம்.

உள்ளூர் காங்கிரசுத் தொண்டர்கள் சிலர், கல்வி அமைச்சரைப் பேட்டி கண்டனர். தி. மு. க. வுக்கு ஆதரவு கொடுத்த ஊருக்கு உயர்நிலைப்பள்ளி கொடுத்ததன் மூலம் காங்கிரசின் பெருமையைக் குறைத்துவிட்டேன் என்று ஆத்திரப்பட்டார்கள். உடன் இருந்த நான், அதுபற்றி விளக்கஞ் சொன்னேன். திரு. சி. சுப்ரம்ணியம் இருவர் தம் சொல்லையும் கேட்டபிறகு,

"இயக்குனர் ஒருதலைப். பட்சமாக நடக்கவில்லை. முறையாகவே முடிவு செய்திருக்கிறார். நீங்கள் கட்சிப் பகையை இதில் புகுத்துவது சரியல்ல" என்றார். எவ்வளவு நேர்மையான நிர்வாகம்.

ஓராண்டு, திருநெல்வேலி மாவட்டத்தில், கத்தோலிக்க திருச்சபையின் சார்பில், இரு உயர்நிலைப் பள்ளிகளுக்கு விண்ணப்பங்கள் வந்தன. ஒன்று ஆண்கள் பள்ளி; மற்றொன்று பெண்கள் பள்ளி. இரண்டும் வெவ்வேறு ஊர்களில். ஒன்றிற்கு, தேவையான அறக் கட்டளையை ஏற்படுத்துவதாகவும் மற்றொன்றிற்கு அறக் கட்டளையிலிருந்து விதி விலக்குக் கோரியும் எழுதியிருந்தார்கள்.

இரண்டும் பரிசீலனையில் இருந்தன. அவ்வமயம், நான் ஸ்ரீநகரில் நடந்த அனைத்திந்திய கல்வி இயக்குனர்கள் மாநாட்டிற்குச் சென்றிருந்தேன்.

கத்தோலிக்கர் சார்பில் மாவட்ட காங்கிரசுவாதி ஒருவர் முதல் அமைச்சரைக் கண்டு அனுமதியைத் துரிதப்படுத்திக் கோரினார். முதல் அமைச்சர் சொன்னபடி, அவரது செயலர், இக் கோரிக்கையைத் துணை இயக்குனர் முகம்மது உஸ்மானிடம் சொன்னார்.

நான் சென்னைக்கு வந்து சேர்ந்ததும், துணை இயக்குனர் உரிய கோப்போடு என்னிடம் வந்தார். கட்டவேண்டிய பணத்திற்கு விதிவிலக்கு கொடுக்க முடியாமையை விளக்கினார். பணம் கட்ட ஒப்புக் கொள்ளும் பள்ளிக்குச் சரியான இடவசதி இல்லை. இதைச் சுட்டிக் காட்டினார். கட்டடம் கட்டத் தவணை கொடுத்து அதை வேண்டுமானால் அனுமதிக்கலாம் என்றார். 'அப்படியே செய்வோம்' என்றேன்.

துணை இயக்குனர், முதல் அமைச்சருடைய பயண நிரலைக் காட்டினார். எந்தப் பள்ளியை அனுமதிக்க முடியாதோ அந்தப் பள்ளியை மாண்பு மிகு காமராசர் திறந்து வைப்பார் என்று அதில் கண்டிருந்தது. தர்ம சங்கடமான நிலை. ஆயினும் காமராசரின் கண்ணியத்தை அறிவேன்.

எனவே, துணிந்து அவர் இரவு தங்கும் குற்றாலத்திற்குத் தந்தி கொடுத்தேன். குறிப்பிட்ட உயர்

நிலைப் பள்ளியை அனுமதிப்பதா என்பதைப்பற்றி இன்னும் முடிவாகவில்லை, என்று தகவல் கொடுத்தேன்.

தந்தி கிடைத்ததும், அந்நிகழ்ச்சியை ரத்து செய்து விடும்படி ஆணையிட்டார் காமராசர். நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தவரோ சூழ்ச்சி செய்திருந்தார்.

எந்த இடத்தில் பள்ளிக்கூடம் திறக்கப்படுகிறதோ, அதே இடத்தில் உடனடியாகத் தொடர்ந்து பொதுக் கூட்டம் நடக்க, ஏற்பாடு செய்திருந்தார். இதைச் சுட்டிக் காட்டினார்கள். அப்போதும், ‘பொதுக்கூட்டம் மட்டுமே’ என்று உறுதியாகச் சொல்லிவிட்டார்.

குறித்த நேரத்தில், முதல் அமைச்சர் காமராசர் அவ்விடம் போய்ச் சேர்ந்தார். திருச்சபையின் தலைவரே விழாவிற்கு வந்திருந்தார். பல பெரியவர்கள் வந்திருந்தார்கள். எப்படியும் உயர்நிலைப் பள்ளி திறப்புவிழா நடக்கும் என்று நினைத்தார்கள்.

முதல் அமைச்சர் மேடையேறினார். ஒலி பெருக்கியிடம் சென்றார்.

‘சட்டம், ஒழுங்கைக் காப்பாற்ற வேண்டியது, முதல் அமைச்சர் பொறுப்பு. அந்தப் பொறுப்பில் இருக்கும் நானே சட்டத்தை மதிக்காமல் அலட்சியப் படுத்தினால், பொதுமக்கள் எப்படி ஒழுங்காக

நடப்பார்கள்? வேலியே பயிரை மேயக் கூடா தல்லவா? அனுமதிவராத பள்ளிக்கூடத்தை நான் திறந்து வைப்பது முறையல்ல. அனுமதி கொடுப் பதைப்பற்றி நியாய அடிப்படையில் முடிவு செய் வார்கள். அனுமதித்த பிறகு, நான் வந்து தொடங்கி வைக்கிறேன்."

இப்படி காமராசர் அறிவித்தபோது, கட்டுப் பாட்டுக்குப் பெயர் பெற்ற கத்தோலிக்க மதகுருக்கள் பரவசமாயினார்கள்.

சென்னைக்கு வந்ததும், இவ்விரு பள்ளிகளை யும் பற்றி முதல் அமைச்சர் காமராசர் என்னிடம் பேசினார். கல்வித் துறையின் முடிவுப்படி அவ் வாண்டிற்கு ஒரே ஒரு உயர்நிலைப் பள்ளியைக் கொடுத்தால் போதும் என்று ஒப்புதல் அளித்தார். அதை, சம்பந்தப்பட்டவர்கள், ஏற்றுக் கொள்ளும் படி செய்தார்.

# 20

# உரிமை மலை

சென்னை சட்டமன்ற பேரவைக்கூட்டம். இப்போதைய கலைவாணர் அரங்கில் பேரவைக் கூடிய காலம். ஓர் குறிப்பிட்ட தேதியில், கல்வி பற்றிய 'வெள்ளையறிக்கை' ஆலோசனைக்கு வந்தது. அக் கூட்டத்திற்கு வரும்படி இயக்குனராகிய எனக்கு ஆணை வந்தது. அதன்படி சென்று, அதிகாரிகள் இடத்தில் அமர்ந்தேன்.

நான் போன நேரம் கேள்வி நேரம். என்னைப் பார்த்ததும் சட்டமன்ற உறுப்பினராகிய டாக்டர் வரதராஜுலு நாயுடு எழுந்து என்னிடம் வந்தார்.

'இந்த வெள்ளையறிக்கை பற்றி, இன்றே முடிவு செய்யாவிட்டால், ஏதாவது சங்கடம் வருமா ?" என்று கேட்டார்.

கேள்வியின் பொருள் விளங்கவில்லை யென்றேன்.

'இப்போது நடத்தப் பாடத்திட்டம் அதற்கான பாடநூல்கள் இருக்கின்றனவா ? இம்முடிவுகளுக் குப் பிறகுதான் அவற்றை ஏற்பாடு செய்ய வேண் டுமா ?' என்று கேட்டார்.

"ஏற்கனவே இருந்த பாடத்திட்டம் இவ்வாண் டிற்கும் நடைமுறைக்கு வந்துவிட்டது. அதற்கான நூல்கள் பயன்படுகின்றன.

"மாற்றங்கள் செய்தால் போதிய அறிவிப்பு கொடுத்தே, புதிய பாடத்திட்டத்தை நடைமுறைக் குக் கொண்டு வருவோம். பாட நூல்களைத் தயா ரிப்பதற்கான காலத்தையும் கருத்தில் கொண்டே, அறிவிப்பு காலம் முடிவு செய்யப்படும்" என்றேன்.

திரு. நாயுடு தம் இடத்திற்குப் போய்விட்டார்.

கேள்வி நேரம் முடிந்ததும், கல்வி அமைச்சர் சி. சுப்ரமணியம் எழுந்தார். அவையின் முன் வைக் கப்பட்டுள்ள கல்வி பற்றிய வெள்ளைறிக்கையைப் 'பொறுக்குக் குழு'வின் ஆலோசனைக்கு அனுப்பலா மென்று முன்மொழிந்தார். அக்குழு உறுப்பினர் களின் பெயர்களையும் அறிவித்தார். அவை ஏற்றுக் கொண்டது.

விவாதம் நடக்குமென்று எதிர்பார்த்துச் சென் றேன். அப்படி நடக்கவில்லை. காரணம் தெரிய

வில்லை. ஆயினும் அதற்குமேல், அங்கு இல்லை. வெளியே செல்லப் புறப்பட்டேன்.

அந்நேரம், முதல் அமைச்சர் காமராசர் அவை யிலிருந்து வெளியே வந்தார். அருகிலிருந்த தன்னு டைய அறைக்கு வரச் சொன்னார். அப்படியே அச்சத்தோடு பின்தொடர்ந்தேன். உட்காரச் சொன்னார். உட்கார்ந்தேன்.

'இந்த வெள்ளையறிக்கையை விவரமாகப் படித்துப் பார்த்தீர்களா ?' என்று வினவினார்.

'ஆம்' என்றேன்.

அவற்றிலிருந்த சில யோசனைகளைக் குறிப் பிட்டுச் சொன்னார். அவற்றைப் பற்றிய என் கருத்தைக் கேட்டார். ஒவ்வொன்றைப்பற்றியும் ஒளிக்காமல் சொன்னேன். பொறுமையாகக் கேட் டார்.

'அப்படியானால், அந்த ஆட்சேபணைகளைச் சொன்னீர்களா?' இது முதல் அமைச்சரின் கேள்வி.

'எல்லா யோசனைகளையும் முதலில் எனக்கு அனுப்பி வைத்தார்கள். என் கருத்தைக் கேட்டார் கள். தங்களிடம் இப்போது சொன்னதை விரிவாக எழுத்து மூலம், கல்விச் செயலகத்திற்கு அனுப்பி விட்டேன்' என்று பதில் உரைத்தேன்.

'பின் ஏன் என்னிடம் அவற்றைப்பற்றிச் சொல்லவில்லை' என்று கேட்டார். அதிர்ச்சியடைந் தேன். சமாளித்துக்கொண்டு, மெதுவாக

'என்னுடைய கருத்துக் குறிப்புகளை முழுமையாக கல்வி அமைச்சரிடம் அப்போதே காட்டிவிட்டேன். எனக்கு அமைச்சரான அவரைத் தாண்டி, தங்களிடம் வந்து சொல்வது, கோள் சொல்வது தவறாகும் என்று எண்ணினேன். தாங்கள் விரும்பினால், இனிமேல், தங்களிடமும் வந்து சொல்லிகிறேன்'.

என்னுடைய இந்த பதிலைக் கேட்ட நொடியில்,

"வேண்டாம். நீங்கள் செய்தது சரி. உரிய அமைச்சரைத் தாண்டி என்னிடம் வரவேண்டாம்.

"பொறுக்குக்குழு ஆலோசிக்கும்போது, ஒவ்வொரு யோசனையைப் பற்றியும் உங்கள் கருத்தைக் கேட்கச் சொல்லியிருக்கிறேன். வழக்கம்போல, உங்கள் மனதில் பட்டதை ஒளிக்காமல் சொல்லி விடுங்கள். யாருக்கும் அஞ்ச வேண்டாம்.

"அனுபவமுடைய இயக்குனர், நேரத்தில் சுட்டிக் காட்டவில்லையே, என்று யாரும் பேச இடம் கொடுப்பானேன்? கூசாமல் கருத்துகளைச் சொல்லுங்கள்" என்று உரிமைப்பட்டயம் வழங்கி விட்டு, எனக்கு விடைகொடுத்தார்.

கல்வி அமைச்சர் அவையில் இருந்தார். மாலையில் சொல்லிக் கொள்ளலாமென்று அலுவலகம் சென்றேன்.

உணவு இடைவேளையின்போது, கல்வி அமைச்சரே என்னிடம் தொலைபேசியில் பேசினார்.

பொறுக்குக்குழுக் கூட்டங்களில் கல்வியின் தலைமைப் பொறுப்பாளர் என்ற உரிமையோடு, கருத்துக்களை வெளிப்படையாகக் கூறும்படி ஆணையிட்டார். ஊழியராகப் பேசாதீர்கள். உரிமையாளராகப் பேசுங்கள் என்று கூறியதை எண்ணினால் உடம்பு சிலிர்க்கிறது. எத்தகைய பொற்காலத்தில், எவ்வளவு உயர்ந்த உரிமை மலைகளோடு, பணிபுரியும் பேறு பெற்றேன்!

## 21

# தவற்றை நீக்கத் தயங்காதவர்

சென்னை அண்ணாசாலை ஆபட்ஸ்பரியில் ஒரு திருமணம். மாலையில் நடந்த வரவேற்புக்குச் சென்றேன். முன் வரிசையில் இருந்தேன். பொதுப் பணித்துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு கக்கன் உள்ளே வந்தார். எழுந்து வணங்கினேன். மதுரையில் மாவட்டக் கல்வியதிகாரியாக இருந்த காலம் முதல் நான் அவரோடு நட்பு கொண்டவன்.

எனக்கு அடுத்த இடத்தில் அமைச்சர் அமர்ந்தார்.

"முதல் அமைச்சர் காமராசர் உங்களிடம் அளவு கடந்த நம்பிக்கை வைத்திருக்கிறார். அமைச்சர்களுக்கெல்லாம் வெளிப்படையாகத் தெரிவதற்கு இன்று ஒரு வாய்ப்பு வந்தது. பழைய நண்பனாகிய எனக்கு எல்லையற்ற மகிழ்ச்சி"

என்று சொல்லியவாறே, என் கையைக் குலுக்கினார். எனக்கு ஒன்றும் புரியவில்லை.

“பல ஆண்டுகளாக, அரசினர் ஆசிரியப்பள்ளிகளுக்கு மாணவ மாணவிகளைத் தேர்ந்தெடுக்க, அலுவல் சார்பு அற்ற, மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட, குழுக்கள் இருந்தன. அது உங்களுக்குத் தெரியும்.

'தலைவர், முதல் அமைச்சரான போது, பூசல் கிளம்பிற்று. விசாரித்துப் பார்த்தார். சிலராவது கையூட்டுப் பெறுவதாகத் தெரிந்தது. அடுத்த ஆண்டு, எல்லாக் குழுக்களுக்கும் புதியவர்கள் நியமிக்கப்பட்டார்கள். இரண்டாண்டு புகார் இல்லை. மறுபடியும் பலவிதமாகப் பேச்சு அடிபட்டது. அங்கும் இங்கும் விசாரித்துத் தெரிந்து கொண்டார். இனி அத்தகைய குழுக்கள் வேண்டாமென்று முதல் முதல் அமைச்சர் சொன்னார். அதிகாரிகள் அடங்கிய குழுக்களை அமைத்து விடலாமென்றார்.

“தாழ்த்தப்பட்டவர்கள்,பின்தங்கியவர்களுக்குத் தாராளமாக இடம் கிடைப்பது கெட்டு விடாதா ?” என்ற கேள்வி பிறந்தது.

“நெ. து. சு. கல்வி இயக்குனராக இருக்கும் வரை அப்படி நடக்காது, எந்த சாதி அதிகாரிகள் குழுவில் இருந்தாலும் ஒதுக்கப்பட்டவர்களுக்கும் பின் தங்கியவர்களுக்கும் நிறைய இடம் கிடைக்கும். தம்மைவிட நன்றாகப் பார்த்துக் கொள்வார், அவர்”

என்று முதல் அமைச்சரே கூறினார். எல்லோரும் ஒப்புக் கொண்டோம். 'உங்களிடம் நிறைய எதிர் பார்க்கிறோம்' என்று பூரிப்போடு அமைச்சர் கக்கன் அறிவித்தார்.

சில நாட்களுக்குப் பிறகு, அவர் சொன்னது போல் ஓர் ஆணை வந்தது. நடைமுறைப் படுத்தி னோம். எல்லா அதிகாரிகளும் நம்பிக்கைக்கு உரிய வர்களாக, நடந்து கொண்டார்கள். காமராசரின் இந்த நல்ல முடிவினால், முன்பு கிடைத்ததைவிட அதிக இடங்கள், தாழ்த்தப்பட்ட பின்தங்கிய மக்க ளுக்குக் கிடைத்தன. கல்வி கற்கும் ஆர்வம் அதிகரித்தது.

நடத்துபவர் நல்லவராயிருந்தால் நடப்பதும் நல்லதாயிருக்கும். மேலே இருப்பவர்கள் தலையிடா விட்டால் அலுவல் பார்ப்பவர்கள் தவறு செய்ய அஞ்சுவார்கள் என்பதை நாடு உணர்ந்தது.

# 22

# மக்கள் நிலை அறிந்த தலைவர்

ஒருமுறை முதல் அமைச்சர் காமராசரும் நானும் மேலூரில் கல்வி பற்றிய நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டோம். இருவரும் மதுரை சுற்றுலா மாளிகையில் சிற்றுண்டி அருந்திவிட்டுப் புறப்பட்டோம். வழக்கம்போல, என்னையும் தம் காரிலேயே அழைத்துப் போனார்.

மூன்று கிலோ மீட்டர் தொலைவு சென்றிருப்போம். சாலையோரத்தில் கூடியிருந்த பலர், காரை நிறுத்தினர், முதல் அமைச்சர் சட்டென்று இறங்கினார். அவர்கள் அமைத்திருந்த பந்தலில் அமர்ந்தார்.

நானும் உடன் வந்த பெரியவர்களும் அவரைப் பின்பற்றினோம். எல்லோருக்கும் மாலை அணிவித்தார்கள். இதற்கிடையில் ஒருவர், 'கலர்' உடைத்துக் கொடுத்தார். முதல் அமைச்சர் வாங்கிக் கொண்

டார். ஒரு முணங்கே குடித்தார். என்னிடம் ஒரு புட்டியைக் கொடுத்தபோது, வேண்டாமென்று மறுத்தேன். வாங்கிக்கொள்ள காமராசர் சைகை காட்டினார். அவரைப் போலவே, ஒரு முணங்கு குடித்ததும் வைத்துவிட்டேன். இரு மணித்துளி களில் காரேறிப் புறப்பட்டோம். அப்போது,

'நாம் இப்பதான் சாப்பிட்டு விட்டு புறப்படு கிறோம். அது அவர்களுக்குத் தெரியும். இருந்தா லும் பெரியவர்களுக்குத் தாகத்திற்கு ஏதாவது கொடுத்தனுப்ப வேண்டுமென்பதும் ஆசை ; அவர் களுக்குப் பெருமையும் கூட.

'வேண்டாமென்றால்தான் வருத்தப்படுவார்கள். வாங்கிக் கொஞ்சம் குடித்து வீணாக்கி விட்டாலும் பரம திருப்தி அவர்களுக்கு.

'அதோடு, நம்மைக் கட்டாயப் படுத்துவதில் அய்ந்தாறு நிமிடங்களை வீணாக்கி விடுவார்கள். அதனால்தான் வாங்கிக் கொள்ளுங்கள் என்றேன்', என்று விளக்கினார். அந்த படிக்காத மேதையின் நுண்மாண் நுழை புலம் விளங்கிற்று.

மற்றொரு முறை, திருநெல்வேலி மாவட்டத்தில் அவரோடு காரில் போய்க் கொண்டிருந்தேன். உடன் இருந்த மாவட்டப் பெரியவர் ஒருவர்,

''நம்ம ஆட்கள் தேவையில்லாமல் சுமப்பதில் கெட்டிக்காரர்கள். அதோ போகிற கிழவர், தம் செருப்பைக் காலில் போட்டுக்கொண்டு போகாமல்

கம்பில் கட்டி, தோளில் சுமந்து கொண்டு போகி ராரே" என்று குறைப்பட்டார்.

உடனே முதல் அமைச்சர் காமராசர்,

'உங்களுக்கென்ன ? சொல்வது சுலபம். அவருக்கல்லவா தெரியும் அதிலுள்ள சிரமம்.

'நீங்க நினைத்தபோதெல்லாம் செருப்பு வாங்க வசதியிருக்குது. அவரோ, ஒருமுறை வாங்கின செருப்பை எவ்வளவு காலம் தள்ள முடியுமோ, அவ்வளவு காலந் தள்ளியாகணும். தெருவில், சாலையில் வெறும் காலோடு நடந்துவிட்டு காட்டிலே மாத்திரம் செருப்பு போட்டுக் கொண்டு நடந்தால்தான் ஒரு ஜதை வைத்துக்கொண்டு பல ஆண்டு தள்ள முடியும்' என்றார். ஏழைகளின் நிலையை எவ்வளவு நன்றாக உணர்ந்திருந்தார் !

# 23

# பிறர் கருத்தை மதித்த பண்பாளர்

முதல் அமைச்சர் காமராசரிடம் நான் ஊழியஞ் செய்த அத்தனை நீண்ட காலம் வேறு எவரிடமும் பணிபுரியவில்லை. அந்த நீண்ட காலத்தில்,

'இதைப் பற்றி முதல் அமைச்சர் கருத்து ஏது வாக இருக்கும்? எதைச் சொன்னால் அவருக்கு நிறைவு ஏற்படும்? எப்படிச் சொன்னால் வெகுளா மல் கேட்பார்', என்று எண்ணி மண்டையை உடைத்துக் கொண்டதில்லை.

எல்லா நேரங்களிலும் எதைப் பற்றிப் பேசினா லும், உள்ளத்தில் உணர்ந்ததை உணர்ந்தபடியே ஒளிக்காமல், மேற்பூச்சு இல்லாமல் பேசியுள்ளேன்.

அதே இயல்புக்குப் பேர் போனவர், தியாகச் செம்மல் காமராசர். எனவே என்றும் என்மேல் எரிந்து விழுந்ததில்லை. எவ்வேளையிலும் என்னி டம் சிடுசிடுப்பைக் காட்டியதில்லை.

அவ்வளவு பெரிய பண்பாளராகிய காமராசரிடம் ஒரு முறை, பொதுமக்கள் முன்னிலையில், 'அதிகப் பிரசங்கி'யாக நடந்து விட்டேன். எப்போது அப்படி நடந்தேன் ? என்ன தவறு அது ?

திருநெல்வேலி மாவட்டம் திசையன்விளையில் பள்ளிச் சீரமைப்பு மாநாடு ஒன்று நடந்தது. அது நம் மாநிலத்தில் நடந்த, நான்காவது மாநாடாகும். ஆயினும், முதல் அமைச்சர் காமராசர் கலந்து கொள்ளும் முதல் மாநாடு அது.

மக்கள் ஆர்வமோ பெரிதாக இருந்தது. கூட்டமோ பெருந்திரளாக இருந்தது. ஆசிரிய ஆசிரியைகளும் பொதுமக்களும் மட்டுமா குழுமியிருந்தனர்? கிறித்தவ சமயப்போதகர்கள் பலர், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் அநேகர் மாநாட்டிற்கு வந்து சிறப்பித்தனர்.

அம்மாநாட்டைத் தொடங்கி வைத்தார் காமராசர். தமக்கே உரிய சீரிய பாணியில் பேசினார். நேருக்கு நேர் பேசும் உரை அது. ஒவ்வோர் ஊர்ப் பொதுமக்களும் ஆங்காங்கே உள்ள பள்ளிகளைத் தங்கள் உதவியால், முயற்சியால், சீரமைக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டார். போதிய வசதிகள் உள்ள பள்ளிகளிலேயே தரமான படிப்பை எதிர்பார்க்க முடியுமென்பதைச் சுட்டிக் காட்டினார். தொடர்ந்து உரையாடிய முதல் அமைச்சர்,

'ஏழைப் பிள்ளைகள் பள்ளிக்கூடத்தில் படித்தால்தான் உண்டு. அவர்களுக்கு வீட்டில் பாடஞ் சொல்லிக் கொடுக்க யார் இருக்கிறார்கள்? அவர்கள்

பெற்றோர்களுக்கோ எழுதப் படிக்கக் கூடத் தெரியாது. ஆகவே, ஏழை மாணவ மாணவிகள் உதவியின்றித் தவிக்கிறார்கள்.

'மாறாக, பணக்காரப் பிள்ளைகளுக்கு ஒவ்வொரு பாடத்திற்கும் ஓர் ஆசிரியரை அமர்த்தி, டியூஷன் சொல்லிக் கொடுப்பார்கள்.

'ஏழைகளுக்கு அவ்வாறு செய்துகொள்ள முடியாதே'.

'அத்தகையோருக்கு, பள்ளிக்கூடத்திலேயே, ஆசிரியர்களே,கூடுதலாகப் பாடங்கற்றுக் கொடுக்க, ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்கும் திட்டம் வகுக்கும்படி கல்வி இயக்குனரைக் கேட்டுக் கொள்ளுகிறேன்', என்று வழிகாட்டினார்.

அவருக்குப் பின்னால் நான் பேசினேன் ; மேற்படி யோசனையைக் குறிப்பிட்டு,

'பகல் உணவுத் திட்டத்தைத் தொடங்கினோம். அது பாதியில் இருக்கிறது. இன்னும் எத்தனையோ பள்ளிகளில் அதைச் செயல்படுத்த வேண்டியிருக்கிறது. அடுத்த முயற்சி பள்ளிச் சீரமைப்பு இயக்கம். அது இப்போதுதான் முளைத்திருக்கிறது. இந்த இருபெரும் பணிகளையும் பொறுப்புகளையும் ஆசிரியர்களே தாங்குகிறார்கள். மேற்பார்வைப் படிப்பு முறையையும் செயல்படுத்த வேண்டியவர்கள் அவர்களே. சட்டென்று, பல சுமைகளைப் போட்டால் தாங்க மாட்டார்கள். ஆகவே, பகல் உணவுத்

திட்டமும் பள்ளிச் சீரமைப்பு இயக்கமும் அநேகமாக எல்லா பள்ளிகளுக்கும் பரவிய பிறகு, 'மேற்பார்வைப் படிப்பை'க் குறித்து சிந்திக்கிறோம். சற்று பொறுத்துக் கொள்ளுமாறு, முதல் அமைச்சரை வேண்டிக் கொள்ளுகிறேன்' என்று முடித்தேன்,

பலர் திடுக்கிட்டனர். அவையோர் முகங்களில் அதிர்ச்சி. சொற்சோர்வு பட்டேனோ என்று அஞ்சினேன்.

நான் பேசி முடித்ததும் காமராசர் அமைதியாக எழுந்தார். ஒலி பெருக்கியிடம் சென்றார்.

"பொதுக்கல்வி இயக்குனர் சொன்னதே சரி. எடுத்ததை முடித்த பிறகே, அடுத்ததைத் தொடங்கட்டும். நல்ல கருத்தைத் தோன்றியதும் சொல்லி விட்டேன். அவ்வளவே. ஆசிரியர்களும் இயக்குனரும் கலந்து ஆலோசித்து, எப்போது தொடங்கலாம் என்பதை முடிவு செய்யட்டும்'', என்று சுருக்கமாகச் சொல்லிவிட்டு அமர்ந்தார்.

அமைதி பெற்றேன். அப்போது மட்டுமா? இல்லை.எப்போதும் அமைதியாகப் பணிபுரிந்தேன். முதல் அமைச்சர் காமராசர் இக் குறையை மறந்தே விட்டார். வேறு ஒருவரிடம் அப்படித் தவறு செய்திருந்தால், என்ன நடந்திருக்கும்?

இருந்த இடம் தெரியாமல் ஒழிக்கப்பட்டிருப்பேன். காமராசருக்குக் குறுக்கே பேசினபோதோ, மன்னர் அலெக்சாண்டரை எதிர்த்த புருடோத்தமனாகவே கருதப்பட்டேன்.

24

# தொண்டரைக் காத்த தலைவர்

---

தஞ்சை நகருக்கு அருகில் பூண்டி என்னும் சிற்றூர் உள்ளது. அங்கே நல்லதோர் கலைக் கல்லூரி உள்ளது. அது மேற்பட்டப்படிப்பு கல்லூரி. அதை நிறுவியவர் திரு. வீரய்ய வாண்டையார். அவர் என்னிடம் பேரன்பு கொண்டவர்.

அவர் மறைந்ததின் நினைவாக ஓராண்டு கழித்து, அந்த நல்லவரின் சிலையைத் திறக்க ஏற்பாடு செய்தார்கள்.

சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தராக இருந்த என்னை அந்நிகழ்ச்சியில் தலைமை தாங்க அழைத்தார்கள். அப்போது சிலையைத் திறந்து வைப்பது யார் என்பது முடிவாகவில்லை. எனினும் ஒப்புக் கொண்டேன்.

சில வாரங்கள் சென்றன. காமன் வெல்த் பல் கலைக் கழகத்துணை வேந்தர்கள் மாநாடு, ஆப்பி ரிக்காவிலுள்ள, கானாவின் தலைநகராகிய அக்ரா வில் நடந்தது. அம்மாநாட்டிற்குச் சென்றேன். நல்லபடி சென்னைக்குத் திரும்பினேன்.

பூண்டி கல்லூரிக்கு உரியவர்கள் அழைப்போடு வந்தார்கள். அழைப்பினை வாங்கிப் பார்த்தேன். பெருந்தலைவர் காமராசர், வீரய்ய வாண்டையாரின் சிலையைத் திறப்பதாக அழைப்பு அறிவித்தது.

அதை நான் படித்து முடித்ததும், "பெருந் தலைவர் காமராசர் சிலையைத் திறக்கப் போகிறார். அவரோடு நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் தங்க ளுக்கு சங்கடம் ஏற்படுமானால்,—" என்று இழுத் தார்கள்.

"என்ன ? சொல்லுங்கள்", என்று வற்புறுத்தி னேன்.

"நீங்கள் வராமல் நின்றுவிட நினைத்தால், அப்படியே செய்யலாம். காமராசரும் தவறாக நினைக்க மாட்டார், என்றார்கள்.

விழாவில் காமராசர் பங்கு கொள்வது நல்லதே. நான் சொன்ன சொல்லைக் காப்பேன்" என்று பதில் அளித்து அனுப்பினேன்.

தஞ்சையிலிருந்து பெருந்தலைவர் காமராசரும் நானும் ஒரே காரில், விழாவிற்குச் சென்றோம்.

காரில் இருந்த மாவட்டத் தலைவர்களோடு, மது விலக்கை எடுத்ததனால் ஏற்பட்ட விளைவுகளைப் பற்றிக் கேள்விக் கணைகள் தொடுத்துக் கொண்டிருந்தார். அதில் ஒன்று மதுக்கடைகளைத் திறந்ததைப் பற்றி. மதுக்கடைகளைத் திறந்தபின், சாதாரண மக்களின் வீடுகளிலிருந்த பாத்திரங்கள் அடகுக் கடைகளுக்குப் போவதைக் கேட்டு வருந்தினார். அம் மாவட்டத்தில் ஆதி திராவிடர்கள் அவ்வளவு குடிப்பதில்லை என்று கேட்டு மகிழ்ந்தார்.

கல்லூரி விழாவில், காமராசருக்கு வரவேற்பிதழ் வாசித்தளிக்கப்பட்டது. அதில், அவருடைய புகழ் மிக்க அரசியல் சாதனைகள், விடுதலை இயக்கத்தில் அவருக்குரிய பங்கு, பெருமைகள், அப்பழுக்கற்ற பொதுத் தொண்டு, ஆகியவற்றை அழகுத் தமிழில் படம் பிடித்துக் காட்டியிருந்தார்கள்.

பிறகு, அவருக்குக் கொடுத்ததுபோல், எனக்கும் வரவேற்பிதழ் படித்துக் கொடுத்து, பெருமைப் படுத்தினர்.

அதில் காமராசர் முதல் அமைச்சராக இருந்த காலத்திய கல்வி வளர்ச்சியை விவரித்தனர். பகல் உணவுத் திட்டம், சீருடை வழங்கும் விழாக்கள், பள்ளிச் சீரமைப்பு இயக்கம், மேற்பார்வைப் படிப்பு முறை, ஞானத் தந்தை திட்டம் ஆகியவற்றைப் புள்ளி விவரங்களோடு குறிப்பிட்டுப் போற்றினார்கள். அச்சிறப்புகளையெல்லாம் என்மேல் சாத்தினார்கள்.

எனக்குப் பொறுக்கவில்லை. பதவியும் உரிமையும் வேண்டிய அளவு நிதியும் கொடுத்து,என்னைச் செயல்பட வைத்த காமராசருக்கு அல்லவா அப் பெருமைகள் போய்ச் சேரவேண்டும்? உள்ளூரக் குமுறிக் கொண்டிருந்தேன்.

காமராசர், சிலையைத் திறந்து வைத்துப் பேசினார். பூண்டி கல்லூரி, தாழ்த்தப்பட்டவர்களுக்கும் பின்தங்கிய வகுப்பினருக்கும் ஆற்றிவரும் நற்றொண்டினைப் போற்றினார். அத்தகைய கல்லூரிகளைக் கூடுதலாக ஊக்குவிக்க வேண்டுமென்றார். தொடர்ந்து பேசிய காமராசர், நான் பொதுக்கல்வி இயக்குநராயிருந்து ஆற்றிய கல்வித் தொண்டைப் பெரிதும் புகழ்ந்தார். நான், எப்போதும் ஏழை எளியவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப் பட்டவர்களின் கல்வி முன்னேற்றத்தில் தனி அக்கறை கொண்டவன் என்று அடையாளம் காட்டினார். அது, என் உணர்ச்சி ஊற்றைத் தோண்டிவிட்டது.

அடுத்து பேசிய நான், தமிழ்நாட்டில் கல்வி வெள்ளம் பெருக்கெடுத்தோடுவதற்குக் காரணம். காமராசரே என்பதை விரிவாகப் புள்ளி விவரங்களோடு எடுத்துக் காட்டினேன்.

ஒருவரை பெரும் பொறுப்பில் அமர்த்திய பிறகு, அவருக்கு வேண்டிய முழு உரிமையையும் கொடுத்தவர், காமராசர். எனவே அதிகாரியாகிய நான், விழிப்பாயிருந்து பணியுரிந்தேன் என்பதை விளக்கி,

என் நன்றியுணர்வைக் கொட்டினேன். இடை இடையே, அடிக்கடி கைதட்டல். முன்னே நின்று கொண்டு பேசிய நான் காமராசர் முகபாவத்தை அறியவில்லை.

விழா முடிந்து கார் ஏறினோம். கார் நகர்ந்ததும்,

"என்ன இப்படிப் பேசிவிட்டீர்கள்" என்று ஏக்கத்தோடு கேட்டார்.

"தவறான சொற்கள் வந்துவிட்டனவா" என்று திகைப்போடு கேட்டேன்.

"இல்லை ; என்னை ஏன் இவ்வளவு பாராட்டிப் பேசினீர்கள் ?" இது காமராசரின் கவலை.

"உண்மையைத் தானுங்களே சொன்னேன்" என்று பதில் கூறினேன்.

"அது சரி, மற்றவர்களுக்குப் புரியணுமே! என்னைப் பாராட்டினால், மற்றவர்களைக் குறை சொல்வதாக எண்ணிக்கொண்டு, உங்களுக்குத் தொல்லை கொடுப்பார்களே, தொல்லையை ஏன் நீங்களா தேடிக்கொள்ள வேண்டும் என்றார்.

பதில் சொல்லத் தெரியாது திகைத்தேன்.

நான் பூண்டி கல்லூரியில் பேசிய பேச்சு, சுருக்கமாகக்கூட, காங்கிரசுச் செய்தித்தாள்களில், வெளிவரவில்லை. எனக்குப் பெரிய ஏமாற்றம். அரசனை நம்பி கணவனைக் கைவிட்டது போன்ற நிலை.

சில மாதங்கள் பறந்தன. என் பேச்சை இருட்டடிப்புசெய்ததன் காரணத்தை உணர்ந்தேன். நாளிதழ் ஆசிரியர் ஒருவரின் வாயிலாகவே கேள்விப்பட்டேன். விசாரித்துப் பார்த்தேன். தகவல் உறுதியாயிற்று. என்ன காரணம் ?

'நெ. து. சுவின் பேச்சை முழுக்க முழுக்க சுருக்கெழுத்தில் எடுத்தது சரி. அதைப் போட்டால் அவருக்கு இடையூறு வரலாம். அதில் எதையும் போட வேண்டாம்' என்று பெருந்தலைவரே, இரு செய்தித்தாள்களுக்கும் ஆணை பிறப்பித்தாராம். தொண்டனைப் பாதுகாப்பதில் எத்தனை விழிப்பு !

அது காலை, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலிருந்தது ; காமராசரோ காங்கிரஸ் கட்சியின் தலைவர் ; நானோ சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர், வீண் சிரமத்திற்கு என்னை ஆளாக்கிக் கொள்ளக்கூடாது என்பதில் அவருக்கு இந்த விழிப்பு.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எழுபத்து இரண்டாம் ஆண்டு, டிசம்பர் திங்கள், பன்னிரண்டாம் நாள்.

கிளியனூர் வெங்கடகிருஷ்ண ரெட்டியாரின் மகன்கள் இருவருக்கு சென்னை, அண்ணாசாலை 'ஆபட்ஸ்பரி'பங்களாவில் திருமணம் நடைபெற்றது.

காலஞ் சென்ற ரெட்டியார் எனக்கு மிகவும் வேண்டியவர். ஆகவே என் மனைவியும் நானும்

முன்கூட்டியே சென்றோம். முன் வரிசையில் ஒரு கோடியில் உட்கார்ந்திருந்தோம்.

மணவேளையின்போது பெருந்தலைவர் காமராசர் வந்தார். நடுவில் அமர்ந்தார். மணங்கள் நிகழ்ந்தன. மணமக்களை வாழ்த்தும் பொருட்டு காமராசர் மேடைக்குச் சென்றார்.

வழியில் நாங்கள் இருந்தோம். காமராசர் அருகில் வந்ததும், நாங்கள் இருவரும் எழுந்து நின்றோம்.

என்னைத் தோளில் தொட்டு, 'மன்னிக்க வேண்டும்; தவறிப் போச்சு' என்று சொல்லிக் கொண்டே நடந்து விட்டார். ஒன்றும் புரியாமல் திகைத்தோம்.

வாழ்த்திவிட்டு இறங்கிய தலைவர், எங்களை அணுகியதும்;

'அய்யா, பெரிய சொல் சொல்லிவிட்டீர்கள். எங்களுக்கு ஒன்றும் புரியவில்லையே அய்யா' என்றேன்.

'உங்கள் மணி விழாவன்று நான் நேரில் வந்து வாழ்த்தியிருக்க வேண்டும். தவறிவிட்டேன்' என்றார் உணர்ச்சியுடன்.

'அது, தங்கள் தவறு அல்ல அய்யா! நாங்கள் சொல்லியிருக்க வேண்டும். விழா எடுக்காததால் சொல்லவில்லை. எங்களை மன்னியுங்கள். அன்று

மாலை நடந்த பாராட்டுக் கூட்ட ஏற்பாடு முழுவதும் பெரியார் ஏற்பாடுங்க ! அதற்கு அழைக்காததற்கும் மன்னியுங்கள்' என்று கெஞ்சினேன்.

"எல்லாம் கேள்விப்பட்டேன். வரப் புறப்பட்டேன். நீங்கள் நேரில் வாழ்த்துவது, அவருக்குத் தொல்லையாகும் என்று நண்பர்கள் சொன்னார்கள். அதைக் கேட்டு நின்றுவிட்டேன்", என்று விளக்கி விட்டுப் புறப்பட்டார்.

எனக்குப் பின்னால் அமர்ந்து இருந்த பெரியவர் ஒருவர் எழுந்தார்; என் கையைப் பிடித்து பலமாகக் குலுக்கினார்.

'காமராசர் அல்லவா மனிதர். அவர் சொன்னது என் காதில் விழுந்தது. தலைவர் உங்களிடம் வைத்திருக்கும் அன்பே அன்பு. நான் ஓமாந்தூர் இராமசுவாமி ரெட்டியாரின் தம்பி' என்று அறிமுகப் படுத்திக் கொண்டார். என் கண்கள் குளமாயின.

ஒருமுறை, தேவாரண்யத்தில் சீருடை வழங்கு விழா நடந்தது. அந் நிகழ்ச்சியைப் பூங்காத் திடலில் ஏற்பாடு செய்திருந்தார்கள். கல்வி விழா நடந்து முடிந்த பிறகு, பொதுக்கூட்டம். அங்கேயே நடக்க இருந்தது. இரண்டுக்கும் இடையில் அரை மணி நேரம் இருந்தது.

முதல் நிகழ்ச்சிக்கு முதல் அமைச்சர் காமராசர், தொழில் அமைச்சர் ஆர். வெங்கட்ராமன், நான் ஆகிய மூவரும் சென்றிருந்தோம். கல்வி நிகழ்ச்சி

யில் ஆர்வம் பொங்கி வழிந்தது. ஏராளமான கொடை, எனவே, அது முடிய, கால தாமதமாகி விட்டது.

பொதுக்கூட்ட மக்களும் கூடிவிட்டார்கள். ஆகவே, இடைவேளை விடாமல், தொடர்ந்து, பொதுக்கூட்டம், தொடங்கிற்று. திரு. வெங்கட் ராமன் தலைமை வகித்தார்.

அவரைப் பொதுக்கூட்டத்திற்குத் தலைமை தாங்க முன்மொழியும் போதே, நான் மேடையி லிருந்து இறங்க விரைந்தேன். திரு. வெங்கட்ராமன்,

'இயக்குனரே ! சும்மா உட்காருங்க' என்று நாலுபேர் அயரக் கூறினார்.

பளிச்சென்று காமராசர் ஆணை பிறந்தது.

"வேண்டாம், வேண்டாம். சும்மா இருக்கும் போதே, பொறாமையால் அவர்மேல் சேற்றை வாரி இரைக்கிறார்கள். நம்ம பொதுக் கூட்டத்திலும் உட்கார்ந்திருந்தால், கேட்க வேண்டாம். வெறும் வாயை மெல்லுபவர்களுக்கு அவல் கிடைத்து விடும்", என்று காமராசர் சொன்னார். அவையோர் கொல்லென்று சிரித்தனர்.

எவ்வளவு வேண்டிய அதிகாரியும் கட்சித் தொண்டனாகவோ குடும்ப ஊழியனாகவோ செயல் படத் தேவையில்லாத அந்தப் பொற்காலத்தை நினைத்துப் பெருமூச்சு விடுவதைத் தவிர என்ன செய்ய முடியும்.

தலைவருக்கு அழகு, தேவைப்படும்போது, தலையைக் கொடுக்க முன்வருவது. உடன் இருப்பவர்கள் செய்த பிழைகளுக்கும் தானே பழியேற்கத் தயங்காத தலைவரின் தொண்டர்களே, தலைவர்க்கு உயிரைக் கொடுத்தும் உழைப்பார்கள்.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பத்திரண்டாம் ஆண்டில் பொதுத் தேர்தல் நடந்தது. சென்னை சட்டமன்றத்தில் காங்கிரசு கட்சி, தனிப் பெரும்பான்மை பெறவில்லை. தமிழ் நாட்டில் பெரியார் எதிர்ப்பின் விளைவாக, பல இடங்களை இழக்க நேர்ந்தது. அப்போது தமிழ்நாட்டுக் காங்கிரசுக்குத் தலைவர், காமராசர். தேர்தல் முடிவு வெளியானதை அடுத்து தமிழ்நாடு காங்கிரசு செயற் குழு கூட்டம் நடந்தது.

'தமிழ்நாட்டில், காங்கிரசு தோற்றதற்கு யாரையும் குறை கூறவேண்டாம், என்னையே குறை கூறுங்கள். நான் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுகிறேன்' என்று பளிச்சென்று உரைத்ததன் மூலம் வீண் விவாதங்களையும் கசப்புகளையும் முளையிலே கிள்ளி எறிந்து விட்டார்.

ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்தேழில் நடந்த பொதுத் தேர்தலில், தமிழ்நாட்டில் காங்கிரசு பெருந் தோல்வி கண்டது. அந்த அதிர்ச்சியே காமராசருக்குக் கடுமையாக இருந்திருக்கும். அதற்கு மேலும் பாரதத்தின் முடிசூடா மன்னராக வீற்றிருந்த பெரும் நிலையில், காமராசரை, அவரது உறவினர்களே, அழுக்காற்றால் காலை வாரி

விட்டது. வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியது போல் இருந்தது. இத்தகைய கொடுமையைத் தமிழ் மக்கள் வரலாற்றில் மட்டுமே காண முடியும். அதனால் தமிழன் தன் இனத்திற்கே பெருந் தீங்கு செய்துகொண்டான் என்பதைப் புரிந்துகொள்ள நெடுங்காலம் செல்லும்.

தனிப்பட்ட தோல்வி நிலையிலும் எவ்வித தயக்கமும் குழப்பமும் கொள்ளாது.

'ஜனநாயகத்தின் முடிவை ஏற்றுக்கொள் வோம்', என்று இரத்தினச் சுருக்கமாக மொழிந்தார். வெற்றி தோல்வி இரண்டையும் ஒன்றாகப் பாவிக் கும் பெருநிலைஅப்பெரியவருக்கே கைவந்த நிலை.

அரசியல் உலகில் மட்டுமா அவரே பழியை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டது ? இல்லை.

நிர்வாகத் துறையிலும் ஏற்கவேண்டிய 'பழி' யை ஏற்பதற்குத் தயங்கியதில்லை, காமராசர்.

அக்காலத்தில் ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகளை அனுமதிக்கும் உரிமை பொதுக்கல்வி இயக்குனரிட மிருந்தது.

தந்தை பெரியார், திருச்சியில் ஆசிரியப் பயிற் சிப் பள்ளியைத் தொடங்க நினைத்தார். இச்செய்தி முதல் அமைச்சர் காமராசருக்கு எட்டிற்று. நேரே தன்னிடம் மனுவைக் கொடுக்கும்படி சொல்லி அனுப்பினார். விண்ணப்பம் வந்தது.

முதல் அமைச்சரைப் பேட்டி காண அழைக்கப் பட்டேன்.

ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகளை எந்த அடிப் படையில் அனுமதிக்கிறோம் என்பதைப் பற்றிக் கேட்டார்.

'ஒவ்வொரு மாவட்டத்தின் எதிர்காலத் தேவை யையும் தனித்தனியே மதிப்பிடுகிறோம். அதை அடிப்படையாகக் கொண்டு, ஏற்கனவே இருக்கும் பள்ளிகளில் எத்தனை பேரைச் சேர்க்க முடியும் என்பதையும் கழித்துப் பார்த்து, மேற்கொண்டு தேவைப்பட்டால் புதிய பள்ளிகளை அனுமதிப் போம்' என்றேன்.

'ஒவ்வொரு மாவட்டத்திற்கும் போதிய அளவு அனுமதித்து விட்டீர்களா?' இப்படிக் கேட்டார் முதல் அமைச்சர்.

'ஆம்' என்றேன்.

'சரி! பெரியார் ஓர் ஆசிரியப் பயிற்சிப் பள்ளி தொடங்க விரும்புகிறார். அது திருச்சியில் இருக் கும். ஆனாலும் எல்லா மாவட்டங்களிலும் இருந் தும் மாணவர்களைச் சேர்ப்பார். அது மாநில ஆசிரியப் பள்ளியாகவே இருக்கும். அப்படியொன்று அனுமதிப்பதால் சங்கடம் விளையுமா?' என்று விசாரித்தார்.

'அளவான பிரிவுகளைக் கொடுப்பதானால், மாவட்டத்திற்கு அய்ந்தாறு மாணவர்களே பங்கா கும். அதனால் வேலையில்லாத திண்டாட்ட நெருக் கடி ஏற்பட்டு விடாது' என்றேன்.

'சரி ! எனக்கு வந்திருக்கும் விண்ணப்பத்தை உங்களுக்கு அனுப்பி, உத்தரவு கொடுக்கச் சொல்லணும். ஆனால் அதில் ஒரு சங்கடம். உங்கள் விஷயத்தில் ஏற்கனவே நிறையப் பொறாமை. பெரியாருக்குப் பள்ளிக்கூடம் கொடுத்ததைப் பெரிதாக்கி சும்மா எழுதுவான் ; பேசுவான். அரசின் மட்டத்திலேயே முடிவு செய்து, உங்களைச் சிக்கலில் மாட்டாது விட்டு விடட்டுமா ?" என்று கேட்டார்.

'அப்படியே செய்யலாம் ; இது ஒன்று மட்டுமே விதிவிலக்காக இருப்பதானால்.

'இதைக் காட்டி, கல்வித் துறையின் உரிமையைப் பறித்துக் கொள்ளாமல் பார்த்துக் கொள்ளுங்கள்' என்று வேண்டினேன்.

'ஆகட்டும், அதிகாரத்தை எடுத்துக் கொள்ள மாட்டோம்', என்றார். சொன்ன சொல்லைக் காப்பாற்றினார்.

# 25

# துயர் கண்டு துடித்தவர்

காமராசர், என் மணிவிழாவின்போது, நேரில் வந்து வாழ்த்தாமைக்காக வேதனைப்பட்டது நடிப்பு அல்ல. உண்மையான உணர்வு.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அய்ம்பத்தொன்பதாம் ஆண்டு செப்டம்பர் எட்டாம்நாள் மாலை, என் ஒரே மகன் கா. சு. திருவள்ளுவன் திடீரென மறைந்தான். இதைக் கேள்விப்பட்ட முதல் அமைச்சர் காமராசர் என் வீட்டிற்கு விரைந்து வந்தார். என் கையைப் பிடித்து ஆறுதல் கூறினார். உள்ளே வந்து, திருவள்ளுவனது உடலைக் கண்டு கண்ணீர் சிந்தினார். என் மனைவிக்கு ஆறுதல் கூறினார்.

அடுத்து, பலமாதங்கள் 'புத்திரசோகம் பொல்லாது. அம்மா தேறி வருகிறார்களா ?எங்கேயாவது அழைத்துப் போய்வரக் கூடாதா ?' என்று என்னைப் பார்க்கிற போதெல்லாம் கேட்பார்.

அதுவரையில் என் மனைவியைப் பற்றி ஒரு சொல்லும் கேட்டிராத அந்தத் துறவி, அச்சோக நிகழ்ச்சிக்குப் பிறகு, ஒவ்வொரு முறையும் என்னிடம் கேட்கும் முதல் கேள்வி, என் மனைவியின் ஏக்கத்தைப்பற்றியே இருந்தது.

எந்தத் திருமண வீட்டில் கண்டாலும், என் மனைவியை விசாரிக்காமல் போக மாட்டார். அவ்வளவு இரக்கம் காமராசருக்கு. மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, என் தந்தை திடீரென, நெய்யாடு பாக்கம் என்னும் சிற்றூரில் இறந்து விட்டார். செய்தி கேட்டதும்,யாருக்கும் சொல்லாமல் விரைந்து சென்றேன். சில மணிகளுக்குள் காமராசருக்கு எப்படியோ செய்தி கிடைத்து விட்டது. வீட்டுக்குப் 'போன்' போட்டார். நான் இல்லை என்று தெரிந்து கொண்டார்.

சென்னைக்குத் திரும்பி வந்ததும் தகவல் கொடுக்க வேண்டுமென்று என் வீட்டில் உள்ள வேலைக்காரரிடம் சொன்னாராம்.

மூன்றாம் நாள் சென்னைக்கு வந்தேன். செய்தி கேட்டேன். தகவல் கொடுத்தேன். உடனே புறப்பட்டு வந்துவிட்டார், முதல் அமைச்சர் காமராசர். அரைமணி நேரம் பேசி, ஆறுதல் கூறினார்.

அடுத்து பல சந்திப்புகளின் போது, தந்தையின் மறைவுக்கு ஆறுதல் சொன்னார்.

என்னோடு வாழ்ந்த என் மாமியார் திருமதி

தங்கம்மாள் மறைவின்போதும் நேரில் வந்து ஆறு தல் கூறினார்.

அந்தக் காலத்தில் அரசின் அலுவலர்களாகிய நாங்கள் நான்காம் தரக் குடிமக்கள் அல்ல. சமமாக மதிக்கப்பட்ட மனிதர்கள்.

என்மீது குறிப்பாக இந்த அளவு பாச உணர் வை பெருந்தலைவர் காமராசர் காட்டுவதற்கு அடிப் படையான காரணம், அவருடைய சீரிய கல்விக் கொள்கையினை ஏழை எளியவர்களுக்கும், தாழ்த் தப்பட்டவர்களுக்கும், பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் தாராளமாக கல்வி வழங்கவேண்டும் என்ற அவரின் அரிய எண்ணத்தை செயல்படுத்தியதுதான்.

# 26

# தெளிந்த காட்சியர்

அறுபத்து இரண்டாம் ஆண்டு, பெரியதோர் கருத்துப் போராட்டம் நடந்தது.

சிற்றூர்ப் பள்ளிகளை நடத்திவந்த மாவட்ட ஆட்சிக் குழுக்கள் எடுபட்டன. ஊராட்சி ஒன்றியங்களிடம் தொடக்கப் பள்ளிகள் ஒப்புவிக்கப்பட்டன.

தொடக்கப்பள்ளிகளை ஆய்வு செய்யும் ஆய்வாளர்களை ஊராட்சி ஒன்றியங்களிடம் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவர வேண்டுமென்பது, தில்லியிலிருந்து வந்த பரிந்துரை. மாநிலங்கள் பலவும் உடனடியாக அதை ஏற்றுக்கொண்டு நடைமுறைப் படுத்தின. சென்னை மாநிலம் அப் பரிந்துரையை ஏற்கவில்லை.

வேறு மாநிலங்களில் நடக்காத அரிய திட்டங்களையெல்லாம் சிறப்பாக நடத்தி வந்த தமிழ்நாட்டு ஆய்வாளர்கள், என்ன ஆகுமோ என்று அஞ்சினார்கள்.

ஆய்வாளர்களின் மாநில மாநாட்டைத் திருச்சியில் கூட்டினோம். அப்போதைய கல்வி அமைச்சரான மாண்புமிகு பக்தவத்சலமும் மாண்புமிகு முதல் அமைச்சர் காமராசரும் கலந்து கொண்டார்கள்.

வரவேற்புரையின்போது ஆய்வாளர்கள் அரசின் நேரடி கட்டுப்பாட்டில் இருக்க விரும்புவதாகவும் ஊராட்சி ஒன்றியத்திடம் தள்ளிவிட வேண்டாமென்றும் வேண்டப்பட்டது. முதல் அமைச்சர் காமராசர் தமது உரையில்,

"ஆய்வாளர்கள் தணிக்கை செய்ய வேண்டியவர்கள். ஒன்றியங்கள் பள்ளிக்கூடத்தை நிர்வகிக்க வேண்டியவை.

எங்கள் கணக்கைப் பார்க்கும் அக்கௌண்ட்டண்ட் ஜெனரல், எங்கள் நிர்வாகத்தின் கீழ் இருந்தால், கோடிக் கணக்கில் கோட்டை விடும் வரை, தவறு தெரியாது. அதேபோல், ஆய்வாளர்கள் நிர்வாகம் செய்யும் ஒன்றியங்களின் கட்டுப்பாட்டுக்குள் அடங்கி விட்டால், மெய்யான தணிக்கை நடக்காது. ஆகவே நான் இருக்கும்வரை, ஆய்வாளர்களை ஒன்றியங்களிடம் விட்டுவிட மாட்டேன்" என்று கூறி எல்லோர் வயிற்றிலும் பால் ஊற்றினார்.

சில ஆண்டுகளுக்குப் பிறகு, சென்னை மாநிலம் செய்ததே சரியென்பது தில்லிக்கு விளங்கிற்று.

# 27

# கடுமையான பத்தியம்

காமராசர் என்னும் மருத்துவர், கடுமையான பத்தியம் வைத்திருந்தார். அவரிடம் ஒன்பது ஆண்டுகாலம் ஊழியஞ்செய்தேன். அந்த நீண்ட காலத்தில் மணிவிழா ஆண்டின்போது மட்டுமே, பிறந்தநாள் வாழ்த்துக் கூறிவிட்டு வந்தேன். அதற்கு முன்பும் அப்படிச் செய்யவிடவில்லை. பிறந்தநாள் கொண்டாடுவதில் போட்டிப் பந்தயம் வைக்காத காலம் அது. பிறந்தநாள் வாழ்த்துச் சொல்லுகிறேன் என்னும் சாக்கில், எந்த அதிகாரியும் அவருக்கு வேண்டியவராகிவிட முடியாது. அவ்வளவு நெருப்பாக இருந்தார், காமராசர்.

காமராசரின் மணி விழாவையொட்டி, பல பாராட்டுக் கூட்டங்கள் நடந்தன. சென்னையில் ஏற்பாடு செய்த, அத்தகைய கூட்டமொன்றில் சிறப்புரையாற்ற என்னை அழைத்தார்கள். நானும் ஒப்புக்கொண்டேன். முதல் அமைச்சர் காமராசருக்கு இத்தகவல் எட்டிற்று.

அரசின் ஊழியனாக இருக்கும் நான், தமது பிறந்தநாள் கூட்டத்தில் பேசவேண்டாமென்று, என்னிடம் தொலைபேசியில் ஆணையிட்டார். முழங்குவதற்கு வாய்ப்பை இழந்து தவித்தேன்.

ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்தொன்ப தாம் ஆண்டு ஆகஸ்ட் முதல் நாள், சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தரானேன். அடுத் தாண்டு வந்த காமராசரின் பிறந்தநாள் சிறப்பு மல ருக்கு கட்டுரை எழுத வேண்டப் பட்டேன். சரியான வாய்ப்பு என்று மகிழ்ந்தேன். மகிழ்ச்சிக் கும் எனக்கும் பொருத்தம் இல்லை. இதைக் கேள்விப் பட்ட காமராசர் சும்மா இருக்கக் கூடாதா ? என் நிர் வாகத்தில் என்றும் தலையிடாத அவர், இதில் தலை யிட்டார். நண்பர் திரு. எம். பி. தாமோதரன் மூலம் சொல்லி அனுப்பி எழுதுவதைத் தடுத்துவிட்டார். எப்படியிருக்கும் எனக்கு? அவருக்குத்தான் புகழ் வேண்டாம். என்னை நாலு பேருக்குத் தெரியவேண் டாமா?

அடுத்தடுத்து ஒவ்வோர் ஆண்டும் காமராச ரைப்பற்றி கட்டுரை எழுதும்படி அழைப்பு வந்தது. தடுப்பும் வந்தது.

எழுபத்து நான்காம் ஆண்டு பிறந்த விழா வன்று, கல்வி வள்ளல் காமராசரைக் கண்டு வணங்க அனுமதி கோரினேன்.

'அவர் என்னைக் காண வந்தால் தவறாகக் கருதி, அவருக்குத் தொல்லை கொடுப்பார்கள். வர வேண்டாம்' என்று தடுத்துவிட்டார். கடைசி

நேரத்தில், நண்பர் எம். பி. தாமோதரன் மூலம். வாழ்த்துச் செய்தி அனுப்பிவைத்தேன்.

அது இதோ :

பெரும் மதிப்பிற்கும் பேரன்பிற்கும் உரிய அய்யா அவர்களுக்கு,

நன்றி கலந்த வணக்கம் பல. உளமார்ந்த வாழ்த்துகள் பல.

"இந்திய விடுதலை வீரராக, சிறைப்பறவையாக, தன்னேரிலாத தலைவராக, ஏழை பங்காளராக, 'சென்னையைப் பார்த்து பின்பற்று' என்று பிரதமர் நேருவே, அன்று பாராட்டும் அளவிற்கு, சீரிய முதல் அமைச்சராக, அகில இந்தியப் பெருந்தலைவராக, இன்று காந்தியடிகளின் வாரிசாக விளங்கும் தங்களுக்குப் பிறந்தநாள் வாழ்த்துக் கூறுவதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

தாங்கள், சென்னை மாநில முதல் அமைச்சராக விளங்கியபோது, முன் அறியாத, வயது குறைந்த என்னைப் பொதுக்கல்வி இயக்குனர் ஆக்கினீர்கள். அப்பேருதவிக்கே நன்றி சொல்ல, சொற்கள் காணாது தவித்த எனக்கு, எல்லா உரிமைகளும் தந்து, பாதுகாத்துப் பயன்படுத்தி, சிறப்படையச் செய்தீர்கள். இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகும் தங்கள் தலைமையில் தொண்டாற்றிய அப்பொற் காலத்தை நினைக்க இனிக்கிறது ; நம்பிக்கை பிறக்கிறது.

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக, எழுத்தறியாமையில் மூழ்கிக் கிடந்த தமிழ்ச் சமுதாயத்தின் கல்விக் கண்ணைத் திறந்து, கடல்மடை திறந்தாற் போல், கல்வி வெள்ளத்தைப் பெருக்கி புகழ் பெற்றீர்கள். தமிழர்களின் நீண்ட வரலாற்றில் முதன் முதலாக நிகழ்ந்த அப் பெரும் பணியில், எல்லோர்க்கும் கல்வியளிக்கும் நற்பணியில், என்னை ஈடுபடுத்தி, என்னையும் மனிதனாக்கிய, கர்மவீரராகிய தங்களுக்கு நான் என்ன கைம்மாறுசெய்யவல்லேன்?

ஏழைக்காகவே பாடுபடும் தங்களிடம் கற்ற தொண்டு உணர்வை, இன்றும் மங்கவிடாது, நான் போராடிக் கொண்டிருப்பதே, தங்களுக்கு எனது நன்றிக் காணிக்கை.

எத்தனை ஆண்டுகளுக்கு முன்போ, தொண்டனாயிருந்த எனக்கு, அண்மையில் சேர்ந்த மனக்குறைக்கு, தாங்கள் மாமருந்தாக உதவியதை எண்ணும்தோறும், இமயமென நிற்கும் தங்கள் நம்பிக்கைக்குத் தொடர்ந்து பாத்திரமாக இருக்க உறுதி கொள்ளுகிறேன்.

தாங்கள் பல்லாண்டு வாழ்ந்து, வறுமையற்ற, வளமிக்க, சமதர்ம இந்தியாவைக் கண்டு மகிழ, நன்றியுணர்வோடு. வாழ்த்துகிறேன்.

அன்புள்ள

15-7-74 நெ. து. சுந்தரவடிவேலு

இவ்வாண்டும் அனுமதி கிடைக்கவில்லை. வாழ்த்தும் அனுப்பத் தவறிவிட்டேன்.

இவ்வாண்டு செப்டம்பர் ஏழாம்நாள் இரவு டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலையில் உள்ள இராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் மாப்பிள்ளை அழைப்பிற்குச் சென்றிருந்தேன். காமராசரும் வந்தார். திரு. வி. கே இராமசாமி முதலியாரும் நானும் பெருந்தலைவருக்குப் பின்னால் உட்கார்ந்திருந்தோம்.

காமராசர் என்பக்கம் திரும்பி

"நல்லா இருக்கிறீங்களா ?" என்று விசாரித்தார்

"இருக்கிறேனுங்க" என்றேன். திரு முதலியார் தலையிட்டு,

"சுறுசுறுப்பாக இருந்தவரை, சும்மா உட்கார வைத்துவிட்டால், எவ்வளவு வேதனையாயிருக்கும்' என்று விமர்சனம் செய்தார்.

'ஆமாம் ! ஆமாம் ! எனக்கே புரியலை, இப்படிப்பட்டவரை ஏன் வீணாக்குகிறார்களென்று. இவங்களுக்கு பிடிக்கலை. வேறு ஒருத்தர் ஏற்றுக் கொள்கிறேன் என்றால் அதற்கும் ஆட்சேபணை. இந்தச் சர்க்காருக்கு ஏன் இவரைப் புடிக்கலே என்பது எனக்கு விளங்கவே இல்லை' என்று வேதனையோடு கூறினார். அதுவே, நான் அவரிடமிருந்து கேட்ட கடைசி சொற்கள். அப்புறம் எங்கேயும் சந்திக்கவில்லை. இராஜாஜி மண்டபத்தில் காணும் கொடுங்காட்சி இவ்வளவு விரைவில் இருக்குமென்று கனவில்கூட நினைக்கவில்லையே.

28

# அறத்தினைக் காத்த சான்றோர்

செங்கற்பட்டு மாவட்டத்தில் பூவிருந்தவல்லி என்று ஓர் ஊர் இருக்கிறது. அங்கே, குருடர் பள்ளி யொன்று நடக்கிறது. அதை நடத்துவது தமிழ் நாட்டு அரசு. ஆனால் தொடங்கியது அரசு அல்ல.

ஊனமுற்று அவதிப்படுவோர்பால் இரக்கம் கொண்ட நல்லவர்கள் சிலர், அநேகமாக வெள்ளை யர்கள்—தனியார் துறையில், அப்பள்ளியைத் தொடங்கினார்கள். பரந்த திடலிலே, பெரிய கட்ட டம் அமைத்தார்கள். வேண்டிய வசதிகளைச் செய்தார்கள். சில ஆண்டுகள், தனியார் நிர்வாகத் தில் நடத்தினார்கள்.

பிறகு, அரசினிடம் ஒப்படைத்தார்கள். கால காலத்திற்கும் அரசு, அதை நடத்த வேண்டும் என் பது உடன்படிக்கை. உடன்படிக்கையின்படி குருடர் பள்ளியை ஒழுங்காக நடத்தி வந்தது கல்வித்துறை.

திடீரென, பொல்லாத பார்வை விழுந்தது. மக்கள் நல்வாழ்வுத் துறை, அக்கட்டடத்தைக் காலி செய்து தங்களிடம் கொடுத்து விடும்படி கேட்டது. ஏன் கேட்டது ?

கட்டடமும் பெரியது. அதைச் சுற்றிலும் பரந்த வெளியிருக்கிறது. அது, தங்களிடம் வந்து விட்டால் உடனடியாக, மக்கள் நல்வாழ்வு பற்றிய 'ஆராய்ச்சி செய்முறை' திட்டத்தைத் தொடங்க, உதவியாக யிருக்கும். அதற்கு வெளிநாட்டு உதவியும் நிறை யக் கிடைக்கும். அதனால் ஆயிரக்கணக்கானவர் களின் உடல் நலத்தைப் பேணலாம்.

மாணவ மாணவியர் எண்ணிக்கை குறைவாக உள்ள இக் குருடர் பள்ளியை வேறெங்காவது மாற்றிக் கொள்ளலாம். தேவைப்பட்டால், மெதுவாக அடக்கமான கட்டடத்தைப் புதிதாகக் கட்டிக் கொள்ளலாம்.

இது மக்கள் நல்வாழ்வுத் துறையின் வாதம். அத் துறையின் வேண்டுகோள் எனக்கு அனுப்பி வைக்கப்பட்டது. என் உடன்பாட்டைக் கேட்டார் கள்.

நான் உடன்படவில்லை. குருடர்பள்ளி என் சொத்தல்ல என்பது எனக்குத் தெரியும். நான் கொடுக்கமறுத்தால், அதுவே இறுதி முடிவல்ல என்பதை உணர்ந்தேன். மறுப்பதன்மூலம் செல்வாக் குடைய அமைச்சரின் பகையைத் தேடிக் கொள் வேன் என்பதை அறிவேன். அதிகாரிகள் ஆத்திர

மும் பொல்லாதது என்பது எனக்குத் தெரியும். ஆயி னும் உணர்ந்ததை உணர்ந்தபடி உரைக்கவே என்னைப் பழக்கி விட்டார்கள் பல பெரியவர்கள். அதனால் ஏற்பட்ட கோளாறு என்ன ?

குருடர் பள்ளியை வேறு இடத்திற்கு மாற்றக் கூடாது. அக்கட்டடத்தை வேறொன்றிற்குப் பயன்படுத்தவிடக் கூடாது. புதிய திட்டத்தைத் தொடங்குபவர்கள் அவர்களுடைய நிதியிலிருந்து புதிய கட்டடத்தைக் கட்டிக் கொள்ளட்டும். இருப்பதைப் பறிப்பது முறையல்ல. இவ்வாறு, விரிவாக தக்க காரணங்களைக் காட்டி எழுதி அனுப்பினேன்.

கல்வி அமைச்சர், சி. சுப்ரமணியத்திற்கு நான் சொல்வது சரியென்று பட்டது. கேட்பதோ மற்றொரு அமைச்சர். எனவே, விவகாரம் முதல் அமைச்சர் காமராசர் முன் வைக்கப்பட்டது.

முதல் அமைச்சர், உரிய அமைச்சர்கள் இருவரையும் உரிய அதிகாரிகளையும் அழைத்தார்.

“குருடர் பள்ளிக்கட்டடத்தை எப்போது கட்டினோம்” என்று கேட்டார்.

“உங்களுக்குத் தெரியுமா ?” என்று செயலர் என்னைக் கேட்டார்.

“அரசு கட்டிய கட்டடமல்ல அது. தனியார் கட்டினார்கள். குருடர் பள்ளியை நிறுவினார்கள், பல்லாண்டு நடத்தினார்கள். அவ்வெள்ளையர், வெளியேறியபோது, அரசிடம் ஒப்புவித்து விட்டால்

பணமுடையும் இராது, வேறு தீங்கும் வராது, என்று எண்ணி, மாநில அரசிடம் கொடுத்து விட்டார்கள். அரசின் சார்பில், கல்வித்துறை பள்ளியை நடத்தி வருகிறது. அவ்வளவே'. என்றேன்.

“மற்றவர்களிடம் நம்பிக்கை வைக்காமல், அரசிடம் இந்தியர்கள் நடத்தப்போகும் அரசிடம், நம்பி கொடுத்துவிட்டுப் போயிருக்கிறார்கள். நடத்தாமல் போனால்தான் நம்பிக்கைத் துரோகம் என்பதல்ல. அவங்க கொடுத்த இடத்தில் குறை ஏதும் ஏற்படாத போது, அதை வேறு இடத்திற்கு மாற்றுவதும் நம்பிக்கை துரோகம்.

“அரசைப் போன்ற பொது அமைப்பிடம் கொடுத்த அறக்கட்டளைகூட அப்படியே நடக்கலே என்றால், எந்த நம்பிக்கையின்மேல், பின் சந்ததி அறக்கட்டளை நிறுவ முன் வரும்? சாமர்த்தியமான பேச்சு நம்பிக்கையைக் காப்பாற்றாது. மெய்யா, நாணமா நடக்க வேணும். அப்பதான் நாலுபேர் நம்புவார்கள்.

‘குருடர் பள்ளியை வேறு இடத்திற்கு மாற்றாதீர்கள். அங்கேயே நடத்துங்கள்” என்று முடிவு கூறினார் முதல் அமைச்சர் காமராசர்.

காமராசரின் அறஉணர்ச்சி என்னைக் காப்பாற்றியது.

## 29

# பார் புகழ்பெற்ற தலைவர்

கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டோடு சேர்ந்த ஆண்டு எது? ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அய்ம்பத்தாறாம் ஆண்டு ஆகும்.

கன்னியாகுமரியில், ஏற்கனவே அய்ந்தாம் வகுப்பு வரை கட்டாய இலவசக் கல்விமுறை நடைமுறையில் இருந்தது. பள்ளிகளில் கஞ்சி கொடுக்கும் ஏற்பாடும் இருந்தது. அங்கே பல தொடக்கப் பள்ளிகள், அரசின் நிதி உதவியைப் பெறும் தனியார் பள்ளிகள்.

இவற்றை, சிக்கல் இல்லாமல், சென்னை மாநில கல்வித்துறை இயக்கவேண்டும். அது பற்றிய ஆலோசனைகளைக் கேட்பதற்காக, முன்னேற்பாட்டின்படி, திருவனந்தபுரம் சென்றேன். அம்மாநிலத்தின் பொதுக்கல்வி இயக்குனரான திரு. சுந்தரராசுலு நாயுடுவோடு விவரமாகப் பேசி உரிய

நுட்பங்களைத் தெரிந்து கொண்டேன். நாயுடு, உண்மையிலேயே, உதவியாக இருந்தார்.

அதோடு, திருவாங்கூர் மன்னரை, நான் பேட்டி காண எளிதில் ஏற்பாடு செய்து கொடுத்தார்.

குறித்த நேரத்தில், காட்சிக்கு எளியவராக விளங்கிய மன்னர் என்னை வரவேற்றார். கலகலப்பாகவும் இனிமையாகவும் பேசினார். என்னென்ன தகவல்களைத் திரட்டினேன் என்பதையும் விசாரித்தார்.

'கண்ணினைக் காக்கும் இமைபோல், நெற்களஞ்சியமாகிய நாஞ்சில் நாட்டைக் காத்து வந்து, அருள் புரிந்தீர்கள். எங்களிடம் வந்த பிறகு, அரச அருள்பார்வை விழுவதற்கு வாய்ப்பு இராது. ஏதோ மக்களாட்சியில் எங்களால் முடிந்தவரை பாதுகாக்கிறோம்' என்று அடக்கமாகக் கூறினேன்.

மன்னர் இளநகை புரிந்தார்.

'என் உள்ளத்தில் எவ்வித கிலேசமும் இல்லை.

'சென்னை மாநில முதல் அமைச்சர், மக்கள் நாடியறிந்த தலைவர். அதோடு, ஏழை பங்காளர். காமராசரின் பார்வையில் நாஞ்சில் நாடு மேலும் செழித்து வளரும். இது உறுதி. எனவே, சஞ்சலம் ஏதுமின்றி அதை தமிழ்நாட்டோடு சேர்க்கப் போகிறோம்' என்று உளமார உரைத்தார். காமராசரின் தொண்டர் அணியில் இருப்பதன் சிறப்பை அப்போது உணர்ந்தேன். தொடர்ந்து உணர்கிறேன்.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபத்தோராம் ஆண்டு, இந்திய அரசு, கல்விக் குழுவொன்றை சோவியத் நாட்டிற்கு அனுப்பிவைத்தது. மூவரடங்கிய அக்குழுவில் என்னையும் சேர்த்திருந்தார்கள்.

தில்லியிலிருந்து விமானம் மூலம் புறப்பட்டோம். முதலில் டாஸ்கண்டில் இறங்கி சில நாட்கள் தங்கினோம்.

டாஸ்கண்ட் உயர் கல்வி நிலையத்தைக் காணச் சென்றோம். இந்தியக் குழுவின் தலைவராகிய திரு. இராஜாராய்சிங், என்னையும் அன்றைய பஞ்சாப் மாநிலத்தின் பொதுக்கல்வி இயக்குனராக இருந்த செல்வி சரளாகன்னாவையும் அங்குள்ள பேராசிரியர்களுக்கு அறிமுகப்படுத்தினார்.

சென்னை மாநிலத்தின் பொதுக்கல்வி இயக்குனராகிய நெ. து. சுந்தரவடிவேலு,என்று என்னை அறிமுகப்படுத்தியபோது, ஒரு விஞ்ஞானப் பேராசிரியர் சில சொற்கள் சொல்ல விரும்பினார்.

'நான் சென்னைக்குச் சென்று சிலநாள் தங்கி விட்டு வந்திருக்கிறேன். அம்மாநிலத்தின் கல்வி வளர்ச்சி போற்றுதற்குரியதாக இருக்கிறது.

'கல்விபற்றி திட்டமிடுப்வர்கள் அய்ந்து, பத்தாண்டுகளை நினைத்துக்கொண்டு, திட்டமிடக் கூடாது. முப்பது நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகு, சமுதாயம் எப்படி இருக்குமென்று எண்ணிப்பார்த்து அதற்கு ஏற்றபடி திட்டம் தீட்டவேண்டும்.

'முப்பது, நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகு, இருக்கப்போகும் இந்தியாவிற்கு எட்டாவது வகுப் புப் படிப்பு போதாது. அதை உங்கள் மாநிலம் உணர்ந்திருக்கிறது. சரியான தொலைநோக்கு உங்கள் முதல் அமைச்சருக்கு—காமராசருக்கு— இருக்கிறது. போக்கும் சரியாக இருக்கிறது. ஒவ் வோர் திட்ட காலத்திலும் எல்லா நிலைக்கல்வியை யும் தூண்டி ஊக்குவிப்பது, சரியான வளர்ச்சிப் போக்கல்ல. அத்தகைய தவற்றைச் சென்னை மாநிலம் செய்யவில்லை.

'இரண்டாம் அயந்தாண்டு திட்டத்தில் அய்ந் தாம் வகுப்புவரை எல்லோருக்கும் கல்வி கொடுப்ப தில் தனி முயற்சி. மூன்றாம் அய்ந்தாண்டு திட்டத் தின் தொடக்கத்தில் நடுநிலைப் பள்ளி வளர்ச்சியில் தனி அக்கறை ; பிற்பகுதியில் உயர்நிலைப் பள்ளி கல்வியை விரைந்து வளர்ப்பது.

'நான்காம் அய்ந்தாண்டு திட்டத்தின்போது கல்லூரிக் கல்வியையும் பல்கலைக் கழகக் கல்வி யையும் பெரும் அளவு வளர்ப்பது என்று வரிசைப் படுத்தியிருப்பது போற்றுதற்குரியது.

சோவியத் நாட்டின் தந்தை, மாமேதை லெனின், முதலில் கல்வி ஒளியையும் மின்னொளி யையும் ஊர்தோறும் கொண்டுபோகத் திட்டமிட் டார். அதுபோலவே, சென்னை மாநிலத்திலும் நடக்கிறது. உங்கள் வெற்றிக்கு நல்வாழ்த்துகள், என்றார். பூரித்துப் போனேன்.

# 30

# புகழ் வேண்டாதவர்

நான் புது தில்லியில், இந்திய அரசின் கல்வி அமைச்சரகத்தில் இணைக்கல்வி ஆலோசகராக இருந்தேன். அப்போது வட இந்திய அதிகாரி ஒருவர் என் அலுவலக அறைக்கு வந்தார். ஆங்கில நாளிதழ் ஒன்றைக் கையில் கொண்டு வந்தார். அதில், எங்கோ ஒரு மூலையில் பொடி எழுத்தில் போடப்பட்டிருந்த செய்தியொன்றைக் காட்டினார்.

'இதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள் ?' என்று கேட்டார்.

'இந்த கௌரவப் பட்டத்தை அவர் ஏற்றுக் கொள்ள மாட்டார்' என்றேன்.

"ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள் ? தகுதியில் லாமல் இதை கொடுத்துவிடவில்லை.

"பதினான்கு ஆயிரம் தொடக்கப் பள்ளிகளை ஏற்படுத்தினார்;ஆயிரத்து அய்ந் நூறுக்கு மேல் உயர்

நிலைப் பள்ளிகளைத் திறந்தார். தொடக்கப் பள்ளி களில் கூடுதலாக முப்பத்து இரண்டு இலட்சம் பிள்ளைகளைச் சேரவைத்து விட்டார். ஒரு நூற் றாண்டின் வளர்ச்சியைப் போல் இரு மடங்கு வளர்ச்சியை ஒன்பது ஆண்டில் செய்து காட்டி னார். முப்பதாயிரம் பள்ளிகளிலும் பகல் உணவுப் போடச் செய்தார். பரிசுகளையும் பட்டங்களையும் எதிர்பார்த்து செய்ததல்ல அவர் செய்த் சீரிய கல்வித் தொண்டு. அவருடைய கல்வித் தொண்டிற்கு எத்த னையோ விருதுகளைத் தரலாம்.

"அனைத்திந்திய காங்கிரசுத் தலைவராக விளங்கி, இரு பெரும் நெருக்கடிகளிலும் இந்தியப் பிரதமரை எளிதில் உருவாக்கிய சிறப்பு அவருடை யது. அவருடைய கல்விச் சாதனைகளோடு இதை யும் எண்ணியே, அவருக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்க முடிவு செய்திருக்கிறார்கள். அதை ஏற்றுக்கொள்ள ஏன் மறுக்கவேண்டும்' என்று திகைத்தார் வட இந்திய அதிகாரி.

'காமராசரை நான் சற்று நெருக்கமாக அறி வேன். அவர் உண்மையான காந்தியவாதி. தாம் செய்து வருகிற நாட்டுத் தொண்டிற்குக் கைம்மா றாக, தமக்கென்று, எதையும் பெற்றுக்கொள்ள மாட்டார்.

'இராஜஸ்தான் பல்கலைக்கழகம், காமராச ருக்கு, கௌரவ டாக்டர் பட்டம் கொடுக்க ஒரு மனதாக முடிவு செய்தது சாலப் பொருத்தம். காமராசர் அதைத் தொடமாட்டார் என்பதே என் மதிப்பீடு' என்றேன்.

என் மதிப்பீடு தவறவில்லை. காமராசர் வலிய வந்த பட்டத்தை வேண்டாமென்று சொல்லிவிட்டார். அப்படியும் ஒருத்தர்.

காமராசரின் பிறந்தநாளை, 'கல்வி நாளாக'க் கொண்டாட வேண்டுமென்று திருவண்ணாமலை நகராட்சி மன்றம் தீர்மானம் நிறைவேற்றியது. அரசினர் அதை எனக்கு அனுப்பி என் கருத்தைக் கேட்டார்கள். அப்போது அவர் அனைத்திந்திய காங்கிரசுத் தலைவர்.

'குடியரசுத் தலைவர் டாக்டர் இராதாகிருஷ்ணன் பிறந்தநாளை ஆசிரியர் நாளாகக் கொண்டாடுகிறோம். நேருவின் பிறந்த நாளை குழந்தைகள் நாளாகக் கொண்டாடுகிறோம். அதே அடிப்படையில் அமைந்துள்ளது இந்த ஆலோசனை. இதைத் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில்தான் சொல்லியிருக்கிறார்கள். தமிழ்நாட்டின் கல்வி வெள்ளத்திற்குப் பொறுப்பு காமராசரே.

'இது நிர்வாக விஷயமல்லாத கொள்கை பற்றியது. எனவே அரசு மட்டத்தில் முடிவு செய்து கொள்ளலாம்' என்று எழுதி அனுப்பினேன்.

காமராசர் அப்படி விழாக் கொண்டாடுவதை விரும்பவில்லை. ஆகவே அதன்மேல் நடவடிக்கை எடுக்கவில்லை என்று பிறகு கேள்விப்பட்டேன்.

# 31

# செருக்கற்ற சீலர்

நான், சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தரான முதலாண்டு, புது தில்லியில் நடந்த கூட்டமொன்றிற்குச் சென்றேன். திரும்புகையில், விமான நிலையத்தில் பெருந்தலைவர் காமராசரைக் கண்டேன். இல்லை, ஏதோ சிந்தனையில் மூழ்கியிருந்த, என்னை அவர் பார்த்துவிட்டார். பெரியவர்கள் சூழ வந்த அவர், என் முன்னே வந்து நின்று

'எப்ப வத்தீங்க ?' என்று கேட்டார்.

எழுந்து, வணங்கிவிட்டு, பதில் கூறினேன். அவர் நகர்ந்தார்.

உரிய நேரத்தில் விமானம் புறப்பட்டது. முதல் வரிசையில் காமராசர் வீற்றிருந்தார். நான், பின்னால் எங்கோ உட்கார்ந்திருந்தேன்.

அரைமணி நேரம் சென்றது. காமராசர் எழுந்து வந்தார். யாரையோ தேடுவதுபோல் தோன்றிற்று.

கடைசியில் என் அருகில் வந்தார். எழுந்து நின்று வணங்கினேன்.

'உட்காருங்கள்' என்று சொல்லிக்கொண்டே, காலியாக இருந்த அடுத்த இடத்தில் அமர்ந்தார். அரைமணிக்குமேல் அளவளாவிப் பேசினார்.

காமராசர் என்னோடு எதைப்பற்றி நீண்ட நேரம் பேசினார் ? கல்வி பற்றியே. உயர்கல்வியைக் கூட ஒடுக்கக் கூடாது. அது நாட்டுப்புற மக்களுக்கும் ஏழை எளியவர்களுக்கும் எளிதாகக் கிடைக்கும்படி செய்யவேண்டும். பெரிய நகரங்களோடு நிற்காமல், வெளியூர் கல்லூரிகளுக்கும் மேற்பட்டப் படிப்பைத் தாராளமாக அனுமதிக்க வேண்டும். இப்படி அறிவுரை கூறினார். பொறுமையாகக் கேட்டேன். பிறகு, 'அய்யா உங்களுக்கு இனிக்கும் செய்தி! இப்போது, கல்லூரிகளில் சேர்ந்து படிப்பவர்களில் நூற்றுக்கு அறுபதுக்கும் மேற்பட்டவர்கள், ஒதுக்கப்பட்ட பின்தங்கிய பிரிவுகளைச் சேர்ந்தவர்கள்' என்றேன்.

'அப்படியா ? மகிழ்ச்சி' என்றார்.

'முதல் தலைமுறை படிக்கவரும் அவர்கள் அறிவில் ஒன்றும் குறைந்தவர்களில்லை. மற்றவர்களைவிடக் கூடுதல் கவனத்தோடு படித்தால், மணிமணியாகத் தேறிவிடுவார்கள். அரசியலில் பெரும் பங்கு கொள்வதால், கவனச் சிதைவு ஏற்படுகிறது. அதை மட்டுப்படுத்திவிட்டால் எவ்வளவோ முன்னேறிவிடுவார்கள்.

'தாங்கள் முதல் அமைச்சராக இருந்த போது தான், ஒரு நல்ல முடிவு எடுக்கப்பட்டது.

'ஆசிரியர்களையும் மாணவர்களையும் தீவிர அரசியல் ஈடுபாட்டிற்கு இழுப்பதில்லை என்ற முக்கிய உடன்படிக்கை ஏற்பட்டது. எதிர்க் கட்சித் தலைவர் அறிஞர் அண்ணா முன்மொழி கிறார் என்பதைப் பொருட்படுத்தாமல் அதை ஒரு மனதாக நிறைவேற்றி வைத்தீர்கள்.

'அப்படிப்பட்ட நிலைமையை மீண்டும் உரு வாக்கினால் பெரும் பயன் விளையும்' என்றேன்.

'பார்க்கலாம்' என்று கூடச் சொல்லவில்லை. புன்முறுவல் பூத்தார். பலன் இருந்தது.

நான் துணைவேந்தராக இருக்கும் வரையில், எதற்காகவும் சென்னைப் பல்கலைக் கழகத்தை நோக்கி, ஊர்வலம் போக வேண்டாமென்று தமது கட்சி மாணவத் தலைவர்களுக்கு ஆணையிட்டார், கல்வி வள்ளல் காமராசர்.

தமிழ்நாட்டு மாணவர்கள், காமராசர் இருந்த வரையில், வன்முறையை விட்டு, நன்முறையில் இயங்கி வந்ததற்குப் பெருங்காரணம், காமராச ருடைய நல்லுரையே. அவர் செய்த கல்வித் தொண்டு என்னே !

# 32

# இமயம் சாய்ந்தது

2-10-1975 அன்று பிற்பகல், பெருந்தலைவர் காமராசர் படுக்கையில் கிடந்து தவிக்காமல், திடீரென உயிர் நீத்தார். அன்று, அண்ணல் காந்தியின் பிறந்தநாள்.

அடுத்தநாள் காலை, பெரியவருக்கு இறுதி வணக்கம் செலுத்த இராஜாஜி மண்டபத்திற்கு நானும் என் மனைவியும் சென்றோம். அன்று மாலை இறுதிப் பயணத்தை ஜெமினி மேம்பாலத்திற்கு அருகில் உள்ள மாடிக் கட்டடமொன்றின் மேல் இருந்து காண வாய்ப்பு கிடைத்தது.

அண்ணாசாலையில் கண்ணுக்கெட்டிய தூரம் மக்கள் கடல். வீடுகளின்மேல் மக்கள்; மரங்களின் மேல் மக்கள்; ஊர் சிறுத்ததோ, மக்கள் பெருத்தனரோ என்று தயங்கும் அளவு பெருங் கூட்டம். ‘பீரங்கி வண்டியில்’ தலைவரின் உடல் சென்றது. அப்போது நல்ல மழை; தெருவை அடைத்துக்

கொண்டு நின்ற மக்களும்—ஆண்களும் பெண் களும்—குழந்தைகளும் முதியவர்களும்—கொட்டும் மழையில் நின்றுகொண்டே, கலையாது, கதறிக் கதறி அழுதார்கள்.

மணம் பரப்பும் மாலைகளுக்கு நடுவே, புகழ் மணம் பரப்பும் காமராசரின் திருமுகத்தை கண் டோம். நெஞ்சு சுக்கு நூறாக வெடித்து விடும்போல் இருந்தது. அதற்கு அஞ்சி குழுமியிருந்த மக்கள் மேல் கவனத்தைத் திருப்பினேன். என் சொல் வேன் ? கூறத்தகாதவன் கூறினான் என்று சொல்லி ஒதுக்கவா !

இருவருடைய ஆங்கிலப் பேச்சு என் காதில் விழுந்தது. "இந்தப் பெரியவரைக் கண்டு வணக்கம் செய்ய எத்தனை கூட்டம்! அடைமழையிலும் முப்பது இலட்சம் மக்கள் கூடி கண்ணீர் வடிக்கிறார் களே !" என்றார் ஒருவர்.

"ஆம் ! காமராசர் முதல் அமைச்சர் பதவியை விட்டு பன்னிரண்டு ஆண்டுகள் பறந்து விட்டன. இருந்தும் முப்பது இலட்சம் மக்கள் வந்து வணக்கம் செலுத்துகிறார்களே ! எதனால் ? கோடி கோடி யாகப் பணத்தை வழங்கியபோதும் காசு தன்னிடம் சேரவிடாத காமராசருடைய நாணயத்திற்குக் காணிக்கை இது" என்று நீண்ட உரையாற்றினார் அடுத்தவர்.

"இப்போது முப்பது இலட்சம் பேர் கூடி பெரு மைப்படுத்துகிறார்கள். அன்று, சொந்த ஊரி

லேயே, தமிழர் யாரும் அடையாத புகழின் சிகரத்தில் வீற்றிருக்கையில், ஆயிரத்து முந்நூறு வாக்குக் குறைவால் தோற்கடித்து, அவமானப் படுத்தி விட்டார்களே! அதுதான் எனக்குப் புரியவில்லை'', என்றார் முதல் இளைஞர்.

"இதில் புரியாத புதிர் ஒன்றும் இல்லை. இதுவே அவர்கள் புத்தி. நாங்கள் நாலாஞ்சாதியாக இருக்கலாமாவென்று வேளைக்கு வேளை கத்துவார்கள். தப்பித்தவறி அவர்களில் ஒருவர் பெரியவராகிவிட்டால், உடனே, பாய்ந்து கடித்து, குதறிவிட்டே மறுவேலை பார்ப்பார்கள். தமிழர்களைத் தவிர வேறுயாரும் காமராசரைப் போன்ற அப்பழுக்கில்லாத பெருந்தலைவரை அவமானப் படுத்த முன்வர மாட்டார்கள். ஒப்பாரி ஒன்றே அவர்களுக்குத் தெரியும். ஆதரிக்க வேண்டியவர்களை, ஆதரிக்க வேண்டியவற்றை தக்க சமயத்தில், ஆதரிக்க மாட்டார்கள். அதனால்தான் அறுபது ஆண்டு தொண்டிற்குப் பிறகும் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்'' என்று இரண்டாவது இளைஞர் படம் பிடித்துக் காட்டினார்.

அரவம் கடித்து துடிக்கும் வேளை ஆயிரம் தேள்கள் ஒன்றாகக் கொட்டினாற்போல் இருந்தது. வெகுண்டு பயன்?

தமிழ்நாட்டுக் கல்வி வளர்ச்சியில் படர்ந்திருந்த பயங்கர இருளை, காமராசர் தன் ஒளி கொண்டு நீக்கி, ஒரு பொற்காலத்தைதயே படைத்தார்.

# கல்வி வள்ளல் காமராசர்

நெ. து. சுந்தரவடிவேலு

அய்ம்பத்தைந்து ஆண்டு காலம் இரவு, பகல் பாராது, பட்டி தொட்டியெல்லாம் வலம் வந்து, மக்களுக்கு உண்மையைக் காட்டி, நாட்டுப் பற்றை ஊட்டியவர் பெருந்தலைவர் காமராசர்.

ஒரு நூறாண்டு காலத்தில் பெற்ற கல்வி வளர்ச்சிக்கு மேலான வளர்ச்சியை எட்டாண்டு காலத்தில் கொடுத்த காமராசரை தந்தை பெரியார், 'கல்விக் கண் கொடுத்த வள்ளல்' என்று போற்றியது சாலப் பொருத்தமாகும்.

அடிமை இந்தியாவிலே, விருதுப்பட்டியிலே, கல்வியறிவில்லாத சாதாரண குடும்பத்தில் பிறந்து, சுவர்களால் அடைக்கப்படாத திறந்த உலகத்தில், மக்கள் பல்கலைக் கழகத்தில் தாமே முயன்று கற்று மேதையானவர் காமராசர்.

எல்லோரும் நன்றாக, ஒன்றாக வாழும் சமத்துவத்திற்காக அயராது பாடுபட்ட பங்காளர் காமராசர்...

நெ. து. சுந்தரவடி

ர்ல் வெ

136 அண்ணாசாலை சென்னை-60